# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

GAZETTEER UNIT
JUN 1965
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS



மாலை 2] சார்வரி ஆவணி
செப்டம்பர் 1960 [மணி 12

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



கீழ்த்திசைக் கலைக் கல்லூரி திறப்புவிழா

# திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,
நுங்கம்பாக்கம் ஹைரோடு,
சென்னை-6

## பொருளடக்கம்

1. அவனன்றி ஓரணுவும் அசையாது
2. திருவான்மியூர்
3. மொக்கணிச்சுரம்
4. ஸ்ரீகிருஷ்ணவதார விசேஷங்கள்
5. திருப்பூவணம்
6. அரிவாட்டாயநாயனர்
7. ஒசூர் சந்திர சூடேசுவரர் கோயில்
8. திருக்களிற்றுப்படியார்
9. நவதிருப்பதியநுபவம்
10. நந்தனூர்திருப்பதி
11. பகவர் யார்?
12. வேய்ங்குழலும் வேறு பாடல்களும்
13. கோயில்களில் திருபணங்கள் நடத்த வேண்டுகோள்
14. விநாயகர் திருவிளையாடல் (சென்ற இதழ் தொடர்ச்சி)
15. நாலாயிரப் பிரபந்தமும் கல்லெழுத்துக்களும்



# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 2] சார்வரி ஆவணி - செப்டம்பர் 1960 [மணி 12


## அவனன்றி ஓரணுவும் அசையாது

சென்ற ஆண்டு பங்குனி மாதம் திருவரங்கத்தில் ஏற்பட்ட விபத்து இதுவரையில் என்றும் நடக்காத, எதிர்பாராத, கனவில்கூட நினைக்க முடியாத வகையில் நடந்ததையும், மறுபடியும் திருப்பணிகள் செய்து மிக விரைவிலேயே மகாசம்ப்ரோக்ட்சணம் நடைபெற்றதும் சரித்திர நிகழ்ச்சியாகி விட்டது. அந்த விபத்து எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்பதைப்பற்றிய விசாரணையில் ஒன்றும் துலங்கவில்லை. அதற்கு யாதொரு தனி நபரும் காரணமாக இருந்திருக்க முடியாது. அறநிலைய அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல அரங்கநாதனே தன்னுடைய திருக்கோயிலில் மகத்தானதோர் மகாசம்ப்ரோக்ட்சணம் நடைபெறுவிக்க வேண்டுமென்று திருவுளங் கொண்டார் என்று ஊகிக்கலாமே தவிர வேறு ஒரு காரணமும் கண்டு பிடிக்கப்படவில்லை. அதே போன்று திருப்பணி முற்றுப்பெற்றதும், மகாசம்ப்ரோக்ட்சணம் மிக விமரிசையாக குறுகிய காலத்துக்குள்ளேயே நடைபெற்றதும் அவனுடைய திருவருளாலேயே யன்றி வேறு யாருடைய முயற்சியாலும் அல்ல என்பதை உலகம் அறியவேண்டும்.

கர்ப்பக்கிரகத்தில் தீ விபத்து நடந்ததை சென்ற ஆண்டு பங்குனித் திருவிழாவில் ஆறும்நாள் காலையில் நித்தியம் சேவைசெய்து கொண்டிருந்த ஒரு பக்தரால் முதல் முதல் தெரிவிக்கப்பட்டது. அவருடைய கூக்குரல் கேட்டு அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் கூடி நெருப்பையணைக்க முயன்றபோது புகை அதிகமாகக் கிளம்பியதால் உள்ளே போக முடியாமல் தவித்தனர். நெருப்பணைக்கும் படைவந்தும் அதிகம் பயன் ஏற்படவில்லை. அரும்பாடுபட்டு மாலையில் ஓரளவு நெருப்பின் வேகமும் புகையும் குறைக்கப்பட்டது. அன்றையதினம் அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். தற்செயலாக திருச்சிராப்பள்ளியிலிருந்து தஞ்சைக்குச் சிலர் சென்று திருச்சிராப்பள்ளி நகரசபைத் தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொள்ளவேண்டுமென்று திருச்சிராப்பள்ளிக்கு அழைத்துவந்தனர். வந்தவுடனேயே திருவரங்கத்தில் நடந்த விபத்தைப்பற்றிக் கேள்விப்பட்டதும் ஸ்ரீரங்கம் திருக்கோயிலுக்கு விரைந்து சென்று பார்வையிட்டார்கள். கர்ப்பக்கிரகத்தில் துரிதமாகச் சுத்தம்செய்து திருப்பணிகளையும் மற்றும் செய்யவேண்டிய காரியங்களையும் உடனடியாக கவனிக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். திருச்சிராப்பள்ளி இன்ஸ்பெக்டர் சென்னைக்குத் தொலைபேசி மூலம் செய்தியைத் தெரிவிக்க முயன்றபோது அன்று விடுமுறை நாளாதலால் சரியான முறையில் தெரிவிக்க முடியவில்லை. டெபுடி கமிஷனருக்கும், கமிஷனருக்கும் தெரிவிப்பதற்காக சென்னைக்கும் சேலம் முகாமிலிருந்த கமிஷனருக்கும் தந்திமூலம் செய்தி யனுப்பினர். சேலத்திலிருந்து ஓசூருக்குப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்த கமிஷனருக்கு

மாலை 5 மணிக்குத் தகவல் கிடைத்தது. உடனே அவர் விரைந்து ஸ்ரீரங்கம் சென்றார். அப்போது இரவு சுமார் 8 மணி. நிர்வாக அதிகாரியும், தர்மகர்த்தர்களும், அர்ச்சகர் மணியம் முதலிய சிப்பந்திகளும் ஒன்றும் தோன்றாமல் திகைத்திருந்தனர். மூலஸ்தானத்திலிருந்த மூர்த்திக்கு அதிக பின்னம் ஒன்றும் ஏற்படவில்லை. நெருப்பை யணைக்கும்போது மேலிருந்த கட்டைகளை அப்புறப் படுத்தும்போது ஒன்றிரண்டு செங்கல்கள் விழுந்ததால் கைவிரல்களிலும் கால்விரல்களிலும் மாத்திரம் சிதைவு ஏற்பட்டிருந்தது. பெருமாள்மேல் பூசப்பெற்றிருந்த தைலக் காப்பு சுமார் 9 அங்குலம் வரை உறைந்திருந்ததால் நெருப்பு நன்றாகப் பற்றிக் கொள்ளவும் புகை மண்டவும் காரணமாக இருந்தது. பெருமாள் திருமேனியில் ஒட்டிக் கொண்டிருந்த தைலக்காப்புப் பட்டைகளை அப்புறப்படுத்திக் கர்ப்பக்கிரகத்தையும் சுத்தம்செய்து பெருமாளுக்கு நேர்மேலே இருந்த பலகைகளைப் புதுப்பித்து பெருமாளுடைய திருமேனிக்கும் திருப்பணிகள் செய்ய வேண்டுவது அத்தியாவசியமாயிற்று. இவற்றிற்கெல்லாம் கொஞ்ச நாட்களாவது வேண்டும் ஆதலால், அதுவரைப் பெருமாளை ஒரு சித்திரத்திலாவது பாலாலயம் செய்து கொண்டால்தான் முடியுமென்று பிரதான அர்ச்சகரும், கோயிலுக்கு ஜாதகம் கணித்துக் கொடுக்க உதவும் நிபுணர்களும் அபிப்பிராயப்பட்டனர். ஒருசிலர் பெருமாளுடைய திருமேனி சுயம்வ்யக்தமானது ஆதலால் கர்ப்பக்கிரகத்திலேயே பூசைகள் நடக்கலாமென்று கருதினர். திருப்பதியில் விமானத் திருப்பணியும் சம்ப்ரோக்ட்சணமும் நடந்த போது மூலஸ்தானத்தில் பூசையும் நடந்ததை உதாரணமாகக் கூறினர். திருப்பதியில் மூலஸ்தான மூர்த்திக்கு ஒருவிதமான பின்னமுமில்லை. விமானத்தில் மாத்திரம்தான் திருப்பணி வேலை நடைபெற்றது. அப்படியும் மூலமூர்த்தியைப் பாலாலயம் செய்து வைத்திருந்தனர். மூலமூர்த்திக்கு தீபாராதனை மாத்திரம் சேவார்த்திகளின் திருப்திக்காகச் செய்யப்பெற்று வந்தது. எல்லோருமாக ஆலோசித்து ஸ்ரீரங்கம் கோயிலில் நடந்த விபத்து மூலமூர்த்தியையும் பாதிக்கப்பட்டதால் பாலாலயம் செய்து மூலஸ்தான திருப்பணிகளைச் செய்வதே முறையென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் மாலையில் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது மூலத்தானத்துக்கும் பூஜைகள் செய்யலாம், உற்சவரை கண்ணாடியறையில் வைத்துக் கொள்ளலாம் என்று சிலர் அமைச்சரிடம் சொன்னதாகத் தெரிந்தது. கமிஷனர் உடனே திருச்சிராப்பள்ளி ஜங்க்ஷனுக்குச் சென்று சென்னைக்குத் திரும்பிக்கொண்டிருந்த அமைச்சரவர்களைச் சந்தித்து எல்லா விபரங்களையும் விளக்கிய பின்னர் அமைச்சரவர்கள், கோயில் அர்ச்சகர் ஜோசியர் ஆலோசனைப்படி பாலாலயம் செய்து திருவிழாவையும் தொடர்ந்து நடத்துவது உசிதம் என்று அபிப்பிராயப் பட்டார்கள். அன்றிரவே ஒரு துணியில் அரங்கநாதரின் படத்தை வரையச்செய்து மூலத்தானத்துக்கு முன்புறம் ஒருசிறு ஆலயம் அமைத்து அதிகாலையில் பாலாலயம் செய்யப் பட்டது. அரங்கநாதன் திருவுருவைப் படம் வரைந்தவர் சிலமணி நேரங்களுக்குள்ளாக இரவிலேயே மிகவும் அழகாக அமைத்துவிட்டார். தன்னால் அத்தகைய படம் பல நாட்கள் முயன்றாலும்கூட வரைய முடியாதென்று அவரே ஒப்புக்கொண்டார். அமைச்சர் அவர்கள் விபத்துக்குப்பின் சில நாட்களுக்குப் பிறகு ஸ்ரீரங்கம் சென்று பாலாலயத்திலிருந்த திருவுருவப் படத்தைப் பார்த்துவிட்டு அர்ச்சனையும் ஆராதனையும் நடந்துகொண்டிருந்தபோது தான் மூலத்தானத்தருகேயிருந்து பெரிய பெருமாளைச் சேவித்ததுபோன்ற உணர்ச்சியோடு இருந்ததாகவும், பின்னர்தான் பாலாலயத்தில்தான் சேவித்ததை உணர்ந்ததாகவும் தெரிவித்தார்கள் என்றால் அத்திருவுருவப்படம் எவ்வளவு நன்றாக அமைந்திருந்தது என்பதை ஊகித்துக்கொள்ளலாம். அன்றிரவு கோயில் கட்டுவதற்கு வேண்டிய செங்கற்கள் எங்கு கிடைக்குமென்று எல்லோரும் திகைத்துக் கொண்டிருந்தபோது நிர்வாக அதிகாரி வீட்டு எதிரிலேயே ஒருவரிடம் செங்கற்கள் கிடைக்குமென்று தெரிந்தது. அதைக் கொண்டுவர வண்டி தேடிக்கொண்டிருந்த போது இப்போது தருமகர்த்தக் குழுத் தலைவராக இருக்கும் திரு. கலியாணசுந்தரம்பிள்ளையவர்கள் அப்போது தருமகர்த்தாவாக இல்லாதிருந்தும் தன் காரிலேயே எடுத்து வருவதாக முன்வந்தார்கள். கோயில் வண்டியிலேயே செங்கற்கள் கொண்டுவரப்பட்டன. அந்த

சிறு கட்டிடத்திற்கு விமானம் வேண்டுமென்று நினைத்தபோது தெப்போற்சவத்திற்காக மரத்தினால் செய்து வர்ணம் தீட்டப் பெற்றிருந்த விமானத்தை எடுத்துவந்து கட்டிடத்தின்மேல் வைத்தபோது அதற்கு அளவு எடுத்துச்செய்ததுபோல் அமைந்திருந்தது. காலையில் பாலாலயம் செய்து முடிந்தபின் வீதி வலம் வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. உற்சவத்தில் அன்று மாத்திரம் தான் உபயநாச்சியாருடன் ஊர்வலத்தில் சேவைசாதிப்பது வழக்கம். முந்தின தினம் விபத்தைப்பற்றிய அறிக்கையில் ஒரு செய்தித்தாளில் ஒரு நாச்சியாரின் விக்கிரகமே உருகிவிட்டதாகச் சொல்லப்பட்டிருந்தது. அதைக் கண்டு பெரும்பாலான மக்கள் பீதியடைந்திருந்தனர். அப்படி யொன்றும் நடைபெறவில்லை என்று சொல்லியும் நம்பாதவர்களும் பெருமானே உபயநாச்சியாருடன் வீதிகளிலேயே காட்சி கொடுத்தபோது கண்ணாரக்கண்டு மகிழ்ந்தனர். விபத்து நடந்த இடத்திலிருந்த சிதைந்த சாமான்களை எடுத்து நன்றாகப் பரிசீலித்துப் பார்த்தபின் சில சிறு பொருள்களைத் தவிர எல்லா நகைகளும் விலையுணர்ந்த பொருள்களுமே அகப்பட்டன.

டெபுடி கமிஷனர் சென்னையில் தந்தி மூலம் தகவல் தெரிந்து அன்றிரவு புறப்பட்டு மறுநாட்காலை வந்து சேர்ந்தார். திருச்சிராப்பள்ளி உதவிக்கமிஷனர் முகாமிலிருந்தவருக்குத் தகவல் தாமதமாகக் கிடைத்து பின்னர் வந்து சேர்ந்தார். திருப்பணியை உடனடியாகத் தொடங்குவதற்காக ஒரு எஞ்சினீயர் வேண்டுமென்று பார்த்தபோது ஸ்ரீரங்கத்திலேயே கால்வாய்களுக்காக தனி எக்சிகியூடிவ் எஞ்சினீயராக இருந்த திரு. சீனிவாசன் என்ற பெயர்கொண்ட வைணவரே வந்து சேர்ந்தார். மராமத்து அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் விபத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு ஸ்ரீரங்கம் வந்தபோது அவர்களிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க திரு. சீனிவாசன் அவர்களை இத்திருப்பணியை நேரிலேயே கவனித்து ஆவனசெய்யும்படி உத்திரவிட்டார்கள். திரு. சீனிவாசன் அவர்கள் முதல்முதலாக மூலத்தான மூர்த்தியின் திருமேனியில் வேலை தொடங்குமுன் மேலே கட்டைகளினால் விட்டம் புதிதாக அமைக்க வேண்டுமென்று கருதினார்கள், அவர்களுடன் அப்போது தருமகர்த்தக் குழுத்தலைவராக இருந்த திரு. மதுசூதனராவ் அவர்கள் தானும் ஒரு எஞ்சினீயரானதால் பூரணமாக ஒத்துழைத்தார்கள். மேல் விட்டத்திற்கு வேண்டிய கட்டைகளின் அளவுகளை எடுத்துக்கொண்டு திருச்சிராப்பள்ளி நகர்பூராவும் தேடிப்பார்த்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. டெபுடி கமிஷனரும் எஞ்சினீயரும் ஸ்ரீரங்கம் நிர்வாக அதிகாரியும் இதைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கும்போது தற்செயலாக பெட்டவாய்த்தலையிலிருந்து வந்திருந்த நிர்வாக அதிகாரி திருமழபாடியில் ஒரு வீரசைவ மடத்தில் இலுப்பை மரக்கட்டைகள் இருப்பதாகத் தெரிவித்தார். உடனே அங்கு சென்று பார்த்தபோது ஸ்ரீரங்கத்துக்கு வேண்டிய அளவுகளோடு இலுப்பைக் கட்டைகள் தயாரிக்கப்பெற்று இருந்தன. மறுநாள் காலையில் அவைகளைத் துண்டுகளாக்கத் திட்டமிட்டிருந்தனர். மறுநாள் சென்றிருந்தால் அவைகள் துண்டங்கள் ஆக்கப்பெற்று ஸ்ரீரங்கத்திற்குப் பயன்படாமல் போயிருக்கும். அந்த வீரசைவ மடத்தின் அதிபதி தான் அரும்பாடுபட்டு வாங்கித் தயாரித்த இலுப்பைக்கட்டைகளைக் கொடுக்கத் தயங்கினார். அங்கேயிருந்த ரெட்டியார் இனத்தைச்சேர்ந்த ஒரு அம்மையார் அந்த மடாதிபதியிடம் அந்தக் கட்டைகளைக் கொடுக்கும்படியும் அதற்குரிய மதிப்புத் தொகையை வேண்டுமானால் தான் கொடுப்பதாகவும் சொல்லியதின்பேரில் அந்த அம்மையார் அந்த மடத்துக்கு மிகவும் வேண்டியவர்களாக இருந்ததால் மடத்து அதிபர் அந்தக் கட்டைகளைக் கொடுக்க இசைந்தார். ஒன்றிரண்டு கட்டைகள் மாத்திரம் மேலும் தேவைப்பட்டன. அப்போது அந்த அம்மையார் அம்மாதிரியான கட்டைகள் திருமழபாடி ஈசுவரன் கோயிலில் இருப்பதாகத் தெரிவித்தார். உடனே அங்கு சென்றார்கள். அவர்கள் மோட்டார் காரில் சென்று கோயில் தருமகர்த்தரிடம் கேட்டபோது அவரும் அந்த கட்டைகளைக் காட்டினார். அவைகள் பொருத்தமாக இருந்தன. ஆனால் அவரும் அவ்வளவு நீளக்கட்டைகள் கிடைப்பது அரிது என்ற காரணத்தால் கொடுக்கத் தயங்கினார். இதற்குள்ளாக அந்த அம்மையார் நடந்தே கோயிலுக்கு வந்து சேர்ந்து தர்மகர்த்தரிடம் அந்த கட்டை

களுக்குரிய கிரயம் தான் கொடுப்பதாகச் சொல்லி வற்புறுத்தியதின்பேரில் அவரும் ஒப்புக்கொண்டார். அந்த அம்மையாருக்கு நன்றி செலுத்தியபோது, அந்த அம்மையார் தான் முன் இரவு கண்ட கனவில் ஸ்ரீரங்க நாச்சியார் தோன்றி தன்னிடம் தாயார் ஒரு உதவி எதிர்பார்ப்பதாகச் சொன்னதாகவும் அப்போது வயது முதிர்ந்த விதவையாகிய தன்னால் தாயாருக்கு செய்யக்கூடிய உதவி எத்தகையதாக இருக்கும் என்று எண்ணிப் பார்க்கவும் முடியவில்லையென்றும், அப்போதுதான் அதற்கு விளக்கம் கண்டதாகவும் உணர்ச்சியுடன் சொல்லியதைக்கேட்டு அங்குள்ளவர்கள் இறைவனுடைய திருவருளை வியந்து போற்றினார்கள். அந்த கட்டைகள் அவ்வளவு சுலபமாகவும் துரிதமாகவும் கிடைத்தனால்தான் திருப்பணி வேலைகள் விரைவாக முற்றுப்பெறுவதற்கு உதவியாக இருந்தது.

கோயில் என்றும், பெரிய கோயில் என்றும் சிறப்பாகக் கொண்டாடப்பெறும் திருக்கோயிலில் சரித்திரகாலத்தில் நடைபெற்றிராத வகையில் மகாசம்ப்ரோக்ட்சணம் செய்வதற்கு நிதி திரட்டும் வகையில் தருமகர்த்தர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஏராளமான பக்தர்களிடமிருந்தும், பிற சிவ வைஷ்ணவ கோயில்களிலிருந்தும் பெரும்தொகை நன்கொடையாகக்கிடைத்தது. தஞ்சை திரு. V.T. இராஜன் என்ற ஸ்தபதியும், மிகவும் சிற்பத் திறமையுடனும் பக்தி சிரத்தையுடனும் மூலமூர்த்தியின் திருவுருவத்தைப் புதுப்பித்தார். தைலக்காப்பை மேலும் மேலும் சாத்தி பெருமாளின் திருவுருவத்தில் மூக்கு, வாய், முதலிய அவயங்களையும், ஆதிசேஷனின் ஐந்துதலைகளையும், நன்றாகப் பார்க்கமுடியாத நிலையில் இருந்தவைகள் இப்போது மிகவும் தெளிவாகவும் அழகாகவும் அமைத்திருப்பது பக்தர்களுக்கு ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. ஆதிசேஷனுடைய ஐந்து தலைகளுக்கும் பொன் கவசமும் சாத்தியிருப்பது ஒரு தனி அழகு. இந்த வெள்ளிக் கவசத்தை அப்போதைக்கப்போது எடுத்து உள்ளே சுத்தம்செய்து மறுபடியும் சாத்துவதற்கு ஏற்றவகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கர்ப்பக்கிரகத்தின் அடிப்பாகம் கற்களால் பாவப்பெற்றிருந்தும் நாளாவட்டத்தில் படிந்த மண்ணும் புழுதியும் பன்னெடுங்காலமாகச் சேர்ந்து சுமார் $\frac{3}{4}$ அடி கனம் இருந்தது. அதை அப்புறப்படுத்த கடப்பாறையும் மண்வெட்டியும் உபயோகிக்கப் படவேண்டிய நிலையில் இருந்தது. இப்போது அடித்தளம் மீண்டும் கற்களினால் நன்றாகப் பாவப்பெற்று வாரம் ஒருமுறை சுத்தம் செய்யப்படுகிறது.

பின்பு யாகசாலை திருமஞ்சனம் முதலிய மகாசம்ப்ரோக்ட்சணத்தையொட்டிய காரியங்களைப்பற்றி ஆலோசனை செய்தபோது 1008 கலச அபிஷேகம் செய்யவேண்டும் என்று விரும்பினோம். சிலர் மண் கலசங்களில் செய்வது உசிதமென்றும், காலதாமதமின்றி கிடைக்குமென்றும், அபிப்பிராயப் பட்டார்கள். அப்போது பக்கத்திலிருந்த ஒருவர் மண்கலசங்கள் எமன் போன்றவருக்கு உபயோகப்படுத்துவது என்று குறைபட்டுக் கொண்டார். அப்போது பத்து கோயில்களில் ஒவ்வொருவரும் 108 செப்புக்கலசங்கள் செய்துவைத்துக்கொண்டு ஏற்பாடு செய்தால் அவைகளை உபயோகித்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் அத்தனை கலசங்கள் செய்ய காலதாமதமாகுமேயென்று கருதினோம். ஸ்ரீரங்கம் கோயிலிலே 108 வெள்ளிக் கலசங்கள் செய்யப்பட்டன. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தற்செயலாக கமிஷனரைப் பார்க்க இராமேசுவரத்திலிருந்து சென்னை சென்றுகொண்டிருந்த நிர்வாக அதிகாரி ஸ்ரீரங்கத்தில் இறங்கிக் கமிஷனரைச் சந்தித்தார். செப்புக்கலசங்களைப் பற்றிய பேச்சு நடந்துகொண்டிருந்தது. உடனே அவர் தன்னிடம் ஆயிரக்கணக்கான செப்புக் கலசங்கள் இருப்பதாகத் தெரிவித்தார். இராமேசுவரத்துக்கு ஸ்ரீரங்கத்திலிருந்து ஒரு ஆளை அனுப்பி 1008 க்கு மேற்பட்ட கலசங்கள் கொண்டுவரப்பெற்றன. எல்லாக் காரியங்களும் இறைவனுடைய திருவருளினாலேயே நடந்தன என்பதற்கு மேற்சொன்ன நிகழ்ச்சிகளே போதிய சான்றாகும். விபத்து ஏற்பட்டு சுமார் 108 நாட்களுக்குப்பின் பெரியோர்களால் மிகவும் உகந்த புனித நன்னாள் என்று குறிக்கப்பெற்ற 12-7-59 ல் மகாசம்ப்ரோக்ட்சணம் நடைபெற அமைந்

தும் பெருமாளுடைய திருவருளேயன்றி வேறொன்றுமில்லை என்பது அவ்வைபத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் நன்கு உணர்ந்தனர்.

''என் செயலாவதியாதொன்றுமில்லை
யினித்தெய்வமே
உன் செயலேயென்றுணரப்பெற்றேன்''
--பட்டினத்தார்.

''நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே''
—மாணிக்கவாசகர்.

''கங்கையிற் புனிதமாய
காவிரி நடுவுபாட்டு
பொங்குநீர்ப்பரந்து பாயும்
பூம்பொழிலரங்கந்தன்னுள்
எங்கள் மாலிறைவனீசன்
கிடந்ததோர் கிடக்கைகண்டும்
எங்ஙனம் மறந்துவாழ்கே
னேழையே னேழையேனே''
—தொண்டரடிப்பொடியாழ்வார்,

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெ
யுண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே.
--திருப்பாணாழ்வார்.

ஸ்ரீரங்கத்தை எல்லா ஆழ்வார்களுமே மங்களா சாசனம் செய்திருக்கிறார்கள். அவர்கள் அருளிய பாசுரங்களின் மொத்த தொகை பின்வருமாறு:

| | |
|---|---|
| பெரியாழ்வார் | 35 |
| ஆண்டாள் | 10 |
| குலசேகராழ்வார் | 31 |
| திருமழிசையாழ்வார் | 14 |
| தொண்டரடிப்பொடியாழ்வார் | 55 |
| திருப்பாணாழ்வார் | 10 |
| திருமங்கையாழ்வார் | 73 |
| பொய்கையாழ்வார் | 1 |
| பூதத்தாழ்வார் | 4 |
| பேயாழ்வார் | 2 |
| நம்மாழ்வார் | 12 |
| | 247 |




பழநி பெரியாவுடையார் கோயில் தோற்றம்



# திருவான்மியூர்

மஞ்சு லாவிய மாடம திற்பொலி மாளிகைச்
செஞ்சொ லாளர்கள் தாம்பயி லுந்திரு
வான்மியூர்த்
துஞ்சு வஞ்சிரு ளாடலு கக்கவல் லீர்சொலீர்
வஞ்ச நஞ்சுண்டு வானவர்க் கின்னருள்
[வைத்ததே
—திருஞானசம்பந்தர்

ஓட்டை மாடத்தி லொன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னங் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலஞ்செயில்
வாட்டந் தீர்த்திடும் வான்மியூ ரீசனே
—திருநாவுக்கரசர்

தொண்டை நாடு சான்றோருடைத்தெனும் பண்டைப் பெருமையுடையது. பாலாறு வளம் சுரக்கும் பண்பாடுதலை சிறக்கும் என்றும் பாராட்டப் பெற்றது. வள்ளுவனை உலகினுக்களித்து வான் புகழ்கொண்டதும், முதலாழ்வார் மூவர்களும், நாயன்மார்கள் எழுவர்களும், குன்றைமுனி சேக்கிழாரும் பிறந்தருளப்பெற்ற திருநாடு. இங்நாட்டில் பாடல்பெற்ற தலங்கள் முப்பத்திரண்டில் திருவான்மியூர் ஒன்று. இது சென்னைக்குத் தெற்கே ஆறுகல் தொலைவில் கடற்கரையருகே அமைந்திருக்கிறது.

கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. ஊருக்குள்ளே நுழைந்ததும் நம் கண் முன்னே படுவது நீராழி மண்டபத்தோடு கூடிய அழகிய பெரியதிருக்குளம் கோயிலுக்குக்கிழக்கே யிருக்கிறது; நான்கு புறங்களிலும் படிக்கட்டுகளுடையது. அதற்குத் தெற்கே சந்நிதித்தெருவில் பதினாறுகால் மண்டபம் இருக்கிறது. தொடங்கி முடிக்கப்பெறாத கோபுரம் கிழக்கு வாயிலில் இருக்கிறது. சேக்கிழார், 'மிக்குயர்ந்த கோபுரத்தை வணங்கி' சம்பந்தர் இறைவனை வழிபட்டார் என்று கூறியுள்ளார். இப்போது மொட்டைக் கோபுரந்தானிருக்கிறது. இதற்குப் பக்கத்தில் மற்றொரு சிறு திருக்குளமும் படிக்கட்டுகளுடன் காணப்படுகிறது. அதன் கரையில் தீர்த்தேசுவரரின் கோயில் இருக்கிறது. கோயிலுக்குக் கிழக்கிலும், மேற்கிலும் இரண்டு வாயில்கள் உள்ளன. கிழக்கு வாயிலுக்கெதிரே தோன்றுவது முருகப்பெருமான் சந்நிதி. கோயிலுக்கு வெளிப்பிரகாரம் ஒன்றும், சுவாமி சந்நிதியைச் சுற்றி உட்பிரகாரம் ஒன்றும் இருக்கின்றன. முருகன் சந்நிதிக்கு வலப்பக்கம் விநாயகர் எழுந்தருளியுள்ளார். தெற்குப்பார்த்த வாயில் வழியே சென்றால் மூலத்தான மூர்த்தியையடையலாம். இறைவன் சந்நிதி மேற்கு நோக்கியிருக்கிறது. சுவாமி கோயில் உட்பிரகாரத்தில் விநாயகர், முருகர், நால்வர், உற்சவ மூர்த்திகள், நடராஜர், சண்டேசுவரர், கங்காள மூர்த்தி, தட்சணாமூர்த்தி, அறுபத்துமூவர் முதலியோர் காட்சியளிக்கின்றனர். நால்வர் உருவங்களில், அப்பர் கையில் உழவாரப் படையும், மற்ற மூவர் கரங்களிலும் தாளங்களும் காணப்படுகின்றன.

சிவலிங்க மூர்த்தியின் திருமுடி சிறிது வடபுறம் சாய்ந்திருக்கிறது. பால்போன்ற வெண்ணிறமான சுயம்பு மூர்த்தி. திருமுடியில் சிறு பள்ளமிருக்கிறது. பாலைத்தவிரவேறு ஒன்றும் அபிஷேகம் செய்கிறதில்லை. வெளிப்பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் அம்பிகை

சந்நிதியிருக்கிறது. அதற்குத் தனிப்பிரகாரமும் இருக்கிறது.

இத்தலத்தில் ஐந்து தீர்த்தங்கள் இருக்கின்றன. காமநாசினி என்ற நீரோடை கோயிலுக்கு வெளியே மேற்புறத்தில் இருக்கிறது. பாபநாசினி, ஜென்மநாசினி என்ற இரண்டும் திருக்குளங்களாக உள்ளன. ஞானதாயினி, மோட்சதாயினி என்பவை கோயிலுக்குள் அம்மன் சந்நிதிக்கெதிரிலுள்ள இரண்டு கிணறுகள். இத்தல விருட்சம் வன்னி. இது வடக்கு வெளிப்பிரகாரத்திலிருக்கிறது.

வான்மீகி முனிவர் இங்கு வந்து இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றமையின் இப்பதிக்கு வான்மியூர் என்ற பெயர் ஏற்பட்டது. வான்மீகி உற்சவமூர்த்தி கோயிலில் இருக்கிறது. வான்மீகி கோயிலும் மாடவீதியில் வடமேற்கு மூலையில் இருக்கிறது. ஊருக்கு வடகிழக்கே கடற்கரையோரமாக பாம்பன்—குமரகுருதாச சுவாமிகளின் சமாதிக்கோயில் இருக்கிறது. தெற்கு மாடவீதியில் திருமுடி விநாயகர் கோயில் உள்ளது. இவரை அருணகிரியார் வழிபட்டார் என்று சொல்லப்பப்கிறது.

இத்தலத்துப் பெருமானுக்குப் பல திருப்பெயர்கள் உண்டு. இந்திரனுக்கு மருந்து கொடுத்து மயக்கம் தீர்த்தபடியால் மருந்தீசர் என்றும், வான்மீகர் வழிபட அவருக்கு நடனக்காட்சி யருளியபடியால் வான்மீகத் தியாகேசர் என்றும், வேதங்கள் பூசித்தமையின் வேதபுரீசர் என்றும், காமதேனு பால் சுரந்து இறைவனை அபிஷேகித்தபடியால் பால் வண்ணநாதர் என்றும், தேவர்கள் வழிபட்ட காரணத்தால் அமிர்தபுரீசர் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. அம்பிகையின் திருநாமங்கள் திரிபுரசுந்தரி, சொக்கநாயகி, சுந்தரநாயகி என்பன.

வடமொழியில் சிறந்த புலவரான அப்பைய தீட்சிதர் அண்மையிலுள்ள வேளச்சேரியிலிருந்து இங்கு வந்து பெருமானை வணங்கினதாக வரலாறுண்டு.

திருவொற்றியூரைப் போலவே இதுவும் சப்தவிடங்கக் கணக்கில் சேராத தியாகராஜ ஸ்தலம். இறைவன் வான்மீகியாருக்குத் திருநடன தரிசனம் கொடுத்தருளினார். திருவான்மியூர், திருவொற்றியூர் இவைகளில் நிகழும் நடனத்தை ஆடும் தியாகர், அசையும் தியாகர் என்று கூறுவர். கார்த்திகைப் பௌர்ணமியின்போது கோயிலுக்கு வெளியிலுள்ள பதினாறுகால் மண்டபத்துக்கு எதிரில் தியாகேசரின் பதினெட்டு நடன தரிசனமும், மார்கழிப் பௌர்ணமியில் அம்பாள் சந்நிதிக்கெதிரில் நாலுகால் மண்டபத்தருகில் தியாகராஜர் அரைக்கட்டு பதினெட்டு நடன உற்சவமும் நடைபெறும் திரளான மக்கள் கண்டு களிப்பது வழக்கம். பங்குனி மாதத்தில் பெருவிழா நடைபெறுகிறது.



திருவான்மியூர் ஸ்தல ஐதீகம்

திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூரிலிருந்து திருவான்மியூரை யடைந்து இறைவனை வணங்கிப் பதிகங்கள்பாடி, சிலநாள் அங்கு தங்கியிருந்து திரு இடைச்சுரம் சென்றார் என்று பெரிய புராணம் கூறுகிறது. சிரபுரத்துச் செல்வனார் இப்பதிக்கு இரண்டு பதிகங்கள் ஓதியுள்ளார். "மஞ்சுலாவிய மாட மதிற்பொலி மாளிகைச் செஞ்சொலாளர்கள் தாம் பயிலும் திருவான்மியூர்", "மண்ணினிற் புகழ் பெற்றவர் மங்கையர் தாம்பயில் திண்ணெனப் புரிசைத் தொழிலார் திருவான்மியூர்", "தேனார் சோலைகள்சூழ் திருவான்மியூர்", "திண்தேர் வீதியதார் திருவான்மியூர்" "திரையார் தெண்கடல்சூழ் திருவான்மியூர்" என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்திருக்கின்றார்

அப்பர்சுவாமிகள் தொண்டை நாட்டுத் தலங்களை வழிபடுகையில் திருக்கழுக்குன்றத்திலிருந்து திருக்காளத்திக்குப்போகும் வழியில் இங்கு இறைவனை வணங்கி ஒரு திருப்பதிகம் பாடினர் என்று சேக்கிழார் கூறுகிறார். இங்கெழுந்தருளியுள்ள பெருமானை மலர் கொண்டு உண்மையாக இறைஞ்சினால் மயக்கம் தீரும், மருள் அறும், பாவம் பறையும், வினைகள் தேயும், பிறவிவாதனை ஒழியும் என்று திருநாவுக்கரசர் அப்பாசுரங்களில் அருளியுள்ளார். சேக்கிழாரடிகள் "திருவான்மியூர் மருந்தைச் சேர்ந்து பணிந்தன்பினொடும் பெருவாய்மைத் தமிழ்பாடி"னர் வாகிசர் என்று கூறுவதில் இறைவன் திருநாமமாக மருந்தீசர் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

அருணகிரிநாதர் தாம்பரத்துக்கருகிலுள்ள மாடம்பாக்கம் முருகன் கோயிலை வழிபட்ட பின் திருவான்மியூர் வந்து 'குசமாகி' என்று தொடங்கும் திருப்புகழ்ப்பாடலைப் பாடினர். அதில் "மணிமாட மேடை உயர்திருவான்மியூர்" என்று சொல்கிறார்.

அஷ்டாவதனம் பூவை—கலியாணசுந்தர முதலியார் என்ற பெரும்புலவர் திருவான்மியூர்ப் புராணத்தை இயற்றியுள்ளார். கடவுள் வாழ்த்து உள்பட 19 படலங்கள் இருக்கின்றன. 1022 பாடல்கள் உள்ளன. ஒரு துதிப்பாடல் கீழ்வருவது :

மால்வண்ண மாலயனுதிய
வமரர் முனிவரர்கண்
மயங்கிவேத
நூல்வண்ணமே யுணராதா
கமத்து வழியேத்து
நோன்மைக்காகச்
சேல்வண்ண விழியுமையா
ளோடமர்ந்து நாளும்
சீர்த்திமல்கும்
பால்வண்ண மெவ்வண்ண
மவ்வண்ண மேனியனைப்
பரவு வாமால்.

இக்கோயிலிலிருந்து அரசாங்கத்தாரால் ஏழு கல்வெட்டுக்கள் 1909-ஆம் ஆண்டில் படியெடுத்துப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவை திரிபுரசுந்தரியம்மன் கோயில் கர்ப்பக்கிரகச் சுவரில் காணப்படுகின்றன; கி. பி. 1017-முதல் 1061 க்கும் இடைப்பட்டவை; இராஜேந்திரசோழன் I (1011-43), இராஜாதிராஜன் (1018-1052), இராஜேந்திர தேவன் (1050-63) என்ற சோழ மன்னர்கள் காலத்தவை. ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க்கோட்டத்துக்கோட்டூர் நாட்டுத் தேவதானமான திருவான்மியூர் என்று அவை குறிக்கின்றன. இறைவன் பெயரை திருவான்மியூருடைய மகாதேவர் என்று அறிவிக்கின்றன. கோயிலில் திருவிளக்கு ஏற்றி வைப்பதற்காக ஆடுகள் தானம் செய்தது, கோயில் பூசைக்கு நிலம் வழங்கியது, கோயில் மூர்த்திக்குப் பூமாலை கட்டித்தருவதற்காகப் பொருள் கொடுத்தது, கோயில் பூசை நைவேத்தியங்களுக்குப் பணமும் நெல்லும் தானம் பண்ணியது முதலிய விவரங்களை அக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. அம்மன் சந்நிதிமுன் மண்டபத்தூணிலிருக்கும் சரபப்பட்சி இரண்டு மூக்குகளுடனும் மான் மழுவேந்திய கைகளுடனும் இருப்பது பார்க்கத்தக்கது. கோயிலின் முன்னுள்ள முடிக்கப்பெறாத மொட்டைக் கோபுரத்தில் பல அற்புத சிற்பவேலைப்பாடமைந்த உருவங்கள் காணப்படுகின்றன. கண்ணப்பர் அம்பினால் தன் கண்ணை எடுக்கும்போது சிவலிங்கத்திலிருந்து கை வெளிநீட்டி அவர் கையைப் பிடித்திருக்கும் காட்சி மிக அழகியது. சிறகுகளுடைய ஒரு தேரில் சிவலிங்கம் இருக்க, அதை இருவர் இழுக்க, அதன் அடியில் ஒரு மனித உருவம் கிடக்கக்காணும் சித்திரம் மிக்க வனப்புடையது-

குசமாகிஆருமலை மரைமாநுண் நூலினிடை
குடிலான ஆல்வயிறு குழையூடே
குறிபோகு மீனவழி மதீமாமு காருமலர்
குழல் காரதானகுண மிலிமாதர்

புசவாசை யால் மனது உனைநாடி டாதபடி
புலையேனுலாவி மிகு புணர்வாகிப்
புகழான பூமிமிசை மடிவாயிருத வகை
பொலிவான பாதமலர் அருள்வாயே

நிசநாரணுதி திருமருகா வுலாச மிகு
நிகழ் போதமான பர முருகோனே
நிதிஞானபோதம் அரன் இருகாதிலே உதவும்
நிபுண நிசா சரர்கள் குலகாலா
திசைமாமு காழியரி மகவான்மு னோர்கள் பணி
சிவநாதர் ஆலமயில் அமுதேசர்
திகழ்பால மாகமுற மணிமாட மேடைஉயர்
திருவான்மியூர் மருவு பெருமாளே

—அருணகிரிநாதர்.

# மொக்கணீச்சுரம்

[வித்துவான் திரு. குமார-ஞானசம்பந்தன், கோபிசெட்டியாளையம்]

உலகிலே சிவஞானமும், அதனுல் அடையப்பெறும் திருவருளும் விளையும் வள வயல் நம் தமிழ்நாடு. இந்நாட்டிலே காலக் கணிதருக்கும் எட்டாக் காலமுதல் அருள் ஞானச் சான்ருேர்கள் தோன்றித்தோன்றித் தமிழ்மொழியிலே இறைவனைப் பாடித் துதித்த திருத்தலங்கள் பல. அவற்றுள்ளே திருஞானசம்பந்தர் முதலிய சிவசமயத் தலைவர்கள் நேரே சென்று ஓர் தலத்தில் இறைவனைப் பதிகத்தாற் பாடும்போது பிற தலங்களை அத்தலத்தின் பதிகத்துள்ளே வைத்துப் பாடிய அத்தலங்கட்கு வைப்புத் தலங்கள் என்பது சான்ருேர் இட்ட பெயர்.

மூன்ரும் நூற்ருண்டிலிருந்து ஒன்பதாம் நூற்ருண்டுவரை நிகழும் காலப் பகுதிகள் யாதானும் ஒன்றனுள் வாழ்ந்தவராகப் பலவாறு ஆராய்ச்சியாளர் கருதுகின்ற மணிவாசகப்பெருமான் அருளியது தேனினும் இனிய திருவாசகம். இதன் பெருமை அளக்க ஒண்ணுதது. ரெவ. ஜி. யூ. போப்பு (Rev. G. U. Pope), ஃப்ரியெட்ரிச் ஹெய்லர் (Prof. Friedrich Heiler) போன்ற ஐரோப்பிய அறிஞர்களும் வியந்து பாராட்டும் பெருமை பெற்றது திருவாசகம். வாதவூரடிகள் தாம் அருளிய திருவாசகத்துள் கீர்த்தித் திருஅகவல் என்பது ஓர் திருப்பாட்டு. சிவபெருமான் தமக்கு எளிவந்து திருவருள் தந்தருளியதையும், தமிழகத்தும் வேறு பிற இடங்களிலும் பல்வேறு காலங்களிலே மெய்யடியார்களுக்குத் தோன்றி அருள்செய்த திருவிளையாடல்களையும் இப்பாடலிலே தொகுத்துக் கூறுகிருர் திருவாதவூரடிகள். அதில்,

"மொக்கணி அருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்"

என்பதும் ஒன்று. 'மொக்கணி' என்னும் சொல் குதிரைக்குக் கொள்ளுக் கட்டும் பையைக் குறிப்பது. எனவே, "மொக்கணியினின்றும் (அன்பர் ஒருவருக்கு) அருள்செய்யும் பொருட்டுச் சிவபிரான் தம் முழுமையாய்ாகிய தீப்பிழம்பு வடிவை மிக அழகுடையதாக (வெளிப்படுத்திக் காட்சி கொடுத்த பழைமையும்" என்பது இவ்வடிகளின் பொருளாகும். [மொக்கணி - ஐந்தன் தொகை; அருளிய - செய்பிய என்னும் வாய்பாட்டு வினைஎச்சம். சொக்கு - பேரழகு]. இத் திருவிளையாடல் நிகழ்ந்த தலம் யாது? எங்குளது? என்பதைப் பற்றியதே இக்கட்டுரையாம்.

## இடமும், நிலையும் :

இந்தத் திருவாசக வைப்புத் தலத்துக்கு இன்றும் 'மொக்கணீச்சுரம்' என்றும் மொக்கணீசுவரர் கோயில் என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இது கொங்குநாட்டுள்ளே தேவாரப் பாடல்பெற்ற திருஅவிநாசி (கோவை மாவட்டம்) என்ற தலத்தினின்றும் வடக்கே ஐந்து கல் தொலைவிலுள்ள சேவூர் ["மாட்டூர் அறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே"—சுந்தரர்-ஊர்த்தொகை] என்னும் வைப்புத் தலத்தினின்றும் மேலும் வடக்கே செல்லும் கொடி வழியிலே 4-ஆவது கல்லின் இறுதியிலே மேற்கினின்றும் கிழக்கே ஓடும் குடக் கோட்டூர்ப் பள்ளம் என்னும் நீரோடையின் வடகரையிலே உள்ள சிதைவு நிலையினுள்ள திருத்தலம். உயர்ந்த திருமதில்கள், சிற்பத் திறனமைந்த கருவறை, இடைநிலை, முன்மண்டபம், இராயகோபுரம் அழகுச் சிற்பம் மலிந்த நிலைக்கற்கள் கொண்ட பள்ளியறை முதலியவற்ருேடு இத் திருக்கோயில் விளங்கியிருந்திருக்கவேண்டும். கிழக்குப்பார்த்த சந்நிதி; தென்பால் சிவலிங்க மூர்த்தியும் வடபால் அம்பிகையும் இடையிலே முருகக் கடவுளும் தனித்தனி பெரிய விமானங்களில் முன்மண்டபங்களோடு விளங்கிய ஸோமாஸ்கந்தராலயமாகும். பள்ளியறையின் இருநிலைக் கற்களும் மிக நுண்ணிய சிற்ப வேலைப்பாடமைந்துள்ளதை இன்றும் காணலாம். சில உருவங்கள் முழுதும் முகம்மதியர் ஆட்சிக்காலத்தில் அழிந்தன என்றும் கூறப்படுகிறது. சிங்கத்தின் முதுகின்மேல் அமைத்த தூண்கள் ஆங்காங்கு நின்றும், ஒடிந்தும், கிடந்தும் காட்சி தருவதிலிருந்து நரசிங்கவர்மப் பல்லவ மன்னரது அரிய ஆட்சிக்காலத்தே விரிவான கற்றிருப்பணி

செய்யப்பெற்று விளங்கி இருக்கவேண்டும் என்பதை உணரலாம். ஒரு சிறு நந்தி மட்டும் மிக அழகிய வேலைப்பாடுடன் விளங்குகிறது.

சிவபிரான் கருவறையின் வெளிப்புறத்தே எல்லாச் சிவாலயத்திலும் காணப்படுவதுபோல தென்முகக் கடவுளின் விமானம் மட்டும் சிதைந்த நிலையிற் காட்சி தருகிறது. இதிலும் திருமேனி இல்லை. உமையம்மையாரின் சிலையுருவம் நல்ல சிற்ப நுண்மை கொண்டதாக மூன்று தனித்தனி துண்டுகளாகச் சிதைந்து ஆலய எல்லைக்குள்ளேயே வேறு வேருகக் கிடக்கும் காட்சி மெய்யடியார் உள்ளங்களை மிகவும் உறுத்தச் செய்கின்றது! கண்ணையும், கருத்தையும் கவரும் இத்தகைய அருட்டிருமேனிகளைச் சிதைக்கும் வன்மனம் எந்த இந்து சமயிக்கும் இருந்திரா தன்றோ?

திருக்கோயில் எல்லைக்குள்ளேயே ஏறக்குறைய 4½ அடி உயரமும் 2 அடி அகலமும் உடைய ஓர் பலகைக் கல் விரிவான செய்திகளாற் பொறிக்கப்பெற்று நிற்கிறது. இன்னும் இரண்டு மூன்று சாசனச் சிலைகள் அருகிலுள்ள கோயில் மானியக் காடுகளில் கிடக்கின்றன எனக் கூறுகின்றனர். பழங் காலத்து நாணயங்கள் மழைக்காலத்தில் நிலங்களின் மேற்பரப்பிலே காட்சி தருவதாக அங்குள்ளவர்கள் கூறுகின்றனர். சென்ற ஆறு திங்களுக்குமுன் இத்தலத்திற்கருகிலுள்ள வேமகவுண்டன்பாளையத்தில் வணிக மரபினர் வீடு ஒன்றில் பழைய உரோமானிய நாணயங்கள் கிடைத்த செய்தி இனிவரும் மொக்கணீச்சுரத் தலவரலாற்றுக்குச் சான்று பகரும்.

இக் கோயிலைச் சுற்றியுள்ள விளைபுலங்களிற் பல இன்னும் இக்கோயில் திருப்பணியாளர் பெயர்களாலேயே வழங்கப்படுகின்றன. நட்டுவன் மானியக்காடு, தேவரடியாள் மானியக்காடு என்பன போன்றவை அவை.

தேவார வைப்புத் தலங்களுள் ஒன்ருனதும், மேலைத் தில்லை என்பதும் ஆகிய திருப்பேரூர் முதலான கொங்குநாட்டுத் தலங்கள் எல்லாவற்றும் நிகழும் திருவாதிரை நடராசர் தரிசனத்திலே 'பட்டிசுற்றல்' என்னும் அரசமரத்தைச் சுற்றி அம்மையப்பர் வருதல் இன்றும் நிகழ்கிறது. மொக்கணீச்சுர ஆலயத்திலும் மிகப்பழைய அரசமரம் ஒன்று இப் பணிக்குரியதாய் இருந்ததை இன்றும் ஆலயத்தின் தென்மேற்கில் ஏறக்குறைய 200 அடித் தொலைவிலே காணலாம். இத் திருக்கோயிலைச் சுற்றியுள்ள வெற்றிடங்கள் பலவற்றைக் கூர்ந்து நோக்குவார்க்கு, அரச மாளிகை, திருமடங்கள், மடவளாகம், திருவீதிகள், திருக்குளம் முதலியவற்றின் நுணுகிய அடையாளங்கள் காணப்படும்.

## செப்புப் படிமங்கள் எங்கே?

சேவூர்: (மாட்டூர்). இப்பழைய மொக்கணீச்சுர ஆலயம் சிதைவுற்ற பின்னர் இதிலிருந்த சிலையுருவங்கள் பல அழிக்கப்பட்டும், சில வேறு கோயில்கட்கு எடுத்துச் செல்லப் பெற்றும் மறைந்தன. சில செப்புத் திருமேனிகள் மட்டும் இத்தலத்திற்கு 4 கல் தொலைவிலே தெற்கே உள்ள 'சேவூர்' என்னும் 'வாலீச்சுரம்' [இது கல்வெட்டிலுள்ள பெயர்] சிவாலயத்தில் பாதுகாக்கப்பெற்றுப் பூசையில் இன்றும் உள்ளன. சந்திரசேகர மூர்த்தியாகிய அம்மையப்பர் (ஒரே பீடத்தில்) இன்னும் **மொக்கணீசுரர்** என்ற பெயராலேயே ஊரவராலும், அர்ச்சகர்களாலும் வழங்கப்படுகின்ருர். இச் சேவூரிலுள்ள திருக்கோயிலுக்கு 'வாலீச்சுரம்' [வாலி பூசனை புரிந்தது] என்றும் சிவபிரானுக்கு 'வாலீசுவரர்' என்றும் சேவூர்க் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இச் சேவூர்த் தலத்தின் வடமேற்கிலுள்ள தெப்பக் குளத்தின் படிக்கட்டுக்களிலும், மேல்வரி, கைப்பிடிச்சுவர், கம்பம் போன்றவற்றிலும் மொக்கணீச்சுர ஆலயச் சிதைவின் கற்களை இன்றும் காணலாம்.

**மொக்கணீச்சுர வரலாறு:** இனி, மணிவாசகப்பெருமானுர் அருளிய, "மொக்கணியருளிய முழுத்தழன்மேனி, சொக்கதாகக் காட்டிய தொன்மை" யாது? அது பின் வருமாறு:

மேலைக் கடற்கரையினின்றும் மிளகுப் பொதிகளை எருதுகளின்மேற் பாரம் ஏற்றிக் கொண்டு ஆனைமலைத் தொடர்களை ஏறிக் கடந்து கீழிறங்கிக் கோவை மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதிகளைக் கடந்து பல்லடம், அவிநாசி, சேவூர், குடக்கோட்டூர் (பின்—மொக்கணீச்சுரம்) வழியாகச் சத்திமங்கலம் வந்து தங்கி மலை ஏறி மைசூர்சென்று வாணிபம் நடத்திவருவது பண்டைக்காலத் தமிழ

வணிகர் வழக்கம் இந்நாட்டிலே. அத்தானும், அம்மான் சேயுமாகிய வணிகர் இருவர் மிளகுப்பொதி சுமந்து செல்லும் எருதுகளை கான் வழியிலும் மலை வழியிலும் கொடுவிலங்குகள் தாக்காவண்ணம் தனித்தனி ஒவ்வோர் குதிரையிற் சவாரி செய்து முன்னும் பின்னும் செல்வதும் மீள்வதுமாகக் காத்து இட்டுச் சென்றனர், மைசூருக்கு. ஒருநாள் இவ்வாறு செல்லும்போது, குடக்கோட்டூர் என்னும் சிற்றூர், நாழையூற்றுப் பள்ளம் என்னும் சிற்றோடைக் கரையிலே ஓர் கானகத்திலே தென்பட்டது. நல்ல நண்பகல்; பசிவேளை; மைத்துன வணிகர் "அத்தான்! இந் நீரோடை என்ன புனிதமானது! இதில் நீராடி நீருடிக் தையிற் கொண்டுவந்துள்ள கட்டமுதை (ஆற்றுணு) அருந்திச் செல்லலாமே! எருதுகளும் குதிரைகளும் தீனி தின்று இளைப்பாறுமே! என்றார். "ஆம்; நன்கு சொன்னீர்! ஆனால் யான் சிவபூசை முடித்தன்றி உண்ணு நியதியுடையவன் என்பது நீர் அறியாததோ?" என்றார் சிவநேசர். மைத்துனர், "ஆயின், இந் நெருங்கிய கானகத்திலே என்றோ ஓர்நாள் ஓர் சிவலிங்கம் இருக்கக் கண்டேன்; தேடிவந்து நும்மை அழைத்துச் சென்று வழிபடச் செய்வேன்; அதற்குள் நீங்கள் இத் தூநீரோடையில் நீராடி நியமம் முடித்து இருப்பீராக!" என்று மொழிந்துவிட்டுத் தன் குதிரையோடு நடந்து சற்றுத் தொலைவிலே சென்று ஓர் மரத்தடியில் நின்று பரிகாசமாக ஓர் சூழ்ச்சி செய்தார். தன் புரவி தின்பதற்குக் கொள்ளுக் கட்டும் பையை எடுத்து அதிலே மணலை நிரப்பி, அம் மரத்தடியில் ஓர் மேடையிட்டு, அம் மணற்பையைத் தலைகீழாகக் கவிழ்த்து மண்மேடையிற் சிறிது பகுதியைப் புதைத்து, முக்காற் பகுதிப் பை வெளியிலே தெரியக் காட்டி அருகிலுள்ள மணமலர்களாலும், துணர்களாலும், பச்சிலைகளாலும் புனைந்து பூசனை இலிங்கம்போற் காணுமாறு ஒப்பனை செய்து அத்தானிடம் மீண்டுவந்தார். வந்து "அத்தான்! உங்கள் பத்திநெறி வீழ்நாள் படாமைக் காக்க நம் சிவமே உங்களுக்குக் காட்சிதர மர நீழலிற் காத்திருக்கிறார்! நானும் கண்டேன்! சென்று வழிபடுக!" என்று சிவநேசரை அழைத்துச் சென்று தம் ஒப்பனையைக் காட்டினர். சிவநேசர் உண்மைச் சிவப்பற்றினர். ஆதலின் 'அன்பெனும் ஆறு கரையது புரள, உரை தடுமாறி உரோமஞ் சிலிர்ப்ப கடையேனுக்கிக் கண்ணுழையாக் கானகத்தே வாய்த்த கடவுண் மணியே! காலகால! மாதிருக்கும் பாதியனே! புராந்தகனே! புத்தொளிப் புதையலே! பொய்யர்க்குப் பொய்யனே! மெய்யர்க்கு மெய்யனே! அடியேனுன் அடைக்கலமே" என்று கரைந்துருகி வழிபட்டுப் பிரியா விடைபெற்றுக் கரை நீரடைந்து வட்டமுதைக் கையிலெடுத்து உண்ணப் புகும் தறுவாயில் மைத்துனர் கைகொட்டிச் சிரித்து "அத்தான்! நன்றாயிருக்கிறது உங்கள் வழிபாடு! நீங்கள் வழிபட்டது போலிச் சிவலிங்கம்; ஏமாந்தீர்! யான் விளையாட்டாக அவ்வாறு செய்தேன்; வந்து காணும்!" எனச் சிவநேசரை அழைத்துச் சென்று மொக்கணியாகிய இலிங்கத்தைப் பற்றி மேலே இழுத்து அசைத்துத் தூக்க முயன்றார். உள்ளே நிரப்பிய மணல் கீழே சரியும்; வெற்றுப் பையை எடுத்துக் காட்டலாம் என எண்ணி, ஏமாந்தனர்! அந்தோ! இறைவன் மெய்யர்தம் மெய்யன்பிற் கட்டுண்டதைக் காட்டவும், பொய்யரின் பொய்யினைத் தோற்கவும் திருவுளத்தெண்ணுனே! அம் மொக்கணியே இறுகிய இலிங்க வடிவாகவும், அதுவே உள்ளங் கவரும் பேரொளிப் பிழம்பாகிய மாணிக்கக் கந்தாகவும் நிற்கச் சிவபெருமான் அன்பர்க்குக் காட்சிதந்தார்; சிவநேசர் திருவருள் வெள்ளத்திலே தோய்ந்து நின்றார்! ஆனல், தாம் நட்ட பை இறுகிய தோடன்றிப் பாதாளம் வரையும் ஊடுருவி இலிங்கமாக ஒளிவிடுவதைக் கண்டார் மைத்துனர்! கொண்டார் அச்சம்! "அத்தான்! தங்கள் பூசை மகிமை அறியாதேன்! தங்களை நானினிக் குருநாதராகக் கொண்டுய்வேன்", யான் தங்களிடம் செய்த பரிசாகக் குறும்பு இது! பொறுத்திடுவீர்! என்று சிவநேசரிடம் பணிந்து வீழ்ந்தார்.

இவ்வாறு காட்சி தந்தாண்ட "மொக்கணீசுவரருக்கு இங்கே திருக்கோயில் ஒன்று எடுப்போம்; உரிய நிபந்தங்களை நிறுவுவோம்" என்று வணிகரிருவரும் தம்முள் உறுதி பூண்டபடி எடுப்பித்த திருக்கோயிலே மொக்கணீசுவர மாயிற்று; இறைவர் மொக்கணீசுவரர் ஆனார்; வணிகச் சிவநேசர் நீராடிய ஓடையே குடக்கோட்டூர்ப் பள்ளமாகும்.

இத் திருவிளையாடலையே மணிவாசகப் பெருமானர் தம், "கீர்த்தித் திருஅகவலில்"

௬௩-௬௪ ஆம் அடிகளிலே குறித்தனர். இவ் வரலாறு இன்னும் இத்திருத்தலத்தைச் சூழ்ந் துள்ள மக்கள் பலரும் செவிவழிச் செய்தி யாகவும் கூறிவருகின்றனர். கொங்குநாட் டின் 24 சிறு பிரிவுகளுள் ஆறை நாட்டைச் சார்ந்தது இத்தலம்.

மொக்கணி—கொள்ளுப் பை என்பதன் இலக்கிய ஆட்சி:

வேம்பத்தூரார் பாடிய திருவாலவா யுடையார் திருவிளையாடற் புராணத்துள்,

'பழுதில்கண் துயின்றேமில்லை;
பருப்புநெய் கரும்புக்கட்டி
எழிறகு மட்டித்திட்டேம்;
இதவிய புல்லும் இட்டேம்;
கழுவிய பயறும் கொள்ளும்
கடலையும் துவரையோடு
முழுவதும் சிறக்க விட்டேம்;
மொக்கணி முட்டக்கட்டி''

என்ற பகுதியில் மொக்கணி என்ற சொல் இப்பொருளில் வருவதைக் காண்க.

சொக்கதாக என்பதற்கு 'மிகப் பேரழ காக' என்று பொருள் கொள்வதற்கு,

''சுந்தர வடிவங் கண்டே சொக்கெனும் நாமம்
மிக்க எந்தையே!''

என்னும் திருவிளையாடற் புராண வாக்கு ஆட்சி தருகிறது.

'மொக்கணியினின்றும் அருளும் பொருட்டு முழுத்தீ ஒத்த திருவுருவமானது, (சொக்கதாக=) பேரழகையுடைய சிவலிங்க மாகக் காட்டியருளிய பழமை' என்று இவ் அடிகட்குப் பொருள் கொள்வது சிறப்புடை யது. அன்றி, சிவபெருமான் குதிரைச் சேவகனாகி மணிவாசகர் பொருட்டு வந்த போது தாம் ஏறிவந்த குதிரைக்கு மொக்கணி கட்டினர்; அதுகாலைத் தாம் கடவுளாம் தன்மையைப் பாண்டிய மன்னர்க்குக் காட் டினர் என்று பொருள்கொள்வது வரலாற் றில் இருவரும் கூறாதது. ஆதலின் இப் பொருள் எவ்வாறு பொருந்தும்?

'முழுத் தழன்மேனி' என்ற அருஞ் சொற்றொடர் திருநாவுக்கரசடிகள் தம் திரு விருத்தத்தே,

''முழுத் தழன்மேனித் தவளப்
பொடியன்;கனகக் குன்றத்
தெழிற் பெருஞ்சோதியை; எங்கள்
பிரானை இகழ்திற் கண்டீர்''

என்ற பகுதியிலும் காண்க.

கீர்த்தித் திரு அகவலில் ''மொக்கணி யருளிய......... தொன்மையும்'', என்ற பகுதிக்கு விரிவுரை முதற்கண் தமிழகத்தில் வெளி வந்தபோது கொங்குமண்டல சதகம் என்னும் நூல் அச்சாகவில்லை. இவ் வரலாறு கொங்குமண்டல சதக ஆசிரியர் கார்மேகக் கவிஞர் (கி. பி. 18. நூ.) தம் சதகத்தில்,

''ஏத்து சிவபத்தி யானொரு
செட்டிமுன் னீசுரனைத்
தோய்த்து முழுகித் தொழவெழ
ஆங்கொரு சூழ்ச்சிகற்றேன்
பூத்த வனக்குடக் கோட்டூரில்
மொக்கணி யைப்புதைக்க
வாய்த்த சிவலிங்க மானது
வுங்கொங்கு மண்டலமே''

என்ற 24-ஆம் பாடலிலே சுருக்கமாக வரு தலைக் காணலாம். (சதகம் அச்சேறியது 1923-ல்)

## பேரறிஞர் பலர் வந்து

### கண்டது; பாராட்டியது:

இந்த மொக்கணீசுவரர் ஆலயத்தை மறைமலையடிகள் முதலிய பேரறிஞர்கள் கண்டு தெளிந்தனர். என் இளமைப் பருவத் திலே, பேரூர்ச் சத்வித்யா சன்மார்க்க சங்க ஆண்டுவிழா ஒன்றினுக்குத் தலைமை தாங்கச் சென்னையினின்றும் அடிகள் வந்திருந்தனர். (1928-ஆம்ஆண்டாக இருக்கலாம்). திரு அவிநாசியிலே சிவ தரிசனம் செய்துகொண்டு அவர்கள் உடன் வந்த சிவநேசருடன் யானும் உடன் சென்று இத்திருக்கோயிலை அவர் களுக்குக் காட்டினேன். அடிகளார் இதன் சிதைவு நிலையை நேரே கண்டு மனமுருகிக் கண்ணீர் சொரிந்து நின்றநிலை என் உள் ளத்தினின்றும் மறையவில்லை. மேலும், ''யாம் திருவாசக விரிவுரை எழுதியக் கால் இக் கோயிலைப்பற்றிய செய்தியும் வரலாறும் இலக்கியச் சான்றும் அறிந்திருப்பின் மணி மொழிக்கு இவ்விளக்கம் வரைந்திருப்பேம்!

அம்பலவாணரும் மணிவாசகப் பெருமானும் அடியேமைப் பொறுத்தருள்வாராக! இத் திருக்கோயில் சிறப்படைவது எந் நாளோ?'' என இரங்கிக் கூறினர் அடிகளார்.

திருமுறைப் பாராயணம் செய்வதற்குப் போதிய நேரம் கிட்டவில்லை என்று அது கிடைக்கத் தம் அரசினர் அலுவலை உதறி எறிந்த கயப்பாக்கம் உயர்திரு. சதாசிவச் செட்டியார், பி. ஏ. அவர்கள், சென்னை, 'கடலகம்'—கா. நமச்சிவாய முதலியார் போன்ற பேரறிஞர் பலரும் கண்டு சென்றது. கோவைச் சிவக்கவி மணியார்க்கு இதில் மிகத் தோய்வுண்டு.

திருவாதவூரடிகள் கொங்குநாட்டின் கண்ணுள்ள தலங்கள் சிலவற்றைத் தரிசித்திருக்க வேண்டும் என்பதற்குப் பல சிற்பச் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் வரலாற்றுக் குறிப்புகளும் பற்றி வரைவதானல் இக் கட்டுரை இன்னும் விரியும். திருவாதவூரடிகள் திருவுள்ளத்தைக் கவர்ந்த 'மொக்கணீச்சுரம்' என்னும் இத்தலம் புத்துயிர் பெற்றோங்குதற்கு ஆவன புரிவிக்கச் சிவபிரான் அறநிலையக் காப்பாளர் பெருமக்களின் உள்ளங்களின் நின்று ஊக்கி வருவதாக அறிஞர் கூறக் கேட்ட சிவநெறியுலகம் உவகை கொள்ளுகின்றது! வெல்க அவர்கள் மெய்ப் பணி!

''மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்''

---

**திருப்பனந்தாள்** : வீரியம்மன் கோயிலில் 30–7–60 முதல் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6 மணி முதல் 7–30 மணி வரை பெரியபுராணச் சொற்பொழிவுகள் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்களால் நடத்தப்பெற்று வருகின்றன.

**திருச்சிராப்பள்ளி** : தாயுமானசுவாமி கோயிலில் குமரகுருபர சுவாமிகள் நினைவு தாயுமானேசர் தேவார நிதியிலிருந்து இன்னிசைத்திருமுறை விழா 11–9–60 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

**சென்னை** : ஏகாம்பரநாதர் கோயிலில் 5–2–60 முதல் வாரம் இருமுறையாகப் பிரதி திங்கள், வெள்ளிக்கிழமைகளில் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் பெரியபுராண விரிவுரையைத் தொடர்ந்து நிகழ்த்திவந்தார்கள். அதன் பூர்த்திவிழா 3-8-60 ல் மாலை 6-30 மணிக்கு சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**குடந்தை** : சிவத்திரு மங்கையர்க்கரசியார் பெண்கள் பிரதோஷ வழிபாட்டுக் கழகத்தின் மூன்றும் ஆண்டுவிழா –8–60 ல் ஆதி கும்பநாதர் கோயில் திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது

**ஆவூர்** : பசுபதீசுவரர் கோயிலில் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரத் திருப்பதிகக் கல்வெட்டையும், பன்னிரு திருமுறைக் கோயிலையும் 1-8–60 சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ், அவர்கள் திறந்துவைத்தார்கள். திரு கோ. சிவஞானம் அவர்கள் தலச்சிறப்பைப்பற்றி சொற்பொழிவாற்றினர்கள்.

**திருச்சக்கரப்பள்ளி** : சூலமங்கலம், புள்ளமங்கை ஆலயங்களில் தேவாரப் பதிகக் கல்வட்டுக்களை சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் 1–8–60 ல் திறந்துவைத்தார்கள்.

**சோளசிம்ஹபுரம்** : நரசிம்ம சுவாமி கோயிலில் சுவாமிக்கு திருப்பவித்ரோத்சவம் 23–8–60 முதல் 27–8–60 வரை நடைபெற்றது.

# ஸ்ரீகிருஷ்ணாவதார விசேஷங்கள்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

**கண்ணபிரான் திருவவதரித்தது எதற்காக?**

"சாது சனத்தை நலியுங்கஞ்சனைச் சாதிப்பதற்கு ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத் திங்குப்பிறந்த" என்றும், "மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான்" என்றும் நம்மாழ்வார் ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தின் பிரயோஜனத்தை யருளிச் செய்துள்ளார். நல்லாரைக் காக்கவும் தீயாரைப் போக்கவுமே கண்ணன் திருவவதரித்தனனென்றவாறு. பகவத்கீதை முதலானவற்றிலும் இத்தகைய பிரயோஜனம் கூறப்பட்டுள்ளதே யாம். வேறுவகைப் பிரயோஜனங்களையும் இன்சுவை மிகப் பேசுவர்கள் ஆழ்வார்கள். திருமங்கையாழ்வார் "கானயன் கடிமனையில் தயிருண்டு நெய்பருக நந்தன் பெற்ற ஆனயன்" என்றருளிச் செய்கிறார். திருவாய்ப்பாடியில் தயிரும் நெய்யும் பாலும் வெண்ணெயும் பாழ்படாமே அவற்றைப் பருகுவதற்காகவே கண்ணன் திருவவதாரமென்கை. கோபிகளின் பேச்சாலே பேசுகின்ற நம்மாழ்வார் "இன்று இவ்வாயர் குலத்தை வீடுய்யத் தோன்றிய கருமாணிக்கச் சுடர்" என்று, திருவாய்ப்பாடியை வாழ்விப்பதற்காகவே கண்ணபிரான் அவதரித்ததாகக் கூறினர். ஆண்டாளோ வென்னில், (அவளும் ஆய்ச்சிமாருடைய பேச்சாகப் பேசுமிடத்து) "கஞ்சன்வலை வைத்தவன்று காரிருளெல்லில் பிழைத்து நெஞ்சுதுக்கஞ் செய்யப் போந்தாய் நின்றவிக்கன்னிய ரோமை" என்கிருள்;—கம்ஸனிட்ட காவலுக்குத் தப்பிப் பிழைத்துத் திருவாய்ப்பாடியில் வந்து சேர்ந்தது கோபிமார்களைத் துன்பப்படுத்துதற்காகவே யென்கை. இவை ரஸோக்தியின்பாற்படும்.

**நம்மாழ்வார் கண்டதோரற்புதம்**

"சூட்டு நன்மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீராட்டி அந்தூபந்தரா நிற்கவேயங்கு ஓர் மாயையினல் ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்து இமிலேற்றுவன்கூன் கோட்டிடை யாடினை கூத்து அடலாயர்தங் கொம்பினுக்கே" என்பது திருவிருத்தத்தில் மிகச் சிறந்ததொரு செய்யுள். திருநாட்டில் நித்யஸூரிகள் பரமபதநாதனுக்கு நீராட்டம் கண்டருளப் பண்ணித் தூபம் ஸமர்ப்பிக்கும்போது புகையினல் திருமுகமண்டலம் மறையும்; பிறகு தீபாராதனை செய்யும்போது திருமுகமண்டலம் காட்சிதரும். இந்தத் தூப தீபங்களினிடையில் அப்பரம பதநாதன் விண்ணுலகினின்றும் மண்ணுலகில் வந்து கண்ணனாய்த் திருவவதரித்து "பிறந்தவாறும் வளர்ந்தவாறும் பெரியபாரதம் கைசெய்து" என்னும்படியான ஸகல காரியங்களையும் தலைக்கட்டிக்கொண்டு (விண்ணுலகில்) தீபாராதனையாகும்போது திருமுகமண்டல ஸேவை காட்ட ஸித்தனயிருக்கிருனென்று ஓர் அதிசயச் செயல் இதனல் தெரிவிக்கப்பட்டதாயிற்று. இதனல், ஸாக்ஷாத் பரமபதநாதனே கண்ணபிரானக வந்து பிறந்தவனென்பதும், திருநாட்டில் நடைபெறும் திருவாராதனத்தின் சிறப்பும் தெரிவிக்கப்பட்டவாறு. இவ்விரண்டனுள் முந்தின விஷயமே முக்கியமானது.

**கண்ணன்பிறந்த நக்ஷத்திரம் எது?**

கண்ணன் பிறந்தது ரோஹிணீ நக்ஷத்திரத்திலென்பது புராணப் பிரசித்தமும் உலகப் பிரசித்தமுமாம். இவ் வவதாரத்தில் விசேஷித்து ஈடுபட்டவரான பெரியாழ்வார் திருவோணத்திற் பிறந்ததாகப் பலவிடங்களில் அருளிச் செய்கிருர். "அத்தத்தின் பத்தாநாள் தோன்றியவச்சுதன்" என்றும், "நின்ற மராமரம் சாய்த்தாய்! நீ பிறந்த திருவோணம் இன்று நீ நீராடவேண்டும்" என்றும், "திண்ணார்வெண் சங்குடையாய் திருநாள் திருவோண மின்றேழுநாள்" என்று

முள்ளன அவருடைய பாசுரங்கள். இங்ஙனே பேசியிருப்பவை எங்ஙனம் பொருந்துமென்று சிந்திக்கவேண்டா; அழகிய சிங்கர் [நரசிங்கமூர்த்தி] அவதரித்தது சுவாதி நக்ஷத்திரமாயிருக்கச் செய்தேயும் (திருப்பல்லாண்டில்) "திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி" என்று அவரையும் திருவோணத்திலவதரித்தவராக அருளிச் செய்தவரல்லரோ பெரியாழ்வார். இவற்றையெல்லாம் ஆராயுமிடத்து "வேதப்பயன் கொள்ளவல்ல விட்டுசித்தன்" என்னப்பட்ட இவ்வாழ்வார் வேதத்தை யடியொற்றி அருளிச் செய்கிறாரென்பது தெரியவரும். தைத்திரீய யஜுர்வேதத்தில் நாலாவது காண்டத்தில் நாலாவது பிரச்னத்தில் ஸகல நக்ஷத்திரங்களுக்கும் தேவதைகளைக் கூறுமிடத்து "ச்ரோணா நக்ஷத்ரம் விஷ்ணுர் தேவதா" என்று ஓதப்பட்டுள்ளது ஸ்ரீமஹா விஷ்ணுவின் திருநக்ஷத்திரம் திருவோணமேயாகும். அப்பெருமான் எந்த நக்ஷத்திரத்தில் அவதரித்தாலும் அது திருவோணத்தின் அம்சம் பொருந்தியதாகவேயிருக்குமென்பது ஆழ்வாருடைய திருவுள்ளம். ஆகவே "நீ பிறந்த திருவோணம்" என்று கண்ணனை நோக்கிக் கூறியதும், "திருவோணத் திருவிழவில் அரியுருவாகி" என்று நரசிங்கமூர்த்தியைப்பற்றிப் பேசியதும் பொருத்த முடைத்தேயாகும்.

### அவதார சமயத்தில் அற்புதத் தோற்றம்

வசுதேவர் திருமாளிகையில் சிறைக்கூடத்தில் கண்ணன் திருவவதரித்தபோது "ஜாதோஸி தேவதேவேச சங்க சக்ரகதாதர" என்று போற்ற நின்றான். திருவாழி திருச்சங்கு முதலிய திவ்யாயுதங்களோடு கூடித் திருவவதரித்ததாகச் சொல்லிற்று. வேறு எந்த அவதாரத்திலும் இங்ஙனே நிகழ்ந்ததாகக் கேட்டிலோம். இவ்வவதாரம் இங்ஙனே யானதற்குக் காரணமொன்றுண்டு. கேண்மின்; இதற்கு முந்தின அவதாரம் தசரத ராமாவதாரம். அது தன்னில், ராவண வதமான பின்பு மந்தோதரி புலம்பிக் கொண்டே பிரேதனான இராவணனைக் குறித்துப் பலபலவும் கூறுகையில் "தமஸ: பரமோ தாதா சங்கசக்ரகதாதர:" என்றாள். அப்போது இராமபிரான் சங்கசக்ரகதாதரராக இல்லை. ஆயினும் அவள் தன் உள்ளக் காட்சியில் கண்டவாறு பேசினாள்; அஃது இராகவன் திருச்செவியிற் புகுந்தவளவில் சிறிது லஜ்ஜை யுண்டாயிற்றவற்கு; 'ஐயோ! வெறுங் கையனானவென்னை இவள் சங்க சக்ரகதாதரனென்கிறாளே; இவள் நம்மை 'எப்போதும் கைகழலா நேமியான்' என்று அறிந்து கொண்டாலும் நாம் இங்ஙனேயிருக்கை தவிர்ந்தோமே; போனது போகுக: இனி அடுத்த பிறவியில்சங்கசக்ரகதாதரனாவே பிறப்பேனாக' என்று அப்போது ஸங்கல்பித்துக்கொண்டு, அடுத்த அவதாரம் கிருஷ்ணவதாரமாகையாலே அது தன்னில் "ஜாதோஸி தேவதேவேச சங்கசக்ரகதாதர" என்னும்படி அவதரிக்கலாயிற்று வான்மீகி முனிவர் திருவாக்கில் "சங்கசக்ர கதாதர:" என்று முதல் வேற்றுமையாக வந்த சொற்றொடர் தானே பராசர முனிவர் திருவாக்கில் விளியுருபு ஏற்று வந்தது.

### பிறந்தவன்றே தந்தை தாயர் சொற்பேணுதல்

'தந்தை தாயர் சொற்பேணுதல்' என்கிற நற்குணம் இராமபிரானுக்கே உரியதென்று கருதுவாருளர். "தாயர் வாய்ச்சொல் கருமங்கண்டாய் சாற்றிச் சொன்னேன் போகவேண்டா" என்றும், "தாய் சொல்லுக் கொள்வது தன்மங்கண்டாய் தாமோதரா இங்கே போதராயே" என்றும், "சோத்தம் பிரானென்று இரந்தாலுங் கொள்ளாய்" என்றும் சொல்லும்படியாகத் தாயர் வாய்ச் சொல் கேளாதவன் கண்ணபிரான் என்று கூறுவாருமுளர். இங்கு நம் ஆசாரியர்கள் தத்துவமுணர்த்துகிறபடி என்னென்னில்; இராமபிரான் தாய்தந்தையர் சொற்பேணினது பிராயம் முதிர்ந்தபின்பு; கண்ணபிரான் பிறந்தவன்றே அது செய்தனன்; "உபஸம்ஹர விச்வாத்மந்! ரூபமேதத் சதுர்ப்புஜம்" [இந்தத் திருவாழி திருச்சங்குகளை மறைத்துக்கொள் பிரானே!] என்று வஸுதேவ தேவகிகள் வேண்டினவுடனே அங்ஙனே மறைத்துக் கொண்டனனாதலால்.

### திருவாய்ப்பாடி பயணத்தில் காட்டிய விசேஷம்

கண்ணன் திருவவதரித்தது வடமதுரையிலே; "ஒருத்திமகனாய்ப் பிறந்து ஓரிரவிலொருத்திமகனா யொளித்து வளர" என்றபடி உடனே போய்ச்சேர்ந்தது திருவாய்ப்பாடியிலே. ஸ்ரீகிருஷ்ண திவ்ய சிசுவை

வஸுதேவர் தாம் சுமந்துகொண்டு சென்று திருவாய்ப்பாடியிலே விட்டுவந்தார். அப்போது ஆவணிமாதமாகையாலே கனமழை பெய்து கொண்டிருக்கின்றது. எமுனையில் வெள்ளமோ ஆகாய மளாவிப் பெருகா நின்றது; இந்த நிலைமையில் வஸுதேவர் ஆறு கடந்து எங்ஙனே சென்றார்? தெய்வக் குழவி மழையில் நனைந்து வருந்தாதபடி யிருந்ததா? என்னில்; இங்குப் பராசரமஹர்ஷி கூறுகின்றார்; "யமுநாஞ்ச அதிகம்பீராம் நாநாவர்த்த ஜஷாகுலாம், வஸுதேவோவஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோதகோ யயௌ" என்று. அப்போது வஸுதேவர்க்கு யமுனையாறானது தன்னை முழந்தாளளவாக வற்றிக் கொடுத்ததாம். இதைக் கொண்டே ஆண்டாள் திருப்பாவையில் "தூய பெருநீர்யமுனை" என்றாள். இராமாயணத்தில் கோதாவரியின் கதையைக் காண்கிறோம்; ஸீதாபிராட்டி கோதவரியை நோக்கி வேண்டிக்கொண்டாள் — தன்னை இராவணன் அபஹரித்துக்கொண்டு போகிறானென்பதை இராமனுக்குச் சொல்லவேணுமென்றாள்; இராவணனிடத்து அச்சத்தாலே கோதாவரி தெரிவிக்கவில்லையென்று வான்மீகி முனிவர் கூறியுள்ளார். உண்மையில் இராவணனிடத்து அஞ்சவேண்டிற்றில்லை கோதாவரிக்கு; வீணாகவே அஞ்சினபடி. எமுனை தான் கம்ஸனுடைய மாளிகையின் கீழே பெருகாநிற்கச் செய்தேயும் அவனுக்கு அஞ்சவேண்டி யிருந்தும் சிறிதும் அஞ்சாமல் கண்ணபிரானுக்கு உதவி செய்தமையால் தூய பெருநீர் யமுனையாயிற்றிது.

### வஸுதேவ தேவகிகளின் வெறுப்பும் நந்தகோப யசோதைகளின் உகப்பும்

வஸுதேவரும் தேவகியும் கண்ணனை மகனாகப்பெறப் பெற்ற பாக்யசாலிகளேயானாலும் அவனது திவ்ய அற்புதசேஷ்டிதங்களில் ஏகதேசமும் அநுபவிக்கப் பெற்றிலர்கள். பிள்ளை செய்வனகாணத் தெய்வத் தேவகி புலம்பிய புலம்பலைக் குலசேகராழ்வார் கல்லுங்கரையப் பேசியுள்ளார்.

1. என்வாயிடை நிறையத் தாலொலித்திடும் திருவினையில்லாத் தாயரில் கடையாயின தாயே.
2. ஆனையிற் கிடந்த கிடக்கை கண்டிடப் பெற்றிலேனந்தோ கேசவா கெடுவேன் கெடுவேனே!
3. நந்தன் பெற்றனன் நல்வினையில்லா நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே.
4. அளவில் பிள்ளைமை யின்பத்தை யிழந்த பாவியே னெனதாவி நில்லாதே.
5. திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றாளே.
6. வண்ணச் செஞ்சிறு கைவிர லனைத்தும் வாரிவாய்க் கொண்ட அடிசிலின் மிச்சல் உண்ணப் பெற்றிலேன்ஓ கொடுவினையேன்!
7. வாயிலே முலையிருக்க என்முகத்தே எழில்கொள் நின்திருக்கண்ணிணை நோக்கந் தன்னையு மிழந்தே னிழந்தேனே!
8. அழுகையுமஞ்சி நோக்குமந் நோக்கும் அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும் தொழுகையுமிவைகண்ட வசோதை தொல்லையின்பத் திறுதி கண்டாளே.
9. வென்றி சேர்பிள்ளை நல்விளையாட்ட மனைத்திலும் அங்கென்னுள்ள முன் குளிர ஒன்றுங்கண்டிடப் பெற்றிலே னடியேன்.

என்றிங்ஙனேயன்றோ தேவகி புலம்பல். இது வசுதேவருடைய புலம்பலுக்கும் உபலக்ஷணமேயாம். இனி நந்தகோப யசோதைகளின் பாக்கிய விசேஷங்களைப்பற்றி என் சொல்லுவது!

ஒரு மஹாகவி நந்தகோபரைப்பற்றிக் கூறினர்.

"ச்ருதி மபரே ஸ்ம்ருதி மபரே
பாரத மபரே பஜந்து பவபீதா:;
அஹமிஹ நந்தம் வந்தே
யஸ்ய அளிந்தே பரம்ப்ரஹ்ம"

என்று வேதங்களோ தரும சாஸ்திரங்களோ பாரதமோ பாகவதமோ எதுவும் எனக்கு வேண்டா; நந்தகோபனொருவனையே தஞ்சமாகப் பற்றுவன் நான். அவன்றனக்கு வந்த ஏற்றமென்னென்னில்; [பரம் ப்ரஹ்ம யஸ்ய அளிந்தே] வாய் கொப்பளிக்கும் வாசல்திராங்கிக்கு அளிந்தமென்றுபெயர்; நந்த கோப

னது மனைவாசல் திராங்கியிலன்றோ பரம புருஷன் தவழ்ந்து விளையாடிப் புரண்டுகிடந்தான். இந்த பாக்கியம் வேறுயார்க்கு எட்டும்? என்றூர்.

நம்மாழ்வார் நந்தகோபனை நிதியெடுத்தவனென்கிறூர்; "எடுத்த பேராளன் நந்த கோபன்றன் இன்னுயிர்ச் சிறுவனே" என்றன்றோ கண்ணனை விளிக்கின்றூ ராழ்வார். உண்மையில் நந்தகோபனுக்குக் கண்ணபிரான் கிடைத்தது ஜன்மதரித்ரனுக்கு நவநிதி கிடைத்தது போலவன்றோ. கண்ணன் கிடைத்தானென்பது மட்டுமேயோ? அவனைத் தன்னிஷ்டப்படி நியமிக்கும் பாக்கியமுமன்றோ பெற்றிருந்தான்.

ஒருநாள் மாலைப்பொழுதில் கண்ணன் தெருவிலே சென்று நின்றூன்; அப்போது யசோதை கண்ணனை நோக்கி "வானிடைத் தெய்வங்கள் காண அந்தியம்போது அங்கு நில்லேல் ஆழியங் கையனே வாராய்" என்று உள்ளே வருமாறு அழைத்தாள். அவனோ விளையாட்டில் பராக்காலே உள்ளே வந்திலன். அப்போது சொல்லுகிறூளவள்—"உந்தமடிகள் முனிவர் உன்னைநான் என் கையில் கோலால் நொந்திட மோதவுங் கில்லேன்" என்று. பயலே! இப்படிநீ துருதுருக்கையாய் வர்த்திப்பதை உன் ஸ்வாமி [நந்தகோபர்] கண்டால் உன்னை வெறுமனே விடுவரா? சீறிச்சிவந்து பொடிந்து நிற்பரே. நானும் உன்னையடிக்கக் கோலிக் கையில் கோலை யெடுக்கிறேன்; ஆனாலும் என் குழகனே! அழகனே! உன்னையடிக்கக் கை வரவில்லையே யென்கிறூள். கண்ணனை ஸர்வ ஸ்வாமியென்று தெரிந்து கொண்டிருந்தமிவள் அவனுக்கும் ஸ்வாமியாக நந்த கோபனை வைத்து 'உந்தமடிகள்' என்று சொல்லியிருக்குமழகு என்னே!

### கண்ணபிரானுடைய சிறுச் சேவகங்களின் இனிமை

திருவயோத்திமா நகரில் திருவவதரித்த இராமபிரானுடையசரிதையைப்பன்னிரண்டு பிராயமளவும் நாம் ஒன்று மறியப்பெறுகின்றிலோம். விச்வாமித்திர முனிவனது வேள்வி காத்தது முதலாகவே இராமபிரானது சரிதை இராமாயணத்தில் ஆரம்பமாகின்றது. அப்போது இராமபிரானுக்குப் பன்னிரண்டு வயது. அதற்கு முந்திய சரிதைகள் தெரிய வருகின்றில. கண்ணபிரானுடைய சரிதைகள் பிறந்தவன்றே தொடங்கி எண்ணிறந்தவை. அதிலும் பன்னிரண்டு பிராயமளவும் பேரின்பமும் இன்சுவையும் வடிவெடுத்த சரிதைகள். பிராயம் முதிர்ந்த பிறகு செய்தருளின கீதோபதேசம், பாரதயுத்த நிர்வாஹம் முதலான பெருஞ்செயல்கள் கிடக்க. நம் ஆழ்வார்களின் ஈரச் சொற்களை அற்புதமாகப் பெருகச் செய்தவை கண்ணபிரானுடைய சிறுச் சேவகங்களேயன்றோ. அவனது திவ்விய சேஷ்டிதங்கள் இத்தனை யற்புதமாக அமைந்திலவென்றூல் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் இத்தனையழகு பெற்றிருக்க மாட்டாவே. ஆண்டாள் தன்னுடைய திருப்பாவைக்குக் கண்ணபிரானுடைய கதைகளை இலக்காகக் கொண்டிலளென்றூல் "கோதை தமிழ் ஐயைந்து மைந்து மறியாத மானிடரை வையம் சுமப்பதும் வம்பு" என்னும்படியான ஏற்றம் அதற்கு ஏற்றிராதே.

(தொடரும்.)

---

9. **திருவண்ணுமலை:** அண்ணுமலையார் ஆலயத்தில் அமைக்கப்பெற்றுள்ள மாணிக்கவாசகர் பந்தலில் அருணகிரிநாதர் ஆறுவது ஆண்டு திருவிழா 14–8–60 முதல் 16–8–60 வரை நடைபெற்றது. சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

7. **எண்கண்:** சுப்பிரமணிய சுவாமி ஆலயத் திருப்பணிக் குழுத்தலைவர் திரு எம். டி. தியாகராஜபிள்ளை, எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்களால் சென்ற 31–8–60 ல் திருப்பணி துவக்கிவைக்கப்பட்டது. பொது மக்களும் பிரமுகர்களும் மேற்படி விழாவில் கலந்து கொண்டார்கள்.

# திருப்பூவணம்

கூரார்வாளி சிலையிற்கோத்துக்
கொடிமதில்கூட்டழித்த
போரார்வில்லி மெல்லியாளோர்
பால்மகிழ்ந்தானிடமாம்
ஆராஅன்பில் தென்னர்சேரர்
சோழர்கள்போற்றிசைப்பத்
தேரார்வீதி மாடம்நீடுந்
தென்திருப்பூவணமே

—திருஞானசம்பந்தர்.

படைமலிந்த மழுவாளும் மானும் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளைதோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியும் தோன்றும்
நான்மறையி னெலிதோன்றும் நயனந்தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளுந்தோன்று
மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனர்க்கே

—திருநாவுக்கரசர்.

மின்னனை யாள்திரு மேனிவி ளங்கவோர்
தன்னமர் பாகம தாகிய சங்கரன்
முன்னினை யார்புர மூன்றெரி யூட்டிய
பொன்னனை யானுறை பூவண மீதோ

—சுந்தரர்.

பாண்டிநாடே பழம்பதி யென்று பாராட்டப்படுவது. அந்நாட்டில் பதினுலு பாடல்பெற்ற சிவத்தலங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று திருப்பூவணம் என்பது. பாண்டி நாட்டில் இப்பதி யொன்றே மூவர் தேவாரப்பாடல் பெற்ற தனிச்சிறப்புடையது. மற்றவை ஒருவர் அல்லது இருவரால் பாடப் பெற்றவை. மாணிக்கவாசகர் திருவாசகத்திலும் இத்தலத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிருர். இப்பதி மதுரைக்குக் கிழக்கே பன்னிரண்டு கல்தொலைவில் வையையாற்றின் கரையில் அமைந்திருக்கிறது. மதுரையிலிருந்து இராமநாதபுரம் செல்லும் நெடுஞ்சாலை இவ்வூர் வழியே போகிறது. திருப்புவனம் என்ற இருப்புப்பாதை நிலையத்திலிருந்து கோயில் அரைகல் தொலைவிலிருக்கிறது.

திருப்பூவணம் நான்கு பகுதிகளையுடையது. பழையூர், புதூர், கோட்டை, நெல்முடிக்கரை என்பன. கோட்டை என்ற பகுதியில்தான் திருப்பூவணநாதர் கோயில் இருக்கிறது. இவ்வூருக்கருகிலுள்ள மணலூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட குலசேகரபாண்டியன் இவ்விடத்தில் முடிசூட்டு விழாவில் நெற்கதிரை முடியாகச் சூட்டிக் கொண்டமையின் நெல்முடிக்கரை என்றபெயர் ஏற்பட்டது. புஷ்பவனகாசி, பிதுர்மோட்சபுரம், பாஸ்கரபுரம், இலட்சுமிபுரம், பிரமபுரம், இரசவாதபுரம் என்ற வேறு பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு.

வையையாறு இவ்விடத்தே சிறிது வடக்குதெற்காக வளைந்தே ஓடுகிறது. சுவாமி, அம்பாள் சந்நிதிகள் இரண்டும் கிழக்கு நோக்கியே இருக்கின்றன. இரண்டு சந்நிதிகளுக்கு நேரே கோபுரங்களையுடைய வாயில்கள் இருக்கின்றன. வெளிப்பிரகாரமும், இறைவன் கோயிலுக்கு உட்பிரகாரமும் இருக்கின்றன. அம்பிகையின் கோயில் வெளிப்பிரகாரத்தில் இறைவன் சந்நிதிக்கு வலப்பக்கம் அமைந்திருக்கிறது.

பெருமானின் திருப்பெயர்கள் திருப்பூவணநாதர், புஷ்பவனேசுவரர் என்பன. தேவியின் திருநாமங்கள் மின்னனையாளம்மை, சவுந்தரநாயகி என்பவை. பொன்னனையாள் என்னும் கணிகைமாதுக்காக சிவபெருமான் ஒரு சித்தராகிவந்து, இரசவாதம் செய்து பொன்கொடுக்க, அந்த தாசி அப்பொன்னல் இறைவன் திருவுருவம் அமைத்தாள். அதுவும் மிகவும் அழகாக அமைந்திருந்தபடியால் "அச்சோ அழகு", "அச்சோ பூவணமே" என்றுகூறி உருவத்தின் கன்னத்தைக் கிள்ளி அவள் முத்தமிட்டாள். ஆதலின் இறைவனுக்கு "அச்சோ அழகியபிரான்" என்றும்

பேருண்டு. கிள்ளிய அடையாளமும் சிலையில் இருக்கிறது. இவ் வரலாறு திருவிளையாடற் புராணத்தில் இரசவாதம் செய்த படலத்தில் கூறப்பட்டிருக்கிறது. அப்புராணத்தின் அர்ச்சனைப் படலத்தில் "தவசித்தர் இரதவாதம் செய்து சிவனுருவங் கண்ட எழில் நகரும்" என்று குறிக்கப்பட்டிருக்கிறது. பொன்னனையாள், சித்தர் இவர்களின் பெரிய திருவுருவச்சிலைகள் கண்கவர் வனப்புடன் இக்கோயிலில் திகழ்கின்றன. இங்குள்ள நடராஜர் சிலாவுருவமும் அற்புதச் சிற்ப வேலைப்பாடுடையது.

இத்தலத்தின் தீர்த்தங்கள் ஆறு. பிரம தீர்த்தம் வையையின் வடகரையிலும், மணிகர்ணிகை அம்மன் சந்நிதியிலும், சூரியதீர்த்தம் வடபிரகாரத்திலும், சந்திர தீர்த்தம் மேற்குப் பிரகாரத்திலும், தேவிகுண்டம் அம்மன் கோயிலுக்குள்ளும், இலட்சுமிதீர்த்தம் தேரோடும் வீதியிலும் இருக்கின்றன. வையையாற்றில் போடப்படும் எலும்புகள் மலர் அல்லது கல்லாகின்றது என்பது ஐதிகம். பல இடங்களிலிருந்து இறந்தவர்களுடைய எலும்புகள் கொண்டுவரப்பட்டு கோயிலுக்கெதிரில் வையையாற்றில் புதைக்கப்படும் வழக்கம் இன்றும் இருக்கின்றது. தர்மக்யன் என்ற அந்தணனுடைய அஸ்தி புஷ்பமானதாகத் தலபுராணம் கூறுகிறது. இத்தல விருட்சம் பலா. பங்குனியில் பிரமோற்சவமும், ஆடியில் அம்பாள் உற்சவமும் நடைபெறுகின்றன.

வையையாற்றின் மணல் எல்லாம் சிவலிங்கமாகத் தோற்றினமையின் அவற்றை மிதித்தற்கஞ்சி அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் அக்கரையிலிருந்தே சிவபெருமானை வழிபட்டனர். அவர்களுக்காக இறைவன் நந்திதேவரைச் சிறிது சாய்ந்திருக்கும்படி பணிக்க அவ்வாறே சிறிது சாய்ந்தனர். அத்தோற்றத்தை இன்றும் காணலாம். இச்செய்தியை, புட்பவனநாதர்வண்ணம் என்ற நூலில்,

செப்புமூவர் சொற்றமிழ்த்துதிக்க
விருப்பொடு வந்துவை மணற்சிவலிங்கமென
மனத்தெணிமுன்பு வடகரைக் கவர்நின்று
தமிழ் பாடுபொழுதே இடபமாமுதுகு
சாயும்வகையே செய்து முன்
மூவர்தரிசிக்க மகிழ்சேர்

என்ற பாடற் பகுதியால் அறியலாம். இப்பொழுதும் மூவர் மண்டபம் என்ற பெயரால் வையை யாற்றின் வடகரையில் ஒரு பழைய மண்டபம் இருக்கிறது. அதைச் சுற்றிலும் பல சிவலிங்கங்களும் நந்தியின் வடிவங்களும் புதையுண்டு காணப்படுகின்றன. பொன்னனையாள் மடம் என்றும், பொன்னனையாள் மண்டபம் என்றும் இரண்டு கட்டிடங்கள் இத்தலத்தில் உள்ளன. அவற்றுள் முன்னது பொன்னனையாள் சிவனடியார்களை அமுது செய்வித்த இடமென்றும், பின்னது அவள் பொருட்டு மதுரைச்சொக்கநாதர்வந்து இரசவாதம் செய்தருளிய இடம் என்றும் கூறுகின்றனர். இக்கோயிலிலுள்ள கொடுங்கைகள் திருப்பெருந்துறையிலிருப்பவை போன்று மிக்க அழகியவை.

திருஞானசம்பந்தப் பெருந்தகையார் இத்தலத்திற்கு 22 பாடல்களையுடைய இரண்டு பதிகங்கள் ஓதியருளியுள்ளார். 'பாரார் வைகைப் புனல்வாய் பரப்பிப் பன்மணி பொன் கொழித்துச் சீரார் வாரிசேர நின்ற திருப்பூவணமே" என்று வையைக் கரையில் இப்பதி யமைந்திருப்பதை அழகாகக் கூறுகிறார். 'முறையால் முடிசேர் தென்னர் சேரர் சோழர்கள் தாம் வணங்கும் திறையாரொளி சேர் செம்மை யோங்குந் தென்திருப்பூவணமே" என்றும், 'ஆரா அன்பில் தென்னர் சேரர் சோழர்கள் போற்றிசைப்பத் தேரார்வீதி மாடம் நீடுந்தென் திருப்பூவணமே' என்றும் முடிமன்னர் மூவரும் இங்கு வழிபட்டதைக் குறிக்கிறார். இன்னும், 'பூவணத்துறை ஈசனை மலர்புனைந்தேத்துவார் வினைநாசனை அடிதொழ நன்மையாகுமே' என்றும், 'பூவணந்தனைப் பரவிய அடியவர்க்கில்லை பாவமே' என்றும் இத்தலத்திறைவனை வணங்கினால் பெறும் பயனை எடுத்துச் சொல்கிறார்.

அப்பமூர்த்திகள் இப்பதிக்கு ஒரு பதிகம் பணித்துள்ளார். வையை யாற்றின் வடகரையிலிருந்தே "வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்" என்று தொடங்கிப் பாடியருளியிருக்கிறார். சிவலிங்கப்பெருமான்மீது திரிசூலம் இருப்பதை இன்றும் காணலாம். 'பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளைதோன்றும்' என்று முருகப்பெருமானையும், 'மின்னனைய நுண்ணிடையாள் பாகம் தோன்றும்,

என்று தேவியின் பெயரையும் குறிப்பிட்டிருக்கிறார். 'ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்' என்றும் அழகுபடக் கூறியுள்ளனர்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் இத்தலத்திற்கு ஒரு பதிகம்பாடி யருளியிருக்கின்றார். இவர் இப்பதியை வழிபட வரும்போது தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தரும் உடன் இருந்தனர். 'எண்ணியிருந்து கிடந்து நடந்தும் அண்ணலெனு நினைவார் வினை தீர்ப்பார்... புண்ணியனார் உறை பூவண மீதோ' என்று எந்த நிலையிலிருந்து இறைவனை எண்ணினாலும் அவர் இடர்தீர்ப்பார் என்று நமக்கு அறிவுரைபகர்கிறார். ஒரு பாட்டில் "மின்னனையாள் திருமேனி விளங்கவோர் தன்னமர் பாகமதாகிய சங்கரன்" என்று இத்தலத்து இறைவியின் திருப்பெயரைக் குறிக்கிறார்.

மாணிக்கவாசகப்பெருமான் கீர்த்தித் திருவகவலில் 'பூவணமதனில் பொலிந்திருந்தருளித் தாவணமேனி காட்டிய தொன்மையும்' என்றும், போற்றித் திருவகவலில் 'பொருப்பமர் பூவணத்தரனே போற்றி' என்றும் கூறியிருக்கிறார்.

கருவூர்த்தேவர் திருவிசைப்பாவில் திருப்பூவணத்திற்கு ஒரு பதிகம்பாடி யிருக்கின்றனர். அது ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு பாடலிலும் 'ஆவணவீதிப் பூவணங்கோயில் கொண்டாயே' என்று முடிக்கிறார். "பாம்பணைத் துயின்றோன் அயன்முதல்தேவர் பன்னெடுங் காலம் நிற்காண்பான் ஏம்பலித்திருக்க என்னுளம் புகுந்த எளிமையை என்றும் நான் மறக்கேன்" என்றும், "கடுவினைப் பாசக் கடல் கடந்து ஐவர் கள்ளரை மெள்ளவே துறந்துன் அடியிணையிரண்டும் அடையுமாறடைந்தேன் அருள் செய்வாய் அருள் செய்யாதொழிவாய்" என்றும், "செம்மனக் கிழவோர் அன்புதாவென்றுன் சேவடி பார்த் திருந்தலச எம்மனங்குடிகொண் டிருப்பதற்கு யானார் என்னுடை அடிமைதான் யாதே" என்றும், "கல்நவில் மனத்தென் கண்வலைப் படுமிக் கருணையிற் பெரிய தொன்றுளதே" என்றும் இறைவன் அவர் மனத்தைக் கோயிலாக்கொண்ட எளிமையைமிக்க ஆராமையுடன் கூறுகிறார்.

சேக்கிழார்பெருமான், திருநாவுக்கரசர் புராணத்தில் 'கொடிமாடம் நிலவு திருப் பூவணத்துக் கோயிலினுள் நெடியானுக் கறிவரியார் நேர்தோன்றக்கண்டி றைஞ்சி வடிவேறுதிரிசூலத் தாண்டகத்தால் வழுத்தினார்' என்று கூறுகிறார். திருஞானசம்பந்தர் புராணத்தில் 'புற்றுரும் பணிபூண்ட புனிதனார்தம் பூவணத்தைப் புக்கிறைஞ்சிப் புகழ்ந்து பாடினார்' என்று சொல்கிறார். சுந்தரர் அடியார்களுடனும் மூவேந்தருடனும் மதுரையிலிருந்து திருப்பூவணத்துக்கு அண்மையில் வர, தொண்டர்கள் அப்பதியைக் காட்ட 'திருவுடையார்' என்று தொடங்கி 'பூவணமீதோ' என்று பணிந்தார். முடியுடை மூவேந்தருடன் இறைவனை வணங்கினார் என்றும், அப்பதியில் சிலநாள் தங்கியிருந்தார் என்றும் சேரமான் பெருமாள்நாயனார் புராணத்தில் சேக்கிழாரடிகள் சொல்லியிருக்கிறார்.

அருணகிரிநாதர் இப்பதிக்கு மூன்று திருப்புகழ்ப் பாடல்களை அருளியிருக்கிறார். ஒரு பாடலில் "போனகசாலை யாதுலர்வாழ வீதிகள்தோறும் நனிமேவு பூவணமான மாநகர்வாழு நாதகுகேச பெருமாளே" என்று கூறுகிறார்.

திருப்பூவணம்—கந்தசாமிப்புலவர் என்பார் தலபுராணம் ஒன்று இயற்றியிருக்கிறார். அது 20 சருக்கங்களும், 1137 பாடல்களையும் கொண்டது. இவரே புட்பவனநாதர் வண்ணம், திருப்பூவணத் தலவகுப்பு, தீர்த்த வகுப்பு, மூர்த்திவகுப்பு, திருப்பூவணநாதர் உலா முதலிய நூல்களையும் பாடியுள்ளார். உலா, மிகுந்த இலக்கியச் சுவையுடையது. பூவணம் முதலிய தலச்சிறப்பும், நாயன்மார் அருமைச் செயல்களும், கோயிலில் நடைபெற்ற திருப்பணிகளும் இந்நூலில் கூறப்பட்டிருக்கிறது. "போதத் திருவுருவாம் பொன்னனையாட் கிரதவாதத் திருவுருவாய் வந்துதித்தோன்" என்று புலவர் பொன்னனையாளுக்கு இறைவன் இரசவாதம் செய்த அற்புதத்தைக் குறிக்கிறார். இத்தலத்திற்கு வடமொழியிலும் ஒரு புராணமிருக்கிறதென்பர்.

இவ்வூரில் முருகன்கோயில், பெருமாள் கோயில், மாரியம்மன்கோயில், வீரபத்திர சுவாமிகோயில், முனியாண்டிகோயில்,

# அரிவாட்டாய நாயனார்

எஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்

—சுந்தரர்.

வள்ளற் பிராற்கமு தேந்தி
வருவோ னுகலுமிங்கே
வெள்ளச் சடையாய் யதுசெய்
யாவிடி லென்றலையைத்
தள்ளத் தகுமென்று வாட்பூட்
டியதடங் கையினன்காண்
அள்ளற் பழனக் கணமங்
கலத்தரி வாட்டாயனே.

—நம்பியாண்டார் நம்பி.

பொன்னிமா நதிப்புனல் பரந்து வளங் கொழிக்கும் சோழ நாட்டிலே கணமங்கலம் என்ற சிற்றூர் உண்டு. அப்பதியில் வேளாளர் குலத்தில் தாயனார் என்பார் வாழ்ந்து வந்தார்; மிக்க செல்வம் படைத்தவர்; இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடாத்தி வந்தார்; இறைவன் திருவடி மறவாச் சிந்தையர். செந்நெல் அரிசியின் இனிய அமுதும், செங்கீரையும், மாவடுவும் சிவபெருமானுக்கு உகந்ததாக எண்ணி நாள்தோறும் படைப்பதைக் கடமையாகக் கொண்டிருந்தார். தாயனார் துன்பம் வந்தகாலத்தும் திருத்தொண்டினை விடாது செய்து முடிப்பதைத் தாம் ஏற்று மகிழத் திருவுளங்கொண்ட பெருமானார், நாயனாருடைய செல்வம் போனவழி தெரியாதபடி மாற்றினார். வறுமை வந்துற்ற போதும் தாயனார் தம் பணியில் தளர்ந்திலர். கூலிக்கு நெல் அறுத்து செந்நெல்லை இறைவற்கும், கார் நெல்லைத் தமது உணவிற்கும் பயன்படுத்தி வருவார் ஆயினார். ஒருநாள் வழக்கம்போல் தாயனார் ஒரு கூடையில் செந்நெல் அரிசியமுது, செங்கீரை, மாவடு இவைகளை வைத்து இறைவற்குப் படைக்கும் பொருட்டு சுமந்து முன் சென்றார். அவர் மனைவியாரும் பஞ்சகவியம் ஏந்திப் பின்சென்றனர். உணவில்லாமையால் உடல் வாடியிருந்தமையின் கால் தளர்ந்து தாயனார் வீழ்வராயினார். அவர் மனைவியார் அணைத்த போதும் கூடையிலுள்ள எல்லாம் நிலவெடிப்பிலே சிந்தின. "இனி அங்கு ஏன் போக வேண்டும்? சிவபெருமான் இவற்றை அமுது செய்தருளும் பேறுபெற்றேனில்லை" என்று சொல்லி கையிலிருந்த நெல் அறுக்கும் அரிவாளைக்கொண்டு தம் ஊட்டியை அரிந்து கொள்ளத் தொடங்கினர். அவ்வளவில் சிவபெருமானது திருக்கரமும், "விடேல், விடேல்" என்னும் ஓசையும் நிலவெடிப்பினின்றும் ஒருசேர எழுந்தன. தாயனார் அரிவாள் பற்றிய கையை இறைவன் திருக்கை பிடித்துக் கொண்டது.

அடியனே னறிவி லாமை
கண்டுமென் னடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங்
கமுதுசெய் பரனே போற்றி!
துடியிடை பாகமான தூயநற்
சோதி போற்றி!
பொடியணி பவள மேனிப்
புரிசடைப் புராண போற்றி!

என்று கூறிக் கைக்கூப்பி வணங்கி நின்றனர். இறைவன் இடபவாகனராய்த் தோன்றி "நீ புரிந்த செய்கை நன்று; உன் மனைவியுடன்

---

திரௌபதியம்மன் கோயில், கோரக்கர்சித்தர் கோயில், ஐயனார்கோயில், பத்திரகாளியம்மன்கோயில் முதலியனவும் இருக்கின்றன.

கோயிலில் பல கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. குலசேகரபாண்டியன் (கி. பி. 1190—1217), சுந்தரபாண்டியன் (கி பி. 1216—35) இவர்கள் காலத்திய செப்பேடுகளில் கோயிலுக்கு நிலதானம் செய்ததையும், நெல் அளக்க உத்திரவிட்டதையும் கூறப்பட்டிருக்கிறது.

அறப்பாவை அத்தற் கருள்பாலா
அளித்தாது வெட்சித் திருமார்பா
குறப்பாவை அற்பிற் புணர்வோனே
குலத்தேவ வர்க்கப் பரிபாலா
மறப்பாத கத்துற் றுழல்வேனை
மலர்த்தாள்வ ழுத்தக் கிருபையீவாய்
சிறப்பான முத்திக் கொருவாழ்வே
திருப்பூவ ணத்திற் பெருமாளே

— அருணகிரிநாதர்.

என்றும் நீங்காது நம் உலகத்தில் வாழ்வா யாக!'' என்றருளி மறைந்தனர். "இறைவன் அமுது செய்யும் பேறு பெற்றிலேன்'' என்று கழுத்தினை அரிவாளினுல் அரிதலால் அவர் **அரிவாட்டாயர்** என்னும் திருநாமம் உடைய வராயினுர்.

சேக்கிழார்சுவாமிகள் பெரியபுராணத்து இலைமலிந்த சருக்கத்தில் ஆருவதாக அரிவாட் டாய நாயனுர் வரலாற்றை 23 பாடல்களில் கூறியுள்ளனர். **கணமங்கலம்** என்ற ஊர் தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி இருப்புப்பாதை நிலையத்துக்கு வடக்கே இரண்டுகல் தொலைவிலுள்ள **திருத்தண்டலை நீணெறி** என்ற பாடல் பெற்ற தலத்துக்கு அண்மையிலுள்ளது. ஊர் அழிந்துபோய் விட்டாலும் அது இருந்த இடத்துக்கு இப் போது **கணமங்கலத்திடல்** என்ற பெயர் வழங்கிவருகிறது. தாயனுர் என்ற நாயனுர் இறைவனுக்குசெங்நெலரிசிச்சோறு,செங்கீரை, மாவடு இவைகளை ஊட்டி வழிபட்டதனுலே திருத்தண்டலை நீணெறி என்னும் தலம் **ஊட்டித்தண்டலை** என்ற பெயரால் வழங்கு கிறது. ஊட்டித்தண்ணடை என்று மருவியும் கூறப்பெறுகிறது. இங்நாயனுர் வரலாற்றி லிருந்து இறைவன் அங்கு இங்கு எனுதபடி எங்குமுளன் என்றபேருண்மையை அறிந்து கொள்கிருேம்.

தாவில் கணமங்கலத்துள் வேளாண்
டொண்மைத் தாயனுர்
நாயனுர் தமக்கே செங்நெல்

தூவரிசி யெனவிளைவ
தவையேயாகத் துறந்துணவு
வடுவரிசி துளங்கு கீரை

ஆவினிளைந்துடன் கொணரவோர்
கமரிற் சிந்த
வழிந்தரிவாள் கொண்டுண் டி யரியாமுன்னே

மாவிடுவி ளெலியு மரன்
கரமுந் தோன்றிவாள் விலக்கி
யமரர் தொழ வைத்த வன்றே

—உமாபதி சிவாசாரியார்.



பழனி பெரியநாயகி அம்மன் கோயில் மண்டபம்

# ஓசூர் சந்திரசூடேசுவரர் கோயில்

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண்மதிசூடி.
—திருஞானசம்பந்தர்.

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலியும் பிறையீர்
—திருநாவுக்கரசர்.

பித்தாபிறை சூடிபெருமானே அருளாளா
—சுந்தரர்.

துண்டப் பிறையான் மறையான்
—மாணிக்கவாசகர்.

சேலம் மாவட்டத்தில் ஓசூர் என்னும் ஊர் உள்ளது. இதற்கு அருகிலுள்ள இருப்புப்பாதை நிலையம் பெங்களூர் தான். 25 கல் தொலைவிலிருக்கிறது. ஓசூருக்கு நான்கு திசைகளிலிருந்தும் பஸ்வண்டிகள் வருகின்றன. கிழக்கே கிருஷ்ணகிரி, தெற்கே இராயகோட்டை, டெங்கனிக் கோட்டை, தர்மபுரி, வடக்கே மாலூர் முதலிய ஊர்களிலிருந்தும் இவ்வூருக்கு வரலாம். ஓசூருக்குக்கிழக்கு எல்லையில் மலைமேல் சந்திரசூடேசுவரர் என்ற சிவன் கோயில் அமைந்திருக்கிறது.

மலைமேல் உள்ள கோயிலை அடைய இரண்டு வழிகள் இருக்கின்றன. குன்றின் வடமேற்குப்பக்கம் பாறையிலே படிக்கட்டுகள் அழகாய் வெட்டப்பட்டிருக்கின்றன; 200 படிகள் இருக்கின்றன; இவ்வழியில் மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. மற்றொரு வழி தென்மேற்குப்புறமிருக்கிறது; படிகள் கல்லால் கட்டப்பெற்றிருக்கின்றன; சுமார் 180 படிகள் இருக்கின்றன.

இந்தமலைக்கு ஐந்து பெயர்கள் உண்டு. சிவபெருமான் தர்மபுருஷனுக்காக முன்னளித் தவரத்தை ஈடேற்றும் பொருட்டு விருஷபாகாரமாய் இந்த மலையில் நிலைத்ததால் விருஷபாத்ரி யென்றும், சம்பகாரணியத்தின் தெற்கு எல்லையாயும் தண்டகாரணியத்திற்கு வட எல்லையாயும் இருக்கும் இம்மலையில் சம்பக மரங்கள் நிறைந்திருத்தலால் சம்பகாத்ரி என்றும், பரமசிவனார் கைலாயத்தினின்றும் தங்க நிறமான உடம்பு உருவத்துடன் இம்மலையில் வந்து நிலை பெற்றதால் கௌதேயாத்ரி என்றும், பார்வதிதேவியாருடைய உடல் பச்சை நிறமாக இருத்தலின் மரகதாத்ரி என்றும். முத்கலர், ஔத்சாயனர் என்ற இரு முனிவர்கள் சாப நீக்கம் பெற்ற இவ்விடத்தை பத்ராத்ரி என்றும் கூறப்படுகிறது.

மலை மேலுள்ள கோயிலுக்குள் நுழைய தென்புறம் வாயில் இருக்கிறது. இறைவன் சந்நிதி கிழக்கு நோக்கியே இருக்கிறது. கோயிலைக் கோபுரம் அழகு செய்கிறது. இறைவனுடைய திருநாமங்கள் சந்திரசூடேசுவரர், சூடநாதேசுவரர் என்பன. தேவியாரின் திருப்பெயர்கள் மரகதாம்பாள், பச்சையம்பாள், பர்வதம்பாள் என்பனவாம்.

இம்மலைக்குத் தெற்கிலும் வடக்கிலும் பிரமவிஷ்ணுபர்வதங்கள் இருக்கின்றன. இத்தலத்திற்கு எட்டு தீர்த்தங்கள் உள்ளன. மரகததீர்த்தம், சாம்பவதீர்த்தம், மச்சதீர்த்தம், இராமதீர்த்தம், பாண்டவதீர்த்தம், சிவகங்கைதீர்த்தம், அனுமதீர்த்தம் என்ற ருத்ர தீர்த்தம், விஷ்ணுதீர்த்தம் முதலியன. மரகத தீர்த்தம் மலையடிவாரத்திலுள்ள அழகிய திருக்குளம். இத்தீர்த்தத்தின் மகிமையைப் பற்றி ஒரு புராணகதை உண்டு. அந்தணர் ஒருவர் இறக்கும் தருவாயில் தன் இருமைந்தர்களிடம் தாம் இறந்தபின் உடலை எரித்து சாம்பலையும் எலும்புகளையும் காசியிலே கரைத்து விடும்படி சொல்லி இறந்தார். அவ்வாறே குமாரர் இருவரும் சாம்பலையும் எலும்புகளையும் இரண்டு பெட்டிகளில் வைத்து இரண்டு போயர் கூலி ஆட்களுடன் காசிக்குப் புறப்பட்டனர். ஓசூர்க்காட்டின் வழிவர ஒருஅந்தணனை புலி கொன்று விட்டது. தந்தை சொற்காக்க வேண்டுமென்று எண்ணிய மற்றொரு மறையவன் பயணத்தைத் தொடர்ந்தான். மரகததீர்த்தத்தில் நீராடப் போனான். அந்த சமயத்தில் கூலி ஆட்கள் இருவரும் பெட்டிகளுக்குள் என்ன இருக்கிறதென்று பார்க்க விரும்பினார்கள். அவற்றைத் திறக்க மணம் நிறைந்த மல்லிகைப் பூக்கள் இருப்பதைக்கண்டு, காசி விசுவேசுவரர் பூசைக்கென எண்ணி மூடிவைத்து விட்டார்கள். நித்தியகர்மானுட்டானங்களைமுடித்தபின் பிராமணன் வர, மூவரும் புறப்பட்டுப் பல காலம் நடந்து காசியை யடைந்தனர். சேர்ந்த இரவு, அவ்வேதியன் கனவில் பத்ர



சந்திரசூடேசுவரசுவாமி மலைக்கோயில், ஓசூர், சேலம்

காசி என்ற ஓசூர் மரகததீர்த்தத்தில் எலும்பு சாம்பல்களைக் கரைத்தல் சிறப்புடையது என்று தோன்றியது. ஆனால் அவன் அதைப் பொருட்படுத்தாமல்மறுநாட்காலையில் கங்கையில் நீராடினான்; பின் பெட்டிகளைத்திறந்தான். போயர் கூலிகள் சாம்பலையும் எலும்புகளையும் கண்டு ஆச்சரியமடைந்து, மரகத தீர்த்தக்கரையில் அவை மல்லிகைப் பூக்களாக இருந்த செய்தியைத் தெரிவித்தனர். கனவில் கண்டதை அலட்சியம் செய்ததற்காக வருந்தி பெட்டிகளுடன் போயர் ஆட்கள் துணையோடு ஓசூருக்குத்திரும்பினான். ஓசூரையடைந்து மரகததீர்த்தத்தில் விதிப்படி நீராடினான். பின்னர்ப் பெட்டிகளைத் திறந்தான்; மல்லிகைமலர்களைக் கண்டான்; பெருமகிழ்ச்சி கொண்டான்; அந்த தீர்த்தத்தில் அம்மலர்களைப்பெய்தான். புலியால் இறந்த பிராமணன் ஆனைகுந்தி கிருஷ்ண கந்தர்வராயமன்னனுக்கு மகனாகப் பிறந்தான் என்றும், அம்மன்னனே மலைமேலுள்ள சந்திரசூடேசுவரர் கோயிலைக் கட்டினான் என்றும் புராணகதை வழங்குகிறது. பிரம்மாண்டபுராணத்தில் பதினான்காம் அத்தியாயத்தில் உள்ள இந்தஸ்தலபுராணம் ஓலைச்சுவடியாக இருக்கிறது. கோயிலில் சுவாமி, அம்பாள் கர்ப்பக்கிரகச்சுவர்களிலும், இன்னும் வேறு இடங்களிலும் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

இவ்வூரில்நஞ்சுண்டேசுவரர், கோட்டை மாரியம்மன், காசி விசுவேசுவரர், கோதண்டராமர், வரதராஜர், நகரேசுவரர், சங்கர நாராயணர், ஆஞ்சநேயர், தர்மராஜா, வெங்கடரமணர் முதலிய கோயில்களும் இருக்கின்றன. நாலுதிசைகளிலும் சக்கரஸ்தாபனம் செய்து அனுமார்களைப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

சிரமும் நல்ல மதிமத்த முந்திகழ் கொன்றையும்
அரவம்மல்கும் சடையான்

—திருஞானசம்பந்தர்.

# திருக்களிற்றுப்படியார்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.

158343
600 008.

(முன் தொடர்ச்சி)

சாதனம் (தொடர்ச்சி)

முதற்பொருளைத் தலைப்பட்டுணர்ந்து இன்புறுதற்குச்சிறந்த சாதனமாவது உயிர்க்குத் தொன்றுதொட்டுள்ள யான் எனது என்னும் செருக்கு அறப்பழகுதல் ஆகும்; அது சிவதன்மம், சிவயோகம், சிவஞானம் என்பவற்றில், இயன்றதொன்றில், நின்று ஒழுக உண்டாகும்—என்பவை மேலே கூறப்பட்டன. மேலும் சிவதன்மம், சிவயோகம் என்பவற்றின் இயல்பும், வகையும், பயனும் தெரிவிக்கப்பட்டன. இன்னும், ஒருவன் தன் உணர்வுக்கு முதலாக உள்ள முதற்பொருளை அதன் அருளால் தலைப்பட்டு உணர்வதே தியானம் ஆகும்; அங்ஙனம் உணர்தலால் காண்பான், காட்சி, காணப்படு பொருள் எனப்பிரித்துக் காணும் திரிபு உணர்வாகிய செருக்கு முற்றிலும் கெடுமாறு அன்பு செய்து சலிப்பற நிற்றலே சமாதி (நிட்டை அல்லது சமநிலை) எனப்படும்; இவ்வாறு நிற்பார்க்கு முன்னை வினைப்பயன் நுகர்ச்சியும் அதுபற்றிப் பின்னை வினை ஈட்டமும் இல்லை என்னும் இம்மூன்று கருத்துக்களும் சார்புணர்ந்து என்னும் திருக்குறளை மேற்கோளாகக் காட்டி விளக்கப்பட்டன.

இனி, மேற்கூறியபடி மெய்ப்பொருளைத் தெளிவுக் காட்சியால் உணர்ந்து நின்றார்க்கு வினைப்பற்று வாராமைக்குக் காரணம் கூறுகின்றார்:—

பேரின்பத்துக்குத் தடையாக மாறுபட்டு வருபவை உலகப்பொருள்கள்; அவற்றைக் கண்டு அழுந்தி நிற்றலினால் உணர்வு நிலைபெறின்றிப் பலதலைப்பட ஓடும். ஆதலால், அவற்றைக் காணாமல் முதற்பொருளைக் கண்டு, அசைவின்றி ஒன்றி நின்றால், முதல்வனே முன்நின்று உன் வினைகளை ஏன்று கொள்வான். ஏனென்றால், அவன் அருளோடு கூடியவன்; தன்னை உணர்ந்து அன்பு செய்யப் புகுவார்க்கு, யான் எனது என்னும் செருக்கை இல்லையாக்கி, அவரைத்தான் ஆம் வண்ணம் செய்வன்.

''அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்கும்—சென்று
கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும்
ஒருமகள்தன் கேள்வன் உனக்கு'' (கூ௫)

ஐம்புலனும் நீயுமாய்க்கூடி அசையாமல், முன்னெல்லாம் முதல்வன் தன் இருப்பைக் காட்டாமல் நீயே எனும்படி நின்றதுபோல, இப்போது நீ, நான் என ஒருமுதல் தோன்றாதபடி, அவனே எனும்படி ஒன்றி நின்றால், உன்னைத்தான் ஆக்கி, உனக்குமுன் நிற்பன் என்பது கருத்து. எனவே வினைப்பயன் உன்னைப் பற்றுவதில்லை; மேல்வினையும் வாராது என்றபடி.

இனிப் 'பரமுத்தி நிலையில் உயிர் உண்டா? இல்லையா?' என்னும் வினவுக்கு விடை கூறுகிறார்:

உண்டெனில் உண்டாகும்
இல்லாமை இல்லையெனில்
உண்டாகும் ஆனமையின்
ஓரிரண்டாம்—உண்டில்லை
என்னும் இவைதவிர்ந்த
இன்பத்தை எய்தும்வகை
உன்னில் அவன்
உன்னுடனே யாம் (கூசு)

பரமுத்தி நிலையில் உயிர் உண்டு என்றால், காண்பான் காட்சி காணப்படுபொருள் என்னும் பகுப்பை உடன்பட நேர்தலினால், அங்கே உலக அனுபவம் உள்ளதாவதன்றிப் பேரின்பத்தின் இல்லாமையே உண்டாகும்;

இனி இல்லை என்றால், ஆன்மா நித்தப் பொருள் என்பது கெட்டு, பெறுவான் இல்லையாகவே பேறும் இல்லையாக முடியும். இவ்விரண்டு கொள்கையும் பொருந்தாமை யின், பேரின்ப நிலையில் முதல்வன் உயிரோடு உடனாகிப் பிரிந்து தோன்றாது உயிரைத் தானாக்கி இன்பத்தில் அழுந்தி நிற்கச்செய் வன் என்பதே சுருதிகளின் துணிவு ஆகும்.

''சிந்தையுந் தானும் கலந்ததோர் கலவி
தெரியினும் தெரிவுரு வண்ணம்
எந்தையும் தாயும் யானும் என் றிங்ஙன்
எண்ணில்பல் ஊழிகள் உடனாய்
வந்தணுகாது நுணுகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே''

என்னும் திருவிசைப்பா இப்பாட்டின் பொருளை உணர்தற்குத் துணைசெய்யும். இப் பாட்டில், எந்தை என்றது திருவைந்தெழுத் தில் சிகாரத்தையும், தாய் என்றது வா என் னும் எழுத்தையும், யான் என்றது யகாரத் தையும் குறிப்பனவாதல் காண்க.

இதுவரை நிராதார யோகத்தால் எய் தப்படும் மீதானம் எனப்படும் துரிய அருணிலையையும், இன்புறு நிலையையும் கூறினார். இனி, இவ்விரு நிலைகளையும் சிவ ஞானத்தால் எய்துமாறு கூறுகிறார். பிறப்பு நிலையில் உயிரின் அறிவுக்குப் பற்றுக்கோ டாக உள்ள தத்துவங்களின் இயல்பை உணரும் உணர்வே இங்குச் சிவஞானம் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றது. அத் தத்துவங்கள் சிவதத்துவம் ஐந்து, வித்தியாதத்துவம் ஏழு, ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு எனவகையால் மூன்றாகவும், விரியால் முப்பத்தாறு ஆகவும் உணர்த்தப் படும். இவற்றின் விளக்கம் எமது சைவம் என்னும் கட்டுரைகளில் கொடுக்கப்பட்டது.

தத்துவம் முப்பத்தாறனுள் சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என்னும் ஐந்தும் சுத்த மாயையின் விருத் திகள். முதல்வன் திருவருள் இவற்றை ஆதாரமாகக்கொண்டு ஏனைய முப்பத் தொரு தத்துவங்களையும் தொழிற்படுத்தி, உயிரின் அறிவு, விழைவு, செயல் ஆற்றல் களை (ஞான இச்சா கிரியா சக்திகளை) வெளிப்படச் செய்யும். மற்றைய முப்பத் தொன்றும் தூல உடம்பு, சூக்கும உடம்பு, குண உடம்பு, கஞ்சுக உடம்பு, காரண உடம்பு (இவையே பஞ்சகோசம் எனவும் படும்) என ஐவகைப்பட்டு நிற்கும். உயிர் இவற்றைச் சார்ந்து, கூடியும் பிரிந்தும் வருத லால் அதன் உணர்வு பொருள்களை அறிந்து நுகரும்போதும், அறியாது அயர்க்கும் போதும், நனவு, கனவு, உறக்கம், பேருறக் கம், உயிர்ப்படக்கம் என்னும் ஐந்து நிலைகளை உடையதாய் மாறிமாறி விளங்கும். ஆதலால், நம் உணர்வில் ஏற்பட்டுவரும் மாறுதல்களுக் குச் சார்பாக உள்ள இத் தத்துவங்களின் தனித்தனிச் செயல்களையும், இயல்பையும் கேட்டுச் சிந்தித்துத் தெளிதலே தத்துவ ஞானம் எனப்படும். தத்துவ ஞானம் உடை யோர் ஆன்மாவின் உண்மையை அறியப் பெறுவர் ஆதலால், அவர் பிறப்பாகிய குற் றத்தை நீக்கிக் கொள்வர் என்கிறார் ஆசிரி யர்:—

தூல உடம்பாய முப்பத்தோர் தத்துவமும்
மூல உடம்பாய முதல்நான்கும்—மேலைச்
சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பவமாம் பரிசறுப்பார் (கஎ)

இனி, மேற்கூறியபடி தத்துவங்களைப் பற்றி ஆராயும்போது, அவற்றின் எண் ணிக்கை, செயல், தோற்ற ஒடுக்கமுறை என்பவற்றைப்பற்றி நூல்கள் பலபடப் பேசுதலின், அவற்றையே பெரிதும் மேற் கொண்டு ஆராய்ந்து கொண்டிருப்பது வீண் செயல்; ஆன்ம உணர்வு சித்தத்தைச் சார்த லால் தோன்றுவது சிந்தனை. அச் சிந்தனை யைப் பிறபொருள்களில் செல்லவிடாது தடுத்து முதல்வன் மலரடிக்கீழ் வைத்தால், ஆன்ம உணர்வு சித்தத்தைப் பற்றாது முதல் வன் திருவருளையே பற்றிப்பின் முதல்வனோடு ஒன்றும். சித்தம் தூது போல்வது. அதனை முன்போக்கித்தான் பின்சென்றால், முதல்வன் தனக்கு எளிவந்து அருள்செய்வன். (கஅ)

முதற் பொருளைத் தலைப்படுதற்கும் தலைப்பட்டபின், மாறா இன்பப்பேரா இயற்கை எய்துதற்கும் அடிப்படைச் சாத னம் ஆசை அறுதலே ஆகும்; அதுவும் ஈசன் அருளால் வருதற்கு உரியது.

## ச. அணைந்தோர் தன்மை

உடம்போடு கூடியுள்ளபோதே உடம் பிறந்து நின்றாற்போல ஒருவனுக்கு ஆசை அற்றால், அவன் உண்மையில் உடம்பை

விடும்பொழுதும் அவனுணர்வு யாதேனும் ஒரு கருவைப் பற்றிப் பிறத்தல் இல்லை ஆகும்:

"சாம்பொழுதும் ஏதும் சலமில்லை; செத்தாற்போல் ஆம் பொழுதிலேஅடைய ஆசையறில்"

ஆசையறுதல் என்பது தான்பணியை நீத்தல் என்னும் சோம்புதற்கு நூல்களால் எடுத்துக் கூறப்படும் சாதனம் ஆகும். இதுவே, நூல்களால் கூறப்படாத வீட்டு நெறிக்கும் உரியதாகி அங்கும் சாதகற்குத் துணையாகும்.

திருவள்ளுவர் "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" என்னும் அருமைத் திருக்குற ளால் இந்தப் பேருண்மையினையே கூறியுள் ளார். (௩௬,௪௦)

முடித்துக்கூற வேண்டும் எனின், உயிர்க்குச் சார்பாக உள்ள திருவருளில் வைத்துள்ள இச்சையைச் சிறிது மாற்றினால், அந்தக் கரணங்களும் அவற்றின் தொழிற் பாடும் விரைந்துவந்து கூடும். அதனால், வியாபக உணர்வைத் தலைப்படுதல் இல்லை யாகிப் பிறப்பு உளதாகிவிடும். (௪௧)

முதல்வனை அணையப் பெற்றோர் நுகர் வினை (பிராரப்தம்) பற்றித் தீதுற நேரின், அவரை அம்பிகை பாகனே தீதுறாமல் காத் தருள்வன். (௪௨, ௪௩)

**முதல்வனை அணைந்தோர் செய்யும் பூசை**

தம்மிற் சிவலிங்கம்
　　கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர்
　　தாமாட்டித்—தம்மையொரு
பூவாக்கிப் பூவழியா
　　மற்கொடுத்துப் பூசித்தால்
ஓவாதே யாங்கே
　　உளன் (௪௪)

தம் உணர்வில், (சிவத்திற்கு உருவாக உள்ள) திருவருளைக் கண்டு, அத்திருவருள் வழி நின்று, அக்காட்சி காரணமாகத் தமக்கு உளதாகும் மெய்யன்பே திருமஞ்சனமாக முதல்வனுக்குத் திருமுழுக்குச் செய்து தம்மையே மலராக முதல்வன் திருவடியில் அர்ப்பணம் செய்வர் பெரியோர். இவ்வாறு ஞானத்தால் தொழுவர்க்கு அவரையே தனக் குத் திருமேனியாகக் கொண்டு சிவன் அங்கே எப்பொழுதும் விளங்கி நிற்பான், ஆதலால் வாதனாமலம் என்பது அவர்களை அணுகாது (சிவனை மறப்போர்க்கு விளக்கு அற்றம் பார்க்கும் இருள்போல, யான் எனது என் னும் செருக்கு வந்தே சேரும்.)

**தன்னைப் பெறுதல் என்பதன் பொருள்:**

தன்னைப் பெறுவதற்கு மேலாக ஒரு பேறும் இல்லை என்பது நூல்களின் துணிபு. ஆனால், தன்னைப் பெற்றவன் யாரோ எனின், முதல்வனுடைய திருவருளைச் சார்தலினால், எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடங்கக் கொண்டு, தன்னை அதுவரை அகப்படுத்தி நின்ற பாசத்தைப் பற்றாமல், யானே உலகெல் லாம் ஆயினேன் என வாமதேவ முனிவர் கூறியபடியும், கண்ணபிரான் அருச்சுன னுக்கு அறிவுறுத்தியபடியும் எல்லாமாய் நிற்கப்பெறுதல் ஆகும். இதுவே, அணைந் தோர்பாற் காணப்படும் சிவயோகம் ஆகும். பரதந்திரம் சுதந்திரம் என்பவை:

பிறபொருள்கள் வயப்பட்டு அவத்தை யுறுதல் துன்பம் ஆகும்; தன்வயத்தனாகவே இருத்தல் இன்பமாம் என ஆகமங்கள் கூறு கின்றன; ஆதலால், கருவி கரணங்களின் வசப்படாமல் இருந்தால் சத்திமயமாக உள்ள முதல்வன் உன் உடனாக நிற்பன்.

கரணங்களுடன் கூடியுள்ளபோதே கரணங்களைப் பற்றாமல் திருவருளைப்பற்றி அருளாகவே நிற்கப்பெறுவோரே யோகபரர் ஆவர். எந்தப்பொருளாலும் அமைதியுறாத அந்தக் கரணங்களோடு தொடக்குண்டவர் பிறப்பிறப்பு அறாதவர் ஆவர். (௪௭)

முத்தர்கள் முதல்வனைத் தம் அகத்தே உன்னுவர்கள் அண்டங்கடந்து அண்டத்தை அகப்படுத்தி மோலோங்கும் முதல்வனை நம் போன்ற முத்தர்கள் எப்படி மனத்தே அடக் கக்கூடும் என்றால், அளப்பரிய ஆலமரத்தை அடக்கி நிற்கும் அதன் விதையைப்போல, இவர்களும் முதல்வனைத் தம்மகத்தே அடக்கி நிற்பர் எனக்கொள். (௪அ)

எல்லா உலகமும் முதல்வனுக்கு வடிவ மாகவும் இருக்கையாகவும் அமைதலால், உலகில் உள்ள எப்பொருள்களையும் முதல் வனாகக் கண்டு வழிபடுவர். இவ்வாறு புறத்தே முதல்வனைத் தெளியக்கண்டு வழி படுவார்க்கு மலவாதனை தீரும். திருக்குறிப்

புத் தொண்டர், அரிவாட்டாயர், ஏயர்கோன் கலிக்காமர், மூர்த்தியார், மூர்க்கர் என்னும் உண்மை நாயன்மார் இறைவனைப் புறத்தே சிவலிங்கம் முதலிய திருமேனிகளில் தெளியக் கண்டு பெருநெறி பற்றி ஒழுகினமையால் தான் வாதனையை மாற்றிக்கொண்டார்கள்; பொய்யான உலகநெறிபற்றி அன்று. (சகூ, ருo).

முதல்வனை அகத்தும் புறத்தும் கண்டு வழிபடுதற்கண் ஞான நெறிபற்றி ஒழுகுதலால், அல்லது பத்திநெறிபற்றி ஒழுகுதலால் யான், எனது என்னும் நினைப்பு அறப் பெறும்போது, உன்கண் முதல்வன் தன் அருட்சத்தியுடன் எழுந்தருள்வன். ஆதலால் இரண்டு நெறிகளில் எதையேனும் பற்றி நான் அழியும்படி நில். (ருக). கண்ணப்பர், சேந்தனர், மங்கையர்க்கரசியார் என்போர் செயல்களில் வைத்து அன்பின் இயல்பை உணர்ந்துகொள். (ருஉ, ருந, ருச.)

அன்பால் அகங்குழைந்து நிற்பதே முத்திக்குச் சிறந்த சாதனமாம்; தீர்த்தம், தியானம், அர்ச்சனை முதலியன அல்ல என்க. (ருரு)

(தொடரும்)

---

**அவிநாசி:** முருகன் ஆடிக்கிருத்திகை உற்சவ எட்டாவது ஆண்டு நிறைவு விழா 14-8-60 ல் நடைபெற்றது. சுவாமி வீதிஉலாக்காட்சியும், இன்னிசையரங்கும், பால் காவடி ஊர்வலமும், சொற்பொழிவும் நடைபெற்றன.

**திருப்புகலூர்:** அக்கினீசுவர சுவாமி கோயிலில் 1-7-60 முதல் திருவாடானை ஐயாமணிசிவம் அவர்கள் தலைமையில் நடந்துவரும் சிவாகம சித்தாந்தப் பயிற்சி வகுப்பை முன்னிட்டு 12-8-60, 13-8-60 இருதினங்களிலும் "உயிர் அணுநிலை", 'பதிமுதுநிலை' என்னும் பொருள்பற்றி திரு. ஆறுமுகநாவலர் அவர்கள் சொற்பெருக்காற்றினர்கள்.

**மணப்பாறை:** நல்லாண்டவ சுவாமி கோயிலில் 12-8-60 ல் ஆடித்திருவிழா நடைபெற்றது. இன்னிசை யரங்கும் சொற்பொழிவும் நடைபெற்றன.

**பழனி:** தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக மகோற்சவம் 25-8-60 ல் தொடங்கி 29-8-60 ல் நடைபெற்றது. இன்னிசை அரங்குகளும், சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

**சென்னை-மயிலாப்பூர்:** கபாலீசுவரர் கோயிலில் 10-8-60 முதல் 21-8-60 வரை திருமுறைத்திருவிழா நடைபெற்றது. பன்னிருதிருமுறைப் பிரசங்கங்கள் தினசரி 6-30 மணிக்கு தொடங்கி நடத்தப்பெற்றது. 10-8-60 அன்று தொடக்கவிழாவிற்கு அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ்., அவர்கள் தலைமை வகித்தார்கள். முன்னாள் உயர்மன்ற நீதிபதி திரு. சுப்பிரமணிய நாடார் அவர்கள் முதல் திருமுறை பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள். 21-8-60ல் பன்னிரு திருமுறைப் பூர்த்தி விழாவும், திருமுறை ஊர் வலமும் நடைபெற்றன.

---

## வேண்டுகோள்

'திருக்கோயில்' சந்தாதாரர்கள் மூன்றுவது ஆண்டு கையொப்பத் தொகையை 1960 செப்டம்பர் திங்களுக்குள் ஆணையர், அறநிலையத்துறை, சென்னை-6 என்ற முகவரிக்கு பண அஞ்சல் மூலமாக (பண அஞ்சல் கழிவுத் தொகையைக் கழிக்காமல்) அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—ஆசிரியர்.

# ✳ நவதிருப்பதி அநுபவம் ✳

திரு. K. பட்சிராஜன். B.A., B.L.

ஆழ்வாரது நாயகித் தன்மையின் பக்குவத்தைக் காண எம்பெருமான் கொண்ட விழைவும் விரைவும் தோற்றும் இடங்கள் தாம் திருப்புளிங்குடி, திருவரகுணமங்கை, ஸ்ரீ வைகுண்டம் என்னும் திருப்பதிகள் என்றும், அப்படித் தாம்கொண்ட விழைவையும் விரைவையும் எம்பெருமான் தானே ஆழ்வாருக்கு உணர்த்தினன் என்றும், அத்தலங்களிலுள்ள மூர்த்திகளை ஆழ்வார் அனுபவித்ததை விளக்குவதுதான் "பண்டை நாளாலே" என்னும் பதிகம் என்றும் முன்னே கண்டோம். அப்படி அவன் காட்ட ஆழ்வார் கண்டகாலம் எது? ஆழ்வாரது அப்போதைய மனநிலை என்ன? என்னும் அவை தெரிந்தால் இத் தலங்களில் ஆழ்வார் பெற்ற அனுபவங்களை நாம் நன்கு புரிந்துகொள்ள இயலும்.

ஆழ்வார் திருவாக்கில் இப்பதிகம் தோன்றிய காலத்தே அவருடைய திருவுள்ளம்

"கொண்ட பெண்டிர் மக்கள்
உற்றார் சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டதல்லால்
காதல் மற்றுயாதும் இல்லை
எண்திசையும் கீழும்மேலும்
முற்றவும் உண்டபிரான்
தொண்டரோமாய் உய்யலல்லால்
இல்லைகண்டீர் துணையே"

என்று அவனையன்றி இவ்வுலகில் உள்ள அனைத்துறவும் நிலையற்றவை. ஆத்மாவுக்கு எம்பெருமான் ஒருவனே உண்மையான நிலைத்த உறவினன் என்ற உண்மையைத் தாம் உணர்ந்து, அதனை உலகும் உணர்ந்து உய்ய வேண்டும் என்று உலகுக்கு உபதேசித்த நிலையிலிருந்தது. "கொண்டபெண்டிர்" என்று தொடங்கி துணையும், பொருளும், அரணும், சதிரும், இன்பமும், சரணும் அவன் கழலையன்றி வேறில்லை என்று கூறி முடிவில் 'கண்ணனல்லால் இல்லை கண்டீர் சரண்', 'நம் உடைமை உண்டேல் அவனடி சேர்த்து உய்ம்மினோ', இதின்மேல் எண்ண வேண்டியது ஒன்றுமில்லை; அவன் ஒருவனே நிருபாதிக பந்து என்ற உண்மையைப் பரக்கப் பேசி முடிந்த நிலை, இந்நிலையிலே காணும் எம்பெருமான் தன் திருப்புளிங்குடியாதி அவஸரத்தை ஆழ்வார் திருவுள்ளத்துக்கு விஷயமாக்கியது.

எல்லாம் அவனே என்றுகொண்ட ஆழ்வார் அவனே இவர் பக்குவத்துக்குப் பரிந்து வந்துகிடந்த இடமான திருப்புளிங்குடியில் இப்போது அவனைக் கிட்டி நிற்கிறார். ஆனால் அவன் வாய் திறக்கவும் இல்லை. இவர் இருந்த பக்கம் திரும்பி நோக்கவும் இல்லை. அந்த நிலையில் உள்ளத்தின் ஆழத்திலே பொங்கும் குமுறலோடும், தான் நாயகி என்ற துணிவில் ஏற்பட்ட ஓர் உரிமையோடும் எழுந்த பதிகம் தான் "பண்டை நாளாலே" என்று தொடங்கும் திருவாய்மொழி. இனி பதிகத்தின் பாடல்களின் பொருளை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

"பண்டை நாளாலே......கிடந்தானே"

தெளிந்த நீர் திரை எறியும் பொருநைக் கரையிலே சோலைகள் சூழ்ந்த திருப்புளிங்குடியில் சயனம் கொண்டவனே! நீண்டகாலமாக நிகழ்ந்த உன் திருவருளையும், பிராட்டியின் திருவருளையும் துணைகொண்டு நின் கோயிலிலே பரிசர்யை (திருவலகிடுதல் முதலான கைங்கர்யங்களைப்) பண்ணிப் பல்வகையிலும் குடிகுடியாக ஆட்செய்து அதுவே பொழுது போக்காக வாழும் தொண்டர்களுக்கு அருளி உன் ஒளி பொருந்திய திருவாய் திறந்து ஒரு வார்த்தை அருளிச் செய்யவேணும். உன் தாமரைக் கண்களை மலர விழித்துக் கடாக்ஷிக்கவேணும் என்பது பாடலின் திருப் பொருள்.

"தெண்டிரை.. கிடந்தானே.

என்ன உறக்கமா? மயக்கமா! சோலையின் ரமணீயம் ஆழ்த்திவிட்டதா? சோலைக்கே

தண்மைபருளும் பொருணையின் குளிர்த்தி யனுபவமா? அல்லது தெள்ளிய நீரை மெல்லிய ஓசையோடு எறிகின்றதே அலை — அந்த நாதத்தில் லயமா.

"பண்டை நாளாலே......கொண்டு"

"நேற்று முன்னுளில் வந்த உறவல்லவே மிக நெடும் பண்டைக்கால முதல்" அருள் பெற்றவர்களாயிற்றே. உன் அருள் பெற்றவருக்கும் நீமுகம் கொடாதிருக்கலாமா? உன்னருள் மட்டுமா? பங்கயத்தாள் அருளுமல்லவா பக்கத்துணையாய் நின்றிருக்கிறது. அதோ உன் பாதத்தருகே அமர்ந்திருக்கிருளே அவளையே கேள் அவளருள் எங்களுக்குண்டா இல்லையா என்று. அவளருள் துணையாகத்தானே உன்னருள் கிட்டிற்று. இவ்விருவிரு அருளும் பெற்றுமா உன் நோக்கம் பெருமலிருப்பது? என்று கேட்கிருர் ஆழ்வார். இறைவன் அருளுக்கு அடிப்படை பிராட்டியின் அருள் நோக்கம் என்பதும், அந்த அடிப்படையில் அவனைப்பற்றினல் நிச்சயம் பலன்கிட்டும் என்பதும் வைணவ சமயக் கொன்கை. ஒருக்கால் எம்பெருமான் பிதா என்ற முறையில் நம் தவறுக்கு நம்மை ஒறுக்க முற்படின் தாயான பிராட்டி முன்னின்று நமக்குப் பரிந்து பேசி ரக்ஷிப்பாள் என்பதும் சமயத் துணிபு. இப்படிப்பிராட்டி முன்னுகப் பற்றுகை புருஷகாரம் எனப்படும். இங்கு இரண்டு அருளும் உண்டு என்கிருர்.

"நின்கோயில்சீய்த்து...தொண்டரோர்க்கருளி"

இவ்வருள் உண்டு என்று திமிர்த்துத் திரிந்தவரில்லை. பொழுதுபோக்கெல்லாம் நின் கோயிலிலே கைங்கர்யம் செய்கையே என்று கொண்டவர்கள். திருவலகிடுதல் முதலாகப் பலபடியாகக் கைங்கர்யம் செய்தவர்கள். இப்போது மட்டுமல்ல. பண்டுதொட்டே ஆட்செய்பவர். குடியில் ஒருவர் இருவர் மட்டுமல்ல. குடிகுடியாக ஆட்செய்பவர். "நின் கோயிற் பொறியாலே ஒத்துண்டு நின்று குடிகுடியாட் செய்கின்றவர்"கள். அடியேனுக்காக அல்லாவிடினும் இத்தொண்டர்களுக்காகவேனும் அருள்பாலித்து விழித்து நோக்காயா? என வினவுகிருர் ஆழ்வார்.

"சோதிவாய்திறந்து...நோக்காய்"

உன்திருவாயின் செய்ய சோதி உன் அதரங்களிலே மின்னிடுகின்றது. எனினும் அந்தச் செம்மலர்முகை நன்கு விரிந்து உள்ளே ஒளிரும் பவள ஒளி காணவும் உன் திருமிடற்றினின்று ஒரு அமுதமொழி கேட்கவும், உன் முறுவலைக்காணவும் துடிக்கின்றோம். "உன் கோல நறும் பவளச் செந்துவர் வாயினிடைக் கோமள வெள்ளி முளைபோல் சில பல் இலகும்" அழகை நாங்கள் ஸேவிக்க வேணும். அதற்குத் மேலாக உன் அருள் நோக்கம் காண ஏங்குகின்றன எம் கண்கள். அந்த நோக்கல்லவா எங்களுக்கு தாரகம். நீ வாய் திறந்து ஒரு வார்த்தை அருளிச் செய்ய வேணும் வார்த்தையில் கூறமுடியாதபொருள்களைக் குறிப்பாக உன் திருக்கண்களாலே உணர்த்தித் தலைக்கட்டவேணும் என்று பிரார்த்திக்கிருர்' ஆழ்வார். நாயகியல்லவா. வாய்ச்சொற்கள் பயனிலவாய் கண்ணுேக்கினல் உணர்பவளாயிற்றே. எம்பெருமான் திருக்கண்ணுேக்கம் பெற்றனுபவித்தவர் அது பெருதபோது படும் ஏக்கம் சொல்லவரிய தொன்று. இராமன் அயோத்தியைவிட்டு வனம்புகப்புக்க காலத்தே அச்செய்திகேட்டு வருந்திய அவ்வூர் மகளிர் நிலையைவருணிக்கும் கவி "செந்தாமரைத் தடங்கண் செவ்வியருள் நோக்கம் அந்தோ பிரிதுமோ! ஆ! விதியே! ஓ!' என்பார்" என்று அவர்கள் ஏக்கத்தை வருணிப்பர். இராமன் பிரிவைக் காட்டிலும் அவன் தாமரைக்கண் அருணுேக்கப் பிரிவு காணும் அவர்களுக்குப் பொறுக்க அரிதாயிற்று. இறைவன் திருக்கண் நோக்கின் தன்மை இது. இவ்வாழ்வார் தாமே அந்நோக்கைப் பெற்று அம்மகிழ்ச்சியிலே "பெருங் கேழலார் தம் பெருங்கண் மலர்ப்புண்டரீகம் நம்மேல் ஒருங்கே பிறழவைத்தார் இவ்வ காலம்" என்று பாவிப் புகழ்ந்ததை முன்னே கண்டோமல்லவா ?

" **திருப்புளிங்குடிக் கிடந்தானே :** இப்படி அடியோங்கள் வேண்டியும் ஒன்றும் கேளாதாய்ப் போலே வெறுமனே கிடக்கின்றவனே. இந்த ஆர்த்த நாதம் காதில் விழவில்லையா என்று வினவுகிருர் ஆழ்வார்.

இப்பாடல் வியாக்கியானத்திலே இரண்டு ஐதிஹ்யங்கள் இடம் பெறுகின்றன.

திருக்கண்ணமங்கை ஆண்டான் என்ற ஒரு பக்தர். இவர் எம்பெருமானே உபயா

உபேயம். நாம் ஒரு முயற்சியும் செய்ய வேண்டியதில்லை. ஒரு துரும்பு நறுக்கக்கூடத் தேவையில்லை என்று ஸ்வயத்னமெல்லாம் விட்டவர். அவர் ஒருநாள் பகவான் ஸன்னிதியில் உள்ள ஒரு மகிழ மரத்தடியில் உள்ள சருகுகளைத் திருவலகிடா நிற்க. அவர் கூடவே வாசித்தும் நாத்திகனான ஒருவன் இடக்காக அவரை நோக்கி "சருகை அலகிடுவானேன்? பகவானே உபாயம். நாம் வேறொருவகையில் பலன் எதிர்பாராதவர். அப்படியிருக்க இதற்குப் பலன் என்ன?" என்று கேட்டான். ஆண்டான்தான் திருவலகிட்ட இடத்தையும், இடாத இடத்தையும் காட்டி இவ்விரண்டிடமும் உன் கண்ணுக்கு ஒன்றாய்க் காண்கிறதா? அலகிட்ட இடம் மற்றையதைவிட சித்தமாக இல்லையா? இந்தத் திருவலகுகைங்கர்யம் உபாயகோடியில் சேர்ந்ததன்று அவன் உகந்தருளின இடம் சுத்தமாகை ஒன்றே பிரயோஜனம் என்றருளிச் செய்தாராம். இதனால் தம் செயலால் இறையருள் பெற்றவர் தம் வீட்டைப் பேணுநிற்பர். பிராட்டியடியாகப் பகவத்க்ருபைக்குப் பாத்திரரானவர் அவன் உகந்தருளின நிலங்களைப் பேணுநிற்பர் என்ற உண்மை விளங்கும் என்பர் பெரியோர். இங்கும் பங்கயத்தாள் திருவருளும் என்றமையின் "நின் கோயில் சீய்த்து" எனப்பட்டமை காண்க.

மற்றொரு ஐதிஹ்யம் வருமாறு: முன்னாளில் திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களை அபிநயத்துடன் பாடியனுபவிப்பர்கள். அப்படி அபிநயம் பிடிப்பவர்களை அரையர் என்றழைப்பார்கள். ஒருக்கால் ஒருகோஷ்டியில் தேவப்பெருமான் அரையர் என்பவர் இப்பாடலுக்கு அபிநயம் பிடிக்கையில் "தாமரைக் கண்களால் நோக்காய்" என்றவிடம் வந்தபோது நோக்காய் என்ற பதத்தில் லயித்து "நோக்காய்!" "நோக்காய்" என்று பன்முறை பாவத்தோடு கூறினராம். அவர் சொல்லின் குழைவும், ஏக்கமும், அவர் அபிநயமும் கேட்டவர் மனத்தை உருக்க, கோஷ்டியிலிருந்த ஒரு பக்தர் திருவரங்கப் பெருமாள் அரையர் இதைக்கேட்ட பகவான் உள்ளமும் நாம்படும்பாடுதானே இப்போதுபடும். இப்படி இவர் குறைப்படும்படி பெருமாள் இவருக்கு என்ன செய்தார்? என்று எண்ணி உடனே எழுந்து அரையரை நோக்கி "என்ன கடாக்ஷம் இல்லை என்று இப்படிப்பெருமாள் திருவுள்ளம் கன்றும்படி குறைப்படுகிறீர் காணும்? உமக்குப் பிள்ளைகளில் குறைவைத்தானா? ஐச்வர்யத்தில் குறைவைத்தானா? நல்ல பாடல் தந்ததில் குறையா? உம் சாரீரத்தில்தான் குறைவைத்தானா. பின் என்ன செய்யவில்லை என்று அவன் திருவுள்ளம் கன்றும்படி இப்படி நோக்காய் நோக்காய் என்றுபடுகிறீரே!" என்று கூவினராம். இக்கதை பிரபந்தங்களை பக்தர்கள் எப்படி அநுபவித்தார்கள் என்பதை ஓரளவு நமக்குணர்த்துகின்றதல்லவா?

"குடிக்கிடந்து ஆக்கம் செய்து...கிடந்தானே"

எங்கும் கொடிகள் கட்டப்பெற்ற அழகிய மதில்களால் சூழப்பெற்றதும், சுற்றிலும் குளிர்ந்த வயல்களையும், சோலைகளையும் உடையதுமான திருப்புளிங்குடியிலே சயனித்திருப்பவனே! வழிவந்த குடிக்கு ஒத்த செயலை உடையவராய் உனக்கே அற்றுத் தீர்ந்து உனக்கு அந்தரங்க கைங்கர்யங்களை செய்பவராய் உன் திருவடிக்குத் தப்பாதே, அடிமையில் எவ்வித கொத்தையுமில்லாதே உன்னை வழிபடுகின்ற அடியவர்களாகிய எங்களுக்கு அருளி, நீ முன்பொருநாள் இப்பூமிப்பரப்பையெல்லாம் அளக்க நீட்டின திருவடித்தாமரையை எங்களுக்குச் சூடாமணியாக எம் தலையிலே சூட்டியருளவேணும் என்பது பொருள்.

"குடிக்கிடந்தாக்கம் செய்து"...வழிவருகின்ற அடியரோர்"

நாங்கள் எவ்வகையிலும் பழுதுபட்டவர்களல்ல. "ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்" என்று சொல்லும்படியன்றோ எம்பரம்பரை. மேலும் மேலும் வந்த குடிக்கு புகழ் பெருகச் செய்யுமவர்களே அன்றி குடியின் புகழ் மாசுண்ணும்படி ஒருபோதும் நடவாதவர்கள். உனக்கே அற்றுத் தீர்ந்தவர்கள். "தீர்ந்த அடியவர்" என்னும் பெயர்க்கு லக்ஷ்யமாயிருப்பவர். உன் திருவடி கைங்கர்யத்தில் என்றும் ஒரு குறைவு தோற்ற நடவாதவர்.

"உன் பொன்னடி...அடியரோர்"

நீ காலால் கீறின வரை தாண்டாதே நிற்கும் அடியவர், தம் மனோரதத்துக்கு நேர்மாறாயினும் உன் அடிக்கோடு மாறாத அடியவர். தம்மனோரதம் நிறைவேறாது போயினும் அதில் கவலை கொள்ளாராய் இப்படி ஒரு

கைங்கரியத்துக்கு உன் திருவடியால் நிலம் சிறப்பெற்றோமே என்று மன நிறைவும் மகிழ்வும் கொள்ளும் அடியவர் ஸ்ரீபரதாழ்வானைப் போன்றவர்கள்.

யாம் வேண்டுவது ஒன்றுதான். உன் திருவடியை எங்கள் தலைமேல் வைத்தருள வேணும். உன் திருவடி கைங்கர்யத்தாலே படியுண்டது எங்கள் கேசம். பின்னி முடித்த கொண்டைக்குப் பூச்சூட்டுவாரைப் போலே எங்கள் தலையிலே உன் திருவடியைச் சூட்டியருளவேணும். 'கோலமாம் என் சென்னிக்கு உன் கமலமன்ன குரைகழலே' என்று அடியேன் முன்பே பிரார்த்தித்திருக்கிறேன். அக்குறை நிறையவேணும். இதில் உனக்கு ஒரு சிரமமுமில்லை. "நின்னில் சிறந்த நின் தாளிணையவை" ஆதலால் அத்திருவடி எங்கள் தலைக்கு அணியாக நீளுவதில் அவற்றுக்குத் தடையேதும் இருக்க முடியாது. அன்று ஒருநாள் மாவலியிடம் நீரேற்றபோது நடந்ததை நினைந்து பார். இப்பூமிப் பரப்பனைத்தையும் அளந்துகொண்ட உன் திருவடி இன்னும் நீண்டுகொண்டேயிருந்தது. மேலும் நீளாதபடி அதை நீதானே குசையிட்டு அடக்கினாய். நீளுவதில் அதற்கு அருமையில்லை அதன் நீளத்தை அடக்குவதுதான் உனக்கருமை. எனவே எம்தலைக்கு அணியாக அத்திருவடி நீளும்படி அநுமதிக்கவேணும். அதற்குக் குசையிட வேண்டாம். அன்று யாவர் தலைக்கும் அணியாய் நின்றதே அவ்வடி. அவர்கள் எல்லோரும் அதை அணியாகச் சூடத் தகுதி பெற்றவர்களா? உன்னோடு எதிரம்பு கோத்தவர், உன்னை இகழ்ந்தவர், உன்னை ஒழிய வேறு பரதெய்வம் உண்டென்று கொண்டவர். எல்லாவற்றுக்கும் மேலாக ஈச்வரோஹம் நானே பரம்பொருள் என்று அகங்கரித்தவர்கள் இவர்கள் தலைக்குமல்லவா அணியாயிற்று உன் திருவடி. அவர்களிலுமா நாங்கள் தண்ணியர்? என உரிமையோடு வினவுகிறார் ஆழ்வார். தான் ஒருவனாக இரப்பதிலும் பலர் கூடியிரந்தால் பலன்கிட்டும் என்று கருதி "அடியரோர்" என்று பிறரையும் கூட்டிக் கொள்கிறார்.

இவ்விடத்திலே வனம்புக்க இராமபிரானை மீள அழைக்கச் சென்ற பரதனை உவமையாகக் காட்டுவர் ஆசார்யர்கள். "தான் ஒருவன் போக அமைந்திருக்க நாம் ஒருவனுமேயன்றிப் பலர் கண்ணநீர் கண்டால் மீளாரோ என்று ஆனை குதிரையகப்படத் திரட்டிக்கொண்டு போனானாயிற்று. பிரிவாற்றாமைக்குத் தன்னில் குறைந்தார் ஒருவரும் இல்லை பரிகரத்தில்'' என்பது ஈடுவியாக்கியானம்.

> ஆவும் அழுத அதன் கன்றழுத அன்றலர்ந்த
> பூவும் அழுத புள்அழுத கள் ஒழுகும்
> காவும் அழுத களிறு அழுத கால்வயப்போர்
> மாவும் அழுதனவான் மன்னவனை மானவே''

என்பது இராமன் வனம்புகப் போகிறான் எனக்கேட்ட திர்யக்குகள் தாவரங்களின் நிலை கூறும் கவி கம்பன் வாக்கு.

"கிடந்த நாள் கிடந்தாய்...கிடந்தானே''

அழகிய புளிங்குடி என்னும் தலத்திலே பள்ளிகொண்டருளியவனே. என்றோ பள்ளிகொண்ட நீ இன்னும் பள்ளிகொண்டிருக்கிறாய் உன் திருமேனி வருந்த. இப்படி எத்தனை காலம் கிடக்கப் போகிறாய்? இடையிடில்லாமல் தொடர்ந்து உன் திருவடிக்கீழ்க் குற்றேவல் செய்துவரும் பழவடியோமுக்குக் கிருபைபண்ணி, பரந்த தாமரை போன்ற உன் திருக்கண்களை விழித்து, உன் கிடக்கையினின்றும் எழுந்து உன்னோடு நீங்காது உறையும் பங்கயச் செல்வியும் நீயுமாக, பரந்த மூவுலகும் கண்டுதொழுமாறு வீற்றிருந்து இருவருமாகச் சேர்ந்த சேர்த்தியிலே சேவை சாதிக்கவேணும் என்பது பொருள்.

" கிடந்தநாள்...அசைய "

பெருமாள் அசையாது பள்ளிகொண்டிருந்ததைக் காணும் ஆழ்வார் திருவுள்ளம் அவர் திருமேனி வருந்துமே என்று கரைகிறது. கிடக்கிறான்! என்றிலிருந்து? என்று பின்னோக்கிப் பார்க்கிறார் ஆழ்வார். என்றோ? எவனோ வேண்டினான் என்று நீபள்ளிகொண்டிருக்க வேண்டும். (தலபுராண வரலாறு ஆழ்வார் உள்ளத்தே ஓடியிருக்கிறதோ என்னவோ.) எப்படியோ இருக்கட்டும், ஆனால் நீண்டநாளாக இங்கே இப்படி ஒரே கிடையாகக் கிடந்தால் திருமேனி என்னவாகும்! என்று பரிகிறார் ஆழ்வார். பக்தர் அல்லவா? அவர்கள் கண்களுக்குத்தானே இறைவன் திருமேனி நிலை எளிதிலேபடும். சீதை பிரிந்த பின் அவனைத் தேடித்திரியும் இராமனைப் பின் பற்றிச் செல்லும் கம்பன் கவியுள்ளம் 'நென்னல் கண்ட திருமேனி இன்று பிறிதாகிலை தளர்வான்'' என்றல்லவா ஏங்குகிறது.

ஆழ்வார் உள்ளக்கண்ணும் எம்பெருமான் நீண்டநாள் ஒரே கிடையாகக் கிடந்ததால் அவன் திருமேனியில் அசைவு பெற்றதாகக் காண்கிறது. இப்படி உடம்பு அலசும்படி எத்தனைநாள் கிடப்பது. ஒரு பக்தன் வேண்டுகோளுக்காகச் சயனித்தால் சயனித்தே கிடக்க வேண்டுமா? வேண்டுகோள் மட்டும் தான் காரணமா? திருக்கோளூரிலும் கிடந்தாய். இங்கும் கிடக்கிறாய். இப்படிக்

கொடியார் மாடக்கோளூரகத்தும் புளிங்குடியும்
மடியாதின்னே நீதுயில்மேவி அமர்ந்ததுதான்
அடியாரல்லல் தவிர்த்த அசைவோ அன்றேலிப்
படிதான் நீண்டுதாவிய அசைவோ பணியாயே

என்று முன்பே அடியேன் சங்கித்து வினவியிருக்கிறேனே. அதுபோல சிரமபரிகாரமான சயனமா?

''தடங்கொள் தாமரை...அருளாய்''

என்ன செய்ய வேண்டும் என்று பெருமாள் வினவுவதாகக் கொண்டு மேலே தம் உள்ளக்கிடக்கையைக் கூறுகிறார். ''கிடந்தது போதும். இடமுடைத்தான தாமரைபோன்ற உன் திருக்கண்களை விழித்து முதலில் எங்களைக் குளிரக் கடாக்ஷிக்க வேணும். சீரிய சிங்கம் அறிவுற்றது போலே விழித்து ஸிம்மாவலோகனம் போலே இவ்விடங்கொள் மூவுலகையும் ஒரு பார்வை பார்க்கவேணும். பள்ளியினின்றும் எழுந்து உன் நடையழகை யாம் காணப்போதரவேணும். போய் அரசு கட்டிலிலே வீற்றிருக்க வேண்டும். தனியேயல்ல! உன்னைவிட்டகலாதுறையும் பங்கயத்தாளும் நீயுமாகச் சேர்த்தியாக இருந்து அவ்வழகை நாங்களும் மூவுலகோரும் கண்டுதொழும்படி வீற்றிருக்க வேண்டும்'' என்று குறைபிரக்கிறார் ஆழ்வார். அவனைத் தொழும்போதும் பிராட்டி முன்னாகத் தொழுகையே சொரூபமாகத் தோன்றும் ஆழ்வாருக்கு முன்பும் ''பங்கயத்தாள் திருவருளும்கொண்டு'' என்றார். ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே என்ற த்வயத்தின் பொருளும் ஒருவாறு இப்பாட்டிலே தேறும்.

(தொடரும்)

---

**திரிப்பாதிரிப்புலியூர் :** ஸ்ரீவீரஆஞ்சனேய சுவாமிக்கு 25-8-60 முதல் காலை விசேஷ திருமஞ்சன தீபாராதனைகளுடன் 'இலட்சார்ச்சனை' நடைபெற்று வருகிறது. 13-9-60ல் இவ்விழா முடிவுறும்.

**மன்னார்குடி :** ஸ்ரீ இராஜகோபாலசுவாமி கோயிலில் 29-8-60 முதல் "இலட்சார்ச்சனை' விழா நடைபெற்று வருகிறது.

**காஞ்சிபுரம் :** ஸ்ரீ ஏகாம்பரநாதப்பெருமானுக்கு புனுகுமெய்ப்பூச்சும், ஆராதனையும், முப்போதும் திருமேனி தீண்டி பூசனைபுரியும் சிவவேதியர்களுக்கு அன்னம் பாலிப்பும் 31-8-60ல் நடைபெற்றது.

**நாச்சியார்கோயில் :** ஸ்ரீநிவாசப்பெருமாள் கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 30-8-60 முதல் 2-9-60 வரை நடைபெற்றது.

**திருஆக்கூர் :** ஸ்ரீதான்றோன்றீசுவரர்கோயிலில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 9-9-60 முதல் 15-9-60 வரை நடைபெறும்.

**காரைக்குடி :** ஸ்ரீகொப்புடையநாயகியம்மன் கோயிலில் 21-8-60ல் திரு. தியாகராஜன் அவர்கள், "அருணகிரிநாதர்'' என்னும் பொருள்பற்றி சொற்பெருக்காற்றினார்கள்

**பூவானூர் :** ஸ்ரீ சதுரங்கவல்லபநாத சுவாமி கோயிலில் 12-8-60ல் ஆடி வெள்ளியன்று ஸ்ரீசாமுண்டீசுவரி, கற்பகவல்லி, இராஜராஜேசுவரி அம்பாள்களுக்குச்சந்தனக் காப்பு அலங்காரமும், மூலஸ்தான சுவாமிகளுக்கு வெள்ளிக் கவசங்களும் சாத்தப்பட்டு, பொள்ளாச்சி, திரு. ஜி. கோபால் செட்டியார் அவர்களின் உதவியால் ஏழைகளுக்கு பிரசாதங்களும் வழங்கப்பட்டன. பூவனூர் திரு. எஸ். பஞ்சனதம் முதலியார் அவர்களின் உதவியால் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது.

**மதுரை :** ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலில் ஆவணி மூல உற்சவம் 17-8-60ல் தொடங்கி 4-9-60 வரை நடைபெறும்.

# நந்தனார் திருப்பதி

வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

சைவமும் தமிழும் தழைக்கத் தோன்றிய அறுபத்துமூன்று நாயன்மார்களுள் நந்தனார் ஒருவர். இவர் பிறந்து உணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணிப் பெருந் தகைபால் நிறைந்த அன்பு உடையராய்த் திகழ்ந்தார். இவர் ஒருநாள் தில்லைத்திரு மன்று சென்றிறைஞ்ச விரும்பினார். அங்குத் திருக்கோயிலினுள்ளே நுழையும் பேறு தம் குலத்தார்க்கு இல்லையே என்று போகாது ஒழிந்தார். எனினும் அவா வளர்தலால் நாளைக்குப் போவேன், நாளைக்குப்போவேன் என்று அநேக நாட்கள் கழித்தார். ஆதலால் அவர்க்குத் திருநாளைப்போவார் என்னும் பெயர் உண்டாயிற்று. இப்பெரியார் பிறக்கத் தவஞ்செய்த திருப்பதி யாதென ஆராய்வோம்.

இவரைத் திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி அடிகள் "செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்" என்று ஊரைக் குறிக்காது திருப்பெயரை மாத்திரம் அருளிச் செய்துள்ளனர். இவரது திருப்பதியை நம்பியாண்டார் நம்பிகள் திருத் தொண்டர் திருவந்தாதியில்,

"மறைவார் பொழில்திகழ்
ஆதனூரென்பரிம் மண்டலத்தே"

எனவும்.

சேக்கிழாரடிகள்,

"திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிகள்
திரைக்கரத்தால்
முகந்துதர இருமருங்கும் முளரிமலர்க்
கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு மேற்கானாட்
டாதனூர்"

என்றும் கூறியருளினர்.

அம் மேற்கானாட்டு ஆதனூர் யாது?

முதலாம் இராசராசன் காலத்தில் (கி.பி. 985-1014) சோழமண்டலம். ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகளுள் வடகரை இராசேந்திர சிங்க வளநாடு என்பது ஒன்றாகும். இது தஞ்சை மாவட்டத்தில் காவிரி ஆற்றுக்கும், தென்னார்க்காடு மாவட்டத்தில் நிவா என்று திருத் தொண்டர் புராணத்தில் கூறப்பெறும் வெள்ளாற்றுக்கும் வடபாலபட்ட பெருநிலப் பரப்பாகும். ஏனெனில் இவ்வெள்ளாற்றிற்கு வடக்கிலுள்ள எறும்பூர் சிறு திருக் கோயிலில் முதலாம் இராசராசசோழன், இவன் மகன் முதலாம் இராசேந்திர சோழன் இவர்கள் காலங்களில் செதுக்கப்பட்ட கல் வெட்டுக்கள் இந்த *எறும்பூரையும் இதற்கு வடமேற்கிலுள்ள †வளையமாதேவி என்னும் ஊரையும் இராசேந்திரசிங்க வளநாட்டுக்கு உட்பட்ட ஊர்கள் எனக் கூறுகின்றன. இந்த இராசேந்திரசிங்க வளநாடு 22 பிரிவுகளைக் கொண்டது என்று கல்வெட்டுத்துறையாளர் கூறியுள்ளனர். (S. I. I. Vol II, Part V. Introduction page 23) இவர்கள், எறும்பூர்க் கல்வெட்டுக்களில் இராசேந்திரசிங்கள வளநாட்டின் உட்பகுதிகளாகக் கூறப்பட்ட நல்வயலூர்க் கூற்றம், மேற்கானாடு இவைகளைச் சேர்க்காது விட்டு விட்டனர். இவைகளைச் சேர்க்க இந்த இராசேந்திர சிங்கவளநாடு 24 பிரிவுகளைக் கொண்டதாகும்.

முதற் குலோத்துங்க சோழன் (கி-பி. 1070—1120) தன்காலத்தில் இந்த இராசேந்திர சிங்க வளநாட்டின் மேற்குப்பகுதிக்கு உலகுய்ய வந்த சோழவளநாடு என்றும், கிழக்குப் பகுதிக்கு விருதராச

*எறும்பூரின் பழையபெயர் உறுமூர். இந்தப் பழைய பெயர் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவரின் 7-ஆம் ஆண்டில் எறும்பூர் என்று மாற்றப்பட்டது.

†வளையமாதேவியின் பழம்பெயர் வளவன்மாதேவிச் சதுர்வேதிமங்கலம்.

இவைகளை உறுமூர்க்கோயில் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

பயங்கர வளநாடு என்றும் பெயர்களை வைத்துள்ளான்.

இந்த விருதராச பயங்கரவளநாடு தஞ்சை மாவட்டத்தில் காவிரியாற்றின் வடகரையிலிருந்து தென்னுர்க்காடு மாவட்டத்தில், தென்திசைக் கங்கை என்று சேக்கிழார் பெருமானுல் சிறப்பிக்கப் பெற்றுள்ள கெடில நதிக்கரை வரையில் பரவியிருந்தது. இந்த விருதராச பயங்கர வளநாடு வடகரை விருதராச பயங்கர வளநாடு என்று கல்வெட்டுக்களில் கூறப்பெற்றிருக்கும். வடகரை என்பதற்கு காவிரிக்கு வடகரை என்று பொருள் கொள்ளவேண்டும். எனவே முதற் குலோத்துங்கன் இராசேந்திர சிங்க வளநாட்டை இரண்டாகப் பகுத்தானே ஒழிய அவைகளின் உட்பிரிவுகளை மாற்றினுன் அல்லன். கல்வெட்டுக்களில் இராசேந்திர சிங்க வளநாட்டு மேற்காநாடு என்பதும் விருதராச பயங்கர வளநாட்டு மேற்காநாடு என்பதும் ஒன்றேயாகும்.

**மேற்காநாடு:** சிதம்பரம் வட்டத்தில் (Taluk) கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் உள்ள ஓமாம்புலியூர், திருக்கடம்பூர்; வெள்ளாற்றின் வடபால் உள்ள வளையமாதேவி விருத்தாசலம் வட்டத்திலுள்ள திருமுதுகுன்றம், திருநெல்வாயில் அரத்துறை, திருப்பெண்ணுகடம், திட்டக்குடி; கூடலூர் வட்டத்தில் உள்ள திருவயிந்திரபுரம், உதவித்திருமாணிகுழி முதலான ஊர்கள் இம் மேற்காநாட்டில் அடங்கிய ஊர்களிற் சிலவென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. சிதம்பரம் வட்டத்தில் கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் உள்ள பாடல் பெற்ற பதியாகிய திருக்கானுட்டு முள்ளூர் **கீழ்க்காநாட்டைச் சேர்ந்தது** என்று அவ்வூர்க் கல்வெட்டொன்று இக்காலமுள்ள நாட்டின் பிரிவுப்படி தென்னுர்க்காடு மாவட்டத்தில் கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் உள்ள ஓமாம்புலியூரும் அதற்கு மேல் பாற்பட்ட பகுதியும் மேற்காநாடு என்பதும், இவ் வோமாம் புலியூர்க்குக் கீழ்பாற்பட்ட திருக்கானுட்டுமுள்ளூரும் அதற்குக் கிழக்கிலுமுள்ள பகுதியும் கீழ்க்காநாடு என்பதும் விளங்கும். மேற்குறித்த ஓமாம்புலியூரிலே சகல புவனச் சக்கரவர்த்தி கோப்பெருஞ் சிங்கதேவன் என்னும் பல்லவ வேந்தன் காலத்துக் கல்வெட்டுக்கள் ஐந்து உள்ளன. அவற்றுள்ளும் அங்குள்ள பிற கல்வெட்டுக்களுள்ளும் ஓமாம்புலியூர் மேற்காநாட்டின் பகுதியாகவே குறிக்கப்பெற்றுள்ளது. இவ் வோமாம்புலியூர்க்கு மேற்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் கொள்ளிடம், இராச வாய்க்கால் இவைகளின் வடகரையில் இருக்கும் **ஆதனூரே** திருநாளைப்போவார் புராணத்தில் சேக்கிழார்பெருமானுல் கூறப்பெற்றுள்ள மேற்காநாட்டு ஆதனூராகும். எனவே திருநாளைப்போவார் தோன்றியபதி இதுவே என்பது தேற்றம்.

திருப்புன்கூருக்கு அண்மையில் உள்ள ஆதனூரைத் திருநாளைப்போவார் பதி என்று சிலர் கூறுவர். அது திருவாலிநாட்டு ஆதனூர் ஆகும். திருப்புன்கூரில் பொறிக்கப் பெற்றுள்ள சகல புவனச் சக்கரவர்த்தி கோப்பெருஞ் சிங்கன் என்னும் பல்லவ மன்னனது கல்வெட்டு அத்திருப்புன்கூரை இராசாதிராச வளநாட்டுத் திருவாலி நாட்டுத் திருப்புன்கூர் என்று கூறுகின்றது. மேலும் கொள்ளிடப் பேராற்றின் வடகரைப்பக்கத்தில் உள்ளது மேற்காநாடே அன்றித் தென்கரையில் மேற்காநாடு இல்லை என்பதை நன்கு உணர்தல் வேண்டும்.

குறிப்பு: முதல் முதலாக இற்றைக்குப் பதினுறு ஆண்டுகளுக்குமுன் இந்த மேற்காநாட்டு ஆதனூரைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு, திருக்கடம்பூர், ஓமாம்புலியூர், திருக்கானுட்டுமுள்ளூர் இவ்வூர்களுக்குச் சென்று அங்குள்ள கல்வெட்டுக்களை ஆய்ந்து, ''தமிழ்ப்பொழில்'' என்னும் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் இதழில் கடம்பூர்ச் சிவன் கோயில் கல்வெட்டுக்கள் என்ற தலைப்பிலும், ''செந்தமிழ்'' என்னும் மதுரைச் தமிழ்ச்சங்கப் பத்திரிகையில், மேற்காநாடும் கீழ்க்காநாடும் என்ற தலைப்பிலும் யான் எழுதி வெளிவந்த கட்டுரைகள் இவ்வாராய்ச்சிக்குப் பயன்படுவனவாகும்.

---

**மானுமதுரை :** ஸ்ரீ சோமநாதசுவாமி கோயிலில் ஸ்ரீ சோமநாத சுவாமிக்கும் பரிவார தேவதைகளுக்கும் 29-8-60ல் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

# பகவர் யார்?

பி.ஸ்ரீ.

பகவர்களையும் அடியவர்களையும் குறித்து நம்மாழ்வார் பிரஸ்தாபிக்கிறார். பகவன் என்ற சொல்லுக்குப் பிங்கலந்தை நிகண்டில் கடவுள், குரு, சூரியன் என்ற பொருள்களைக் காண்கிறோம். 'ஆதிபகவன்' என்று கடவுளைக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். இச்சொல் பிரமனையும் குறிக்கும், இச்சொல்லால் ஜைனர்கள் அருகனையும், பௌத்தர்கள் புத்தனையும் குறிப்பிடுவதுண்டு. கிருஷ்ண பகவான் சொன்ன நூல் பகவத் கீதை என்று பெயர் பெற்றிருப்பதால் பகவன் என்பதும் பகவான் என்பதும் சிறப்பாக கண்ணனைக் குறிப்பதாகும் என்பது வைணவர் கருத்து. சிவபெருமானையும் பகவான் என்றும் பகவன் என்றும் குறிப்பிடுவதுண்டு.

நற்குணங்கள் வாய்ந்த பெரியவர்களைப் பகவர் என்று குறிப்பிடுவதுண்டு. 'முக்கோல் பகவர்' என்ற துறவிகளைக் குறித்து நாம் தமிழிலக்கியத்தில் கேள்விப்படுகிறோம். இத்துறவிகளை அந்தணர்கள்—அதாவது அழகிய குளிர்ந்த அருளை உடைய துறவிகள்—என்றும் கூறுவதுண்டு.

அந்தணர் என்போர் அறவோர்,
மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுக லான்

என்பது திருக்குறள்.

எல்லா உயிர்கள் மேலும் செவ்விய குளிர்ந்த அருளைப் பூண்டு ஒழுகும் துறவிகளே அந்தணர் என்று சிறப்பித்துக் கூறப்படுவதற்கு உரியவர்கள் என்பது திருவள்ளுவர் கருத்து. ஜீவகாருண்யத்தை—அஹிம்சையை விரதமாகக்கொண்டு ஒழுகும் துறவிகள் அந்தணர்கள் என்கிறார். இந்த அந்தணர்களே முக்கோல்—பகவர் என்று ஊகிக்கக்கூடும்.

## முக்கோல்—பகவர்

வடமொழியில் திரிதண்ட சந்நியாசிகள் என்று சொல்லுகிறார்களே, அவர்களே தமிழில் முக்கோல்—பகவர் ஆவர்.

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க்கு உரிய

என்று தொல்காப்பியர் சூத்திரம் இட்டிருப்பதால், தொல்காப்பியரும் முக்கோல் பகவரையே அந்தணர் என்று கூறியுள்ளார் என்பது தெளிவு.

வைணவ சமயத் துறவிகள் தங்கள் கையில் முக்கோல் ஏந்துவதை இன்றும் பார்க்கிறோம், சித் அசித் ஈச்வரன் என்ற மூன்று தத்துவங்களை வைணவர்கள் குறிப்பிடுவதுண்டு. இந்த மூன்று தத்துவங்களுக்கும் உரியவர் முக்கோல்—பகவர் என்பது வைணவ சமயிகளின் கருத்து. 'சித் அசித்தொடு ஈசன் என்று செப்புகின்ற மூவகைத் தத்துவத்தின் முடிவு கண்ட சதுமறைப் புரோகிதன்' என்று நம்மாழ்வாரைக்குறிப்பிடுகிறார் பாரதம் பாடிய வில்லிபுத்தூரர். இந்த மூவகைத்தத்துவத்தின் முடிவு கண்டவர் நம்மாழ்வார் என்றால், இம்மூவகைத்தத்துவத்தின் நினைவுக்குறியாக முக்கோல் ஏந்துபவர் முக்கோல் பகவர் என்று ஊகிக்கக் கூடுமல்லவா? இந்த ஊகம் சரியானால், தொல்காப்பியர் காலத்திலேயே முக்கோல் ஏந்திய பாகவதசந்நியாசிகள் தமிழகத்தில் காணப்பட்டனர் எனலாம்.

## கலித்தொகையில் முக்கோல்—பகவர்

கலித்தொகை என்ற சங்கநூலில் முக்கோல்—பகவரைக்குறித்து வரும் செய்தியை இப்போது ஊன்றி நோக்குவோம். தலைவனோடு (காதலனோடு) தலைவி (காதலி) போய் விடுகிறாள். வளர்ப்புத்தாயான செவிலித்தாய் மகளைத் தேடிக்கொண்டு போகிறாள். பாலைவனத்தின் வழியாகவும் தேடிப்போகிறாள். 'என் மகளைப் பார்த்ததுண்டா?' என்று எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் கேட்டுக்கொண்டே போகிறவள் பாலைவனத்தில் எவரை விசாரித்துப் பார்க்க முடியும்? முக்கோல் ஏந்திய துறவிகளைச்சந்திக்கிறாள்.

'முனிவர்களே! ஒரு பெண் ஒரு வீரனைத் தொடர்ந்து போய்க் கொண்டிருந்ததைப்பார்த்தீர்களா?' என்று கேட்டுப் பார்க்கிறாள் செவிலித்தாய். இக்கேள்விக்கு விடையாக இந்த பகவர்கள் 'நாங்கள் பார்த்தோம்' என்று கூறுகிறார்கள். உண்மையைத் தானே அவர்கள் சொல்வார்கள். 'அது குறித்து நீ வருந்துவது சரியன்று' என்று செவிலித்தாய்க்கு ஆறுதலும் அவர்கள் சொல்லுகிறார்களாம்.

இப்படி அமைந்திருக்கும் கலித்தொகைப்பாட்டை இனி நாம் பார்ப்போம்.

எறித்தரு கதிர்தாங்கி
ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும்
உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ
வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயல்மாலைக்
கொளைநடை அந்தணிர்!

என்று இந்த அந்தணர்களை அழைக்கிருள் செவிலித்தாய்.

உறியிலேதங்கியகமண்டலத்தையுடைய இந்த அந்தணர்கள் வெயிலுக்காக ஏந்திய குடை நிழலில் வருகிருர்களாம். பிரசித்தமாகச்சொல்லப்படுகிற முக்கோல் அல்லது திரிதண்டத்துடன் வருகிருர்களாம். இந்த அந்தணர்களை

வெவ்விடைச் செலல்மாலை
ஒழுக்கத்தீர்!

என்றும் அழைக்கிருள் செவிலி. வெப்பமான காட்டிலே போவதை இயல்பாக உடைய ஒழுக்க முள்ளவர்கள் இவர்கள் என்பது பொருள்.

இனி இந்த அந்தணர்களில் ஒருவரை நோக்கி இவள் என்ன கேள்வி கேட்கிருள் என்று பார்க்கலாம். இந்தக் காட்டிலே என்னுடைய மகள் ஒருத்தியும் வேருெருத்தியின் மகன் ஒருவனும் போய்க்கொண்டிருந்ததை நீங்கள் காணுதிருந்தீர்களோ?' என்பது இவள் கேள்வி.

என்மகள் ஒருத்தியும்
பிறள்மகன் ஒருவனும்

என்று தம்மகளையும் அவள் காதலனையும் குறிப்பிடுகிருள், தன் மனவேதனை தோன்ற.

இக்காதலர்கள் பெற்றோருக்குத் தெரியாமலே காதல் மணம் புரிந்து கொண்டனராம்.

அன்னர் இருவரைக்
காணிரோ? பெரும!

என்று கேட்கிருள்.

முனிவர் என்ன பதில் சொல்லுகிருர்? 'காணுதிருந்தேம் அல்லேம்' என்கிருர். இப்படிச்சொல்லிவிட்டு 'கண்டோம் இக்காட்டிலே' என்கிருர்கள்.

காணேம் அல்லேம்,
கண்டனம் கடத்திடை

என்பது முக்கோல்-பகவர் வாக்கு.

முனிவர் கண்டிருந்தால் புத்தி சொல்லியிருக்கலாமே; பெண்ணை வீட்டிற்குத்திருப்பி அனுப்பியிருக்கலாமே. அப்படி ஒன்றும் செய்யவில்லை; அவர்களைக் கண்டோம்; அவர்கள் செய்தது அறம் என்றே கருதிவிட்டோம்' என்று சொல்லுகிருர் முனிவர். காதலன் காதலிக்கு ஏற்ற கணவன்தான் என்பதையும் குறிப்பாக உணர்த்துகிருர்.

ஆண்எழில் அண்ணலோடு

என்று கூறுவதைப் பாருங்கள்.

ஆண்மக்களுக்கு வேண்டிய அழகு அந்தத் தலைவனுக்கு இருக்கிறது என்கிருர். தலைவியை 'அருஞ்சுரம் முன்னிய மாண் இழை மடவரல்' என்கிருர். இந்த அரிய பாலைவனத்தைக்கடந்து போகக்கருதி வந்த மாட்சிமைப்பட்ட அணிகளை உடைய இளம்பெண் என்பது பொருள்.

'ஒஹோ! அவள் தாயாநீர்? என்கிருர். இவள் கேட்ட கேள்வியிலிருந்து முனிவர் உடனேயே ஊகித்துக்கொண்டார்.

மாண் இழை மடவரல்
தாயிர்நீர் போறிர்

என்கிருர். இனி முனிவர் சொல்லும் சமாதானத்தையும் தெரிந்து கொள்வோம்.

## பகவரின் பரந்த உள்ளம்

மூன்றே உபமானங்களைக் காட்டுகிருர்; காட்டிக் காதலர்கள் செய்தது அறம் என்று முடிவு கட்டுகிருர். சந்தனம், முத்து, யாழ் என்ற மூன்றே பொருள் இங்கு உவமிக்கப்படுகின்றன. முதல் முதல் சந்தனத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ளலாம் என்கிருர்.

பலவுறு நறுஞ்சாந்தம்
படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும்,
மலைக்கு அவைதாம் என்செய்யும்?
நினையுங்கால், நும்மகள்
நுமக்கு ஆங்கு அனையளே!

என்பது இவர் வாக்கு.

சந்தன மரங்கள் மலையிலே பிறந்தன வாயினும் அவை சந்தனக்கட்டையை உரைத்துப் பூசிகொள்பவர்களுக்குத்தானே பயன் படும்? தாம்பிறந்த மலைக்கு அவை என்ன பயனைக் கொடுக்கும்? நினைத்துப் பார்த்தால் உம்முடைய மகளும் அப்படியே! என்கிறார் முனிவர்.

இரண்டாவதாக, வெண்முத்தைக் கொண்டு ஒருபாடம் கற்பிக்கிறார் செவிலித் தாய்க்கு.

சீர்கெழு வெண்முத்தம்
அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும்
நீர்க்கு அவைதாம் என்செய்யும்?
தேருங்கால், நும்மகள்
நுமக்கும் ஆங்கு அனையளே!

என்கிறார். வெண்முத்துக்கள் அணிபவர்களுக்கே பயன்படுகின்றன; கடலிலே பிறந்தன என்றாலும், அந்த முத்துக்களால் கடலுக்கு என்னபயன்? இப்படிச் சொல்லி, 'ஆராய்ந்து பார்த்தால், உம்முடைய மகளும் அப்படியேதான்!' என்கிறார்.

கடைசியாக, யாழைக்கொண்டு பாடம் கற்பிக்கிறார். யாழுக்கா இசை பயன்படுகிறது? பாடுவோருக்குத்தானே பயன்படும் என்கிறார்.

ஏழ்புணர் இன்னிசை
முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும்,
யாழ்க்குஅவைதாம் என்செய்யும்?
சூழுங்கால் நும்மகள்
நுமக்கு ஆங்கு அனையளே!

என்பது முனிவர் வாக்கு.

'ஆகையால் மிக்க கற்பை உடையவள் அவள்; அவளுக்காக வருத்தமுற வேண்டாம். கணவன் பெற்றோரினும் சிறந்தவன்; அவனை வழிபட்டு அவன் பின்னே சென்றாள். இப்படிக்கற்புடன் நிகழ்த்தும் இல்லறமே அறங்களில் தலைமையான நல்லறம்' என்று பேசி முடிக்கிறார் முக்கோல்-பகவர்.

இந்தப்பாட்டிலே 'முக்கோல்' என்பதன் உட்பொருளைக் கூறும் நச்சினார்க்கினியர் என்ற உரையாசிரியார், 'அரி அயன் அரன் என்னும் மும்மூர்த்திகளும் ஒருவரே என்ற குறிப்பை உடையது இம் முக்கோல்' என்று பொருள்படக் கூறியுள்ளார். இப்பொருள் பொருந்துமா என்பது ஆராய்ச்சிக்கு உரியது.

சிவபக்தியும் அத்வைத வேதாந்தக் கொள்கையும் உடையவர் நச்சினார்க்கினியர். இந்தப்பகவர்கள் 'வேறு ஓரா நெஞ்ச'த்தினர் என்று கவி கூறியிருப்பதற்கும் நச்சினார்க்கினியர் தம்கொள்கைக்கிசைய மும்மூர்த்திகளையும் வேறாகக்கருதாமல் ஒருவராகக்கருதும் நெஞ்சத்தை உடையவர்கள் என்று பொருள்பட விளக்கம் தந்திருக்கிறார். முக்கோல் என்ற திரிதண்டம் பகவர் என்ற பாகவதப் பெரியோர்களின் தத்துவக் கொள்கையைக் குறிப்பிடுவதாகக்கருதுவதே நச்சினார்க்கினியரின் கருத்தைக் காட்டிலும் இயற்கையாகவும் பொருத்தமாகவும் தோன்றுகிறது. வேறு பயன்களைக் கருதாது பகவானுடைய பக்தியிலேயே ஈடுபடும் இப்பாகவதர்களின் நெஞ்சை 'வேறு ஓரா நெஞ்சம்' என்று கூறுவது பொருந்துவதுதானே.

## வேறு நூல்களில் முக்கோல்—பகவர்

'முக்கோல்—பகவரை வினாதல்' என்ற துறையை பிற்காலநூல்களிலும் இலக்கணங்களிலும் காணலாம். திருமழிசை ஆழ்வாரும் மூன்று கோல்கள் அல்லது திரிதண்டத்தையுடைய துறவிகள் வலம் வந்து வாழும் இடம் ருவரங்கம்என்று பொருள்படப் பாடியிருக்கிறார். இவர்கள் யாத்திரை செய்துகொண்டே திருவரங்கம் முதலிய திருப்பதிகளில் தங்குவார்கள் என்பது குறிப்பு. ஆண்டாள்,

செங்கல் பொடிக்கூறை
வெண்பல் தவத்தவர்

என்று குறிப்பிடுவதும் முக்கோல் பகவரைத் தான் எனக்கருதுவதுண்டு. மூவாயிரப்படி வியாக்கியானம் இக்கருத்தை ஆதரிக்கிறது.

எதிராஜர் என்று சொல்லப்படும் இராமாநுஜர் தம் காலத்து முக்கோல்—பகவர்களின் தலைவராகத் திகழ்ந்தார் எனலாம்.

---

**தீர்த்தாண்டதானம்** : (இராமநாதபுரம் மாவட்டம்) ஸ்ரீ சர்வதீர்த்தேசுவர சுவாமிகோயிலில் புனர்உத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 28-8-60 முதல் 2-9-60 வரை நடைபெற்றது.

# வேய்ங்குழலும் வேறு பாடல்களும்

"பி.ஸ்ரீ."

சங்க இலக்கியமாகிய அகநானூற்றுச் செய்யுள் ஒன்றிலிருந்து, தமிழர்கள் வேய்ங் குழலை எப்படிக் கண்டுபிடித்திருக்கக்கூடும் என்பதை ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம். மூங்கில் வண்டுகளால் துளையிடப்பட்டிருக்க லாமே, அந்தத் துளை வழியேபோய் வெளிப் பட்ட காற்று எழுப்பும் ஓசையே குழலிசை யாக அமைந்தது என்பது குறித்த செய்யுளில் காணப்படும் செய்தி,

ஆடுஅமை குயின்ற
அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி
குழலிசை ஆக

என்பது செய்யுட் பகுதி.

## குழலைக் கண்டுபிடித்தது

வண்டு துளைத்த மூங்கில்—துளையின் வழியாகப் புகுந்து வெளிப்படும் காற்று ஒரு வகை இசையை எழுப்புவது கண்டு, மனிதன் அந்த மாதிரி இனிய ஓசையைத் தானும், மூங்கிலைத் துளைத்துக்காற்றை ஊதி, எழுப்ப முயன்ற அந்த முயற்சியே புல்லாங்குழலா யிற்று என்ற குறிப்பை வேறொரு தமிழ் நூலிலும் காண்கிறோம். 'தும்பி (வண்டு) வாய் துளைக்கப்பட்ட கீசகம் (மூங்கில்) வாயுத் தன்னால்...குழலின் ஏங்க (குழல் போல் ஒலிக்க)' என்பது சூளாமணி ஆசிரியர் வாக்கு.

மூங்கில்களில் உள்ள துளை தோறும் காற்று நுழைந்து வெளிப்படுவதால் இயற்கை யாக ஏழிசைகளும் தோன்றுவதாகப் பாரதம் பாடிய வில்லிபுத்தூரரும் கூறியுள்ளார். 'கழைகளின் துளைதொறும் கால் (காற்று) பரந்து இசைக்கின்ற ஏழிசை' என்பது இவர் கூற்று.

காட்டிலே இந்த இயற்கைக் குழ லிசையை அனுபவித்தவர்கள் நாளடைவில் வேய்ங்குழல் என்ற இசைக் கருவியை உரு வாக்கிக்கொண்டு, தாங்கள் மேய்த்த மாடு களைக் கூவி அழைப்பதற்குப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்று ஊகிக்கலாம். எனவே, வேய்ங்குழல் முல்லைநில மக்களுக்கு (காட்டில் வாழ்க்கை நடத்திய ஆயர்களுக்கு) உரியதோர் இசைக் கருவியாயிற்று.

## பிரபந்தப் பாசுரங்கள்: பெரியாழ்வார்

பரந்து காட்டுப் பக்கங்களில் மேய்ந்து கொண்டிருந்த மாடுகளையெல்லாம் மாலை வேளையில் ஓரிடத்தில் குவியச்செய்து ஊருக் குள் ஓட்டிக்கொண்டு போகவேண்டுமல்லவா? இதற்காகக் குழலூதினான் கண்ணன் என் பதையும், மாடுகளும் கன்றுகளும் ஓடிவந்தன என்பதையும் கவிகள் பாடியிருக்கிறார்கள்.

கண்ணனின் குழலிசை பசுக்களுக்கு முன்பே கோபியர்களையும் அழைத்துக் கண்ணன் இருக்கும் இடத்திற்கு இழுத்துக் கொண்டு வந்துவிட்டது என்பதைப் பெரி யாழ்வார் எவ்வளவு வசீகரமாய்ப் பாடியிருக் கிறார் என்பதைச் சென்ற கட்டுரையில் கண்டோம். ஏன், விண்ணும் மண்ணும் கண்ணன்—குழல் என்ற அமுதகீத இசை யால் சுருக்குண்டு ஒன்றுபட்ட ஆச்சரியத் தையும் கண்டோம்.

வேறு ஆழ்வார்களும் கண்ணன் குழ லிசையைக் குறிப்பிடுகிறார்கள். பெரியாழ் வார் வேறு பாசுரங்களிலும் குழலிசையைக் குறிப்பிடுகிறார். 'முதுமணற்குன்று ஏறி, கூத்து உவந்து ஆடி, குழலால் இசை பாடி' வந்த கண்ணன் பின்புறமாய் வந்து தன்னை முதுகில் கட்டிக்கொண்டான் என்று

யசோதை கூறுவதுபோல், பெரியாழ்வார் தம்மை அவளாகப் பாவித்து, பாடியிருக்கிறார்.

சிறுபிள்ளைகள் பூச்சிகாட்டி விளையாடுவதுபோலக் கண்ணனும் விளையாடினானாம். அந்த விளையாட்டைக் கோபியர்கள் கண்டு மகிழ்ந்ததுபோல் தாமும் பாவனா சக்தியால் கண்டுகளித்துப் பாடியிருக்கிறார் பெரியாழ்வார். இந்தப் பதிகத்தில் கண்ணனை நல்ல வேய்ங்குழல் ஊதுபவன் என்று குறிப்பிடுகிறார் இவர். 'நல் வேய் ஊதி' என்பது இவர் வாக்கு. இதே பதிகத்தில்,

> வேயின் குழல்ஊதி
> வித்தகனாய் நின்ற
> ஆயன்

என்றும் கண்ணனைக் குறிப்பிடுகிறார்.

யசோதை கண்ணனைப் பாலூட்டுவதற்காக 'அம்மம் உண்ண வா' என்று அழைப்பாள். அந்த இளமை யழகையும் சேட்டைகளின் பெருமையையும் கண்டு 'இந்தப் பிள்ளை தெய்வம் தான்' என்று எண்ணி 'உனக்கு அஞ்சுவன் அம்மம் தரவே!' என்று கூறுகிறாளாம். இந்த நிலையில் 'பெரியாழ்வார் தம்மை அவளாகப் பாவித்துப் பாடி மகிழும் திருமொழியில், கண்ணன் கேட்டவர்களையெல்லாம் மயங்கச் செய்யும் மெல்லிய தொனியுள்ள வேய்ங்குழலைக் கையில் எடுத்துக்கொண்டு சோலைக்குப்போய், அந்த இசையால் கோபியர்களை அழைப்பதாய்ப் பாடுகிறார்.

'மென்குழல் கொண்டு, பொழில் புக்கு, வாய் வைத்து' ஊதியதும், ஆயர்பாடிக் கன்னியர் அந்தக் குழலிசையின் மோகத்தால் அந்தச் சோலைக்கு வந்து கண்ணனை நாற்புறமும் சூழ்ந்துகொண்டு தொழுகிறார்களாம். 'கன்னியர்வந்து...சுற்றும் தொழ நின்ற சோதி! (ஜோதி)' என்று அழைக்கிறார் ஆழ்வார் கண்ணனை. ஸர்வஜன மோகனமான ஸ்வரத்தையுடைய வேய்ங்குழலைக் கொண்டு கண்ணன் கன்னியருடன் பேசுகிறான் என்ற குறிப்பை இப்பாட்டில் காண்கிறோம்.

கண்ணனைக் காட்டில் கன்றுகளை மேய்க்க விட்ட யசோதை அவனைப் பிரிந்த அந்தப் பகற்பொழுதிலே அவனையே நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்ற பாவனையில் பெரியாழ்வார் பாடியிருக்கும் பாட்டு ஒன்றிலே 'நீ உகக்கும் குடையும் செருப்பும் குழலும் (நான்) தருவிக்க, கொள்ளாதே போனாய் மாலே!' என்று யசோதை கூறுவதாக வருகிறது. அங்கும் இங்கும் சிதறி ஓடும் கன்றுகளை இருந்த இடத்தில் இருந்து கொண்டே கண்ணன் குழல் ஊதி அழைத்துக் கொள்வதற்குப் பயன்படும் வேய்ங்குழலை அவன் உகக்கும் குழல் என்கிறாளாம் தாய்.

காட்டிலே மாடு மேய்த்த மகிழ்ச்சியால் கண்ணன் தன்னை வகைவகையாக அலங்கரித்துக்கொண்டு தன் தோழன்மாருடன் ஆய்ப்பாடிக்குத் திரும்பி வருகிறானாம். அந்தக் கூட்டத்தையும் கோலாகலத்தையும்,

> குழல்களும் கீதமும் ஆகிஎங்கும்
> கோவிந்தன் வருகின்ற கூட்டம்

என்று வருணிக்கிறார் பெரியாழ்வார். வேய்ங்குழல், இலைக்குழல் முதலிய பலவகைக் குழல்கள் இங்கே குறிக்கப்படுகின்றன எனலாம்.

இதே பதிகத்தில் கண்ணன் 'குழல் ஊதி ஊதிக் கன்றுகள் மேய்த்து'த் திரும்பி வருகிறானென்பதும் குறிக்கப்படுகிறது. மேலும் இப்பதிகத்தில்,

> கோலச்செந் தாமரைக் கண்மிளிரக்
> குழலூதி இசைபாடிக் குனித்து

வரும் அழகும் குறிக்கப்படுகிறது. அழகிய கண்கள் மலர்ந்து மிளிர்கின்றனவாம், கண்ணன் குழலூதியும் இசைபாடியும் ஆடியும் வரும்போது. 'சிங்குழல் வாய்மடுத்து ஊதி ஊதி அலங்காரத்தால் வரும் ஆயப்பிள்ளை' என்றும் கண்ணன் வருணிக்கப்படுகிறான் இப்பதிகத்திலே.

## ஆண்டாளும் குலசேகரரும் திருமங்கை மன்னனும்

'நெடுமால் ஊதி வருகின்ற குழல்' என்று ஆண்டாளும் கண்ணன் குழலைப் பாடியிருக்கிறாள். வேய்ங்குழல் இசைக்கும் வாயால் கண்ணன் வெண்சங்கு ஊதி வருவதாகவும் ஆண்டாள் பாடியிருக்கிறாள். 'கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?' என்று தொடங்கும் ஆண்டாள் பாசுரத்தை அறியாதார் யார்?

திருப்பவளச் செவ்வாய்தான்
தித்தித் திருக்குமோ?

என்று அந்த வெண்சங்கை விருப்புற்றுக் கேட்கிருள்!

குலசேகராழ்வார் பாடிய 'பெருமாள் திருமொழி'யிலும் கண்ணன் குழல் பாடப் பெற்றிருக்கிறது :

கொங்கு நறுங்குழ லார்களோடு
குழைந்து குழல்இனி(து) ஊதிவந்தாய்,
எங்களுக்கே ஒருநாள் வந்(து)ஊத
உன்குழல் இன்னிசை போதராதே!

என்ற வாக்கில், குழலூதும் கோபாலன் குலசேகரரின் அகக்கண்ணுக்கும் இலக்காகியுள்ளான் என்பது தெளிவு,

'குழலூதி ஆயர்மாதர் இனவளை கொண்டான்' என்று பாடுகிருர் திருமங்கைமன்னன்.

ஆயன் வேயினுக்கு
அழிகின்ற(து) உள்ளமும்;
அஞ்சேல்என்பார் இல்லையே!

என்பதும் இவர் வாக்கு. 'அண்ணல் இலைக் குழல் ஊதி' என்று கண்ணன் இலைக்குழல் ஊதியதையும் குறிப்பிடுகிருர். 'ஏங்கு வேய்ங்குழல்' என்றும் பெரிய திருமொழியில் புல்லாங்குழல் குறிக்கப்படுவது காண்கிறோம்.

## பேயாழ்வாரும் நம்மாழ்வாரும்

முதலாழ்வார்களுள் ஒருவராகிய பேயாழ்வார் 'கோவலனுய் ஆநிரைகள் மேய்த்துக் குழல் ஊதி' என்று கண்ணன் குழலூதியதைக் குறிப்பிடுகிருர். திருவேங்கடத்தில் கோயில்கொண்டிருக்கும் பெருமான் கண்ணன்தான் என்று கூறும் இவர் அப்பெருமானைக் குழலூதும் கோபாலன் என்றும் குறிப்பிடுகிருர். வேங்கடமலையைத் 'தீங்குழல் வாய்வைத்தான் சிலம்பு' என்பது இவர் வாக்கு.

நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில் ஆறு இடங்களில் வேய்ங்குழலை வெளிப்படையாகக் குறிப்பிடுகிருர். தாய் பேசும் பேச்சாக வரும் ஒரு பாசுரத்தில், பெண் குழலோசை கேட்டதும் 'மாயவன்' என்றே மயங்குவதாக வருகிறது. 'வாய்த்த குழலோசை' என்கிருர். 'தீங்குழல் ஊதிற்றும், நிரை மேய்த்ததும்' என்பதும் இவர் வாக்கு.

அவனுடைத் தீங்குழல்
ஈருமாலோ!

என்று சொல்லி, அந்தக் குழலின் இன்னிசை கேட்டுக் கண்ணன்—காதலால் ஏற்படும் நிலையை உணர்த்துகிருர்.

'ஊதும் அத்தீங்குழற்கே உய்யேன் நான்!'

என்பதும் பக்திப்பெருங் காதலரான நம்மாழ்வார் திருவாக்கு. குழலூதும், கோபாலன் தோன்றுகிருன் அகக் கண்ணுக்குமுன், 'அகமா, புறமா?' என்பதுகூடத் தெரியவில்லை, அகமே புறமாகி வேணுகோபாலன் பிரத்தியட்சமாகிருன். தூது அனுப்பாமலே வந்துவிடுகிருன் காதலன். கண்கள் தூது பேசும்போது, வேறு தூது எதற்காக?

தூதுசெய் கண்கள்கொண்(டு) ஒன்றுபேசி,
தூமொழி இசைகள்கொண்டு ஒன்றுநோக்கி

என்று கூறுவது கூர்ந்து நோக்கத்தக்கது.

குழலிசையும் கண்ணனின் வேறு இசைகளும் உள்ளத்தைத் துருவி நோக்குகின்றனவாம். ஆம்; காதலியின் உள்ளத்தை. இது பக்தர் உள்ளத்திற்குப் பரிபாஷை. 'அந்தப் பாட்டு என் பேதைநெஞ்சை ரம்பம்போட்டு அறுப்பதுபோல் அறுத்துச் சோதித்துவிட்டது!' என்கிருள் காதலி. 'இந்த ஆன்மா இன்னும் திருந்தி நம்மை நோக்கவில்லையே!' என்ற தெய்வத்தின் துயரம் தோய்ந்த காதலை உணர்த்தும் பாட்டல்லவா?

## சிலப்பதிகாரமும் வேய்ங்குழலும்

கண்ணனின் இன்னிசைத் தீங்குழலைச் சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகளும் குறிப்பிடுகிருர். கொன்றையங்குழல், ஆம்பலந்தீங்குழல், முல்லையங்குழல் எனப் பலதிறப்பட்ட குழலைக் குறிப்பிடுகிருர் இவர். இத்தீங்குழல் வகைகளைக் கண்ணன் எடுத்து ஊதி ஆய்க்குலச் சிறுமியரை வசப்படுத்தியதாக இளங்கோவடிகள் பாடியிருக்கிருர்.

கண்ணகி தங்கியிருந்த இடைச்சேரியில் தீயநிமித்தங்கள் தோன்றியதும், மாதரி முதலியோர் கண்ணனைக் குறித்துக் குரவைக் கூத்து ஆடுகிருர்கள், தீமை நீங்கவேண்டுமென்று. இதைக் குறிப்பிடும் இளங்கோவடிகளின் கவிதையில் 'கண்ணன் குழலிசையையே கேட்கிறோமோ?' என்ற மயக்கம் ஏற்படுகிறது கவிதா ரஸிகர்களுக்கு.

இந்த இசைப்பாடல்கள் பிரசித்தமானவை. பாடிப்பாடி இன்புறவேண்டிய பைந்தமிழ்ப் பாடல்கள் இவை.

கன்று குணிலாக் கனிஉதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமேல், அவன்வாயின்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ!
பாம்பு கயிருக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமேல், அவன்வாயின்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ!
கொல்லையஞ் சாரல் குருந்(து)ஒசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமேல் அவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ!

## திருக்குறளும் கலித்தொகையும்

குழலோசை குறித்தும், புல்லாங்குழல் குறித்தும் பல குறிப்புக்கள் தமிழிலக்கியத்தில் காணப்படுகின்றன. 'மாலைக்குத் தூதாகி ஆயன் குழல் போலும் கொல்லும் படை' என்கிருர் திருவள்ளுவர். 'குழல் இனிது, யாழ் இனிது' என்று யாழுக்கும் முன்னே வைத்துக் குழலைச் சிறப்பித்திருக்கிருர் இவர். 'குழல் வழி நின்றது யாழே' என்று இளங்கோவடிகள் கூறுவது திருவள்ளுவருக்கும் உடன்பாடுதான் என்று கருதலாம்.

இசைக் கருவிகள் பலவற்றுள்ளும் இயற்கையைப் பின்பற்றியெழுந்த முதலாவது கருவியல்லவா புல்லாங்குழல்? இங்கே 'புல்' என்பது மூங்கிலைக் குறிக்கும். இக் குழலோசையை நல்ல நிமித்தங்களுள் ஒன்ருகக் கலித்தொகை கூறுகிறது.

## அழகர் கலம்பகத்தில் வேணுகோபாலன்

'அழகர்கலம்பகம்' என்ற பிற்காலப் பிரபந்தம் ஒன்றிலும் ஜகன்மோகன வேணுகோபாலனின் சித்திரம் ஒன்றைக் காண்கிரேம். கண்ணன் குழலூதி இன்னிசையமுதம் பொழிகின்ருன். அதில் கோபியர் மட்டுமா மயங்கி நிற்கிருர்கள்? கன்றுகளோடு பசுக்கள் வந்து இமைக்காமல் நின்றுகொண்டிருக்கின்றன. இளங்காளைகளும் அயர்ந்து நிற்கின்றனவாம். கரும்புலிகளும் கொடிய விஷப்பாம்புகளும் வசீகரிக்கப்படுகின்றனவாம்.

இது மட்டுமா? ஆயர்களால் தறிக்கப்பட்டு உலர்ந்துகிடந்த மரங்கள் அத்தனையும் மறுபடியும் தழைத்து மலர்ந்து கனிகளையும் உதவத் தொடங்கிவிட்டனவாம். கருங்கல்லும் வெண்ணெய்போல் கரைந்து ஓடுகிறதாம். இப்படி மண்ணுலகம் மட்டுமா வசப்படுகிறது? விண்ணிலும் மேகங்கள் வந்து வெயிலை மறைத்துப் பந்தலிடுகின்றன; குறுந்துளிகளாக மழைத்துளிகளையும் அமுதம் சிந்துவதுபோலச் சிதறுகின்றனவாம்.

இந்த விதமாகக் கண்ணன் வேய்ங்குழலூதும் விந்தையை வருணிக்கும் பாட்டு:

குறித்தமுகில் பந்தரிட்டுக்
குறுந்துளிதூற் றிட,ஆயர்
தறித்தமரம் அத்தனையும்
தழைத்(து)அலர்ந்து பழுத்(து)உதவ
கடும்புலிகள் அயர்ந்துசித்ர
காயமெனும் பெயர்விளக்க,
கொடும்பணிகள் மாலையதாய்க்
குலரத்ன விளக்கேற்ற
கருங்கல்தான் வெண்ணெய்எனக்
கரைந்தோட, விரைந்தோடி
வருங்கற்ருன் இமைப்(பு)ஒழிய
மழவிடைஆங்(கு) அயர்ந்துநிற்ப
மிகவிளங்(கு) ஓவியர்எழுத
வெள்கியத்ரி பங்கியுடன்
சுகஇளங்கோ வியர்மழலை
தொனித்தகுழல் இசைத்தோய்!கேள்.

[முகில் – மேகம். அலர்ந்து – மலர்ந்து. சித்ரகாயம்–புலியின் பெயர்களில் ஒன்று; சித்திரத்தில் எழுதிய உருவம் என்றும் பொருள்படும். கொடும் பணிகள்–கொடிய பாம்புகள். குலரத்னம்–சிறந்த இரத்தினம். கற்ருன்–கன்றுகளையுடைய பசுக்கள். மழவிடை–இளங்காளைகள். மிக விளங்கு ஓவியர் – மிகப்பிரசித்தமான சித்திரகாரர்கள். வெள்கிய–வெட்கப்படும். த்ரிபங்கி–மூன்று வளைவுகள் தோன்றக் குழலூதும் கோபாலன் நிற்கும் நிலை.]

## பெரியபுராணமும் திருவிளையாடற்புராணமும்

கண்ணன் குழலிசைப் பாடல்களை நினைவூட்டுகின்றன பெரியபுராணத்தில் வரும் ஆனயநாயனுர் குழலூதும் சிறப்பை வருணிக்கும் பாடல்களும். பெரியபுராண ஆசிரியரும் கன்று பசு காளை மான் முதலிய பிராணிகள் வசீகரிக்கப்படுவதைக் குறிப்பிடுகிருர். மண்ணேடு விண்ணும் இந்த இசையில் ஈடுபட்

டது என்றும் தெரிவிக்கிறார். மரங்களும் உருகின என்கிறார். மேகங்களும் புனல் சொரிந்தன என்கிறார். மலைவீழ் அருவிகளும் காட்டாறுகளும் வசீகரிக்கப்பட்டதாகவும் சேக்கிழார் பெருமான் பாடுகிறார்.

ஆயனார் குழலோசை மெய்யன்பில் விளைந்த இசையாக,

வையம்தன் னையும்நிறைத்து,
வானம்தன் வயமாக்கி,

பொய்யன்புக்கு எட்டாத ஆனந்தக்கூத்தரின் அருகணையப் பெருகியது என்பது பெரிய புராண வருணனையின் சிகரம். இந்தச் சிவ பக்தர் ஆனயர் ஆயர்குலத்தைச் சார்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிவபக்தரின் குழலிசையைச் சேக்கிழார் பெருமான் இப்படி வருணிக்கிறாரென்றால், ஏறக்குறைய இதே ரீதியிலும் பெரியாழ்வார் கண்ணன் குழலிசையைச் சிறப்பித்துப் பாடியிருக்கும் ரீதியிலும், சிவபிரான் பாடிய இசைச் சிறப்பைப் பாடியிருக்கிறார் பரஞ்சோதிமுனிவர், தாம் இயற்றிய திருவிளையாடற்புராணத்திலே. இந்தப் பாடல்களிலும் இயற்கை முழுவதும் மோகித்துக் கிடப்பதைக் காண்கிறோம். பெரியாழ்வார் அமுத கீதவலையைக் கண்ணன் பரப்பியதாகக் கூறியிருக்கிறாரல்லவா? பரஞ்சோதி முனிவர் 'அருட்கடல் விளைத்த கீத இன்னிசை அமுதம்' என்கிறார் சிவபெருமான் பாடிய இசையை; 'மாவும் புள்ளும் இசைவலைப் பட்ட அம்மா!' என்றும் மனமுருகிப் பாடுகிறார்.

* * *

பொதுவாக இசையின் சிறப்பையும், சிறப்பாகக் குழலிசையின் பெருமையையும் தமிழிலக்கியத்தில் காண்கிறோம். கண்ணனின் வேய்ங்குழலை நம் தேசபக்த கவியாகிய பாரதியாரும் பாடியிருக்கிறார்.

வடமொழியில் ஸ்ரீமத் பாகவதத்திலே வேணுகானச் சிறப்பைக் காண்கிறோம். ஸ்ரீகிருஷ்ணகர்ணாம்ருதம் முதலான நூல்களிலும் கண்ணனின் வேய்ங்குழல் சிறப்பிக்கப் பெற்றிருப்பதைக் காணலாம்.

குழலிசை கண்ணனின் அழைப்பே தான் என்றும், இது காதில் விழுந்ததும், பக்தன் வீடு வாசல்களை மறந்து, தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களையெல்லாம் துறந்து, ஆனந்தக் களிப்புடன் அன்புக் கண்ணனை இன்புறச்செய்ய ஓடி வருகிறானும். வந்து, தன்னையே காணிக்கையாகக் கொடுக்கிறான். இதிலேதான் இருக்கிறது தொண்டனின் பேரின்பமும் என்பர்.

---

பழநி : ஸ்ரீ பழனியாண்டவர் கீழ்த்திசைக் கலைக் கல்லூரியில் சுதந்திர தின விழா 15-8-60ல் நடைபெற்றது. அன்று காலை 9-15 மணிக்கு தேவார இசைப் பள்ளி மாணவர்கள் இறைவணக்கம் பாடினார்கள். பின் கல்லூரி பிரின்சிபால் திரு. எஸ். நாராயண அய்யர் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். தேசியக் கொடியை, டிரஸ்டு போர்டு சேர்மன் திரு. பி. எஸ். கே. லட்சுமிபதிராசு, எம்.எல்.ஏ. அவர்கள் ஏற்றிவைத்து கொடியின் மகத்துவத்தைப்பற்றியும், சுதந்திர தினவிழாவின் அவசியத்தைப்பற்றியும் உரையாற்றினார்கள். கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு. மா. நடராஜன் அவர்களும் பேசியபின் திரு. வீ. வி. சி. ஆர். முருகேச முதலியார் அவர்கள் நன்றி கூறினார்கள். இவ்விழாவில் மற்ற டிரஸ்டிகளும், மற்றும் பலரும் பங்குகொண்டு சிறப்பித்தனர்.

திருப்புகலூர் : ஸ்ரீ அக்னீசுவரர் கோயிலில் 1-7-60 முதல் சிவாச்சாரியர்களுக்கு சிவாகம சித்தாந்தப் பயிற்சி கொடுக்கப்பட்டு வந்தது. அப்பயிற்சியில் தேர்ச்சிபெற்ற சிவாச்சாரியர்களுக்கு 21-8-60ல் உயர்திரு கே. எம். குருசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் சென்னை மின்சார போக்குவரத்து அமைச்சர் கனம் வி. இராமையா அவர்கள் நன்மதிப்பிதழ்கள் வழங்கினார்கள். சிவாகம பாடசாலை தலைமை ஆசிரியர் திருவாடானை திரு. ஐயாமணிசிவம் அவர்களும், திருவாரூர் கழக உயர்நிலைத் தலைமை தமிழ் ஆசிரியர் வித்வான் திரு. மு. இரத்தின தேசிகர் அவர்களும் சொற்பெருக்காற்றினார்கள்.

# கோயில்களில் திருமணங்கள் நடத்த வேண்டுகோள்

சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை அமைச்சர்

**திரு. எம். பக்தவத்சலம்** அவர்கள் விடுத்திருக்கும் அறிக்கை.

உலகத்திலுள்ள பல்வேறு நாட்டினர், பல மதத்தினர், பல வகுப்பினர் பலவகையான திருமண முறைகளைக் கையாளுகின்றனர். நம் நாட்டிலும் பலவித முறைகளில் திருமணங்கள் நடைபெறுகின்றன. பண்டைக்காலத்திலிருந்து தமிழ் நாட்டில் திருமணம் கோலாகலமாக நடைபெற்றது எனத் தெரிகிறது. கல்யாணம் என்றாலே மங்களம். திருமணக்காலங்களில் மணப்பந்தரில் புதுமணல் பரப்பியிருந்தது; விளக்கு எரிந்துகொண்டிருந்தது; மக்களைப்பெற்ற பெண்டிர் நால்வர் 'கற்புநெறியினின்றும் தவறாமல் நல்லறங்களைச் செய்து கணவன் விரும்பத்தக்க மனைவியாக வாழ்வாயாக' என்று சொல்லி மணமகளை நீராட்டினர். இதற்கு வதுவை நன் மணம் என்று பெயர். இதன் பிறகு அப்பெண்ணுக்குப் புத்தாடையுடுத்தி அவளைப்பெற்றோர் மணமகனுக்குத் தந்தனர். "பெரிதாக வாழ்தற்குரிய மனைக்கு உரியவள் ஆகுக' என்று வாழ்த்தினர். பின்னர் விருந்து நடைபெற்றது. இன்னொருவித மணத்தில் மணப்பந்தல் அழகு செய்யப்பெற்றது; எல்லோருக்கும் உணவளிக்கப்பெற்றது; கடவுள் வாழ்த்து நடைபெற்றது; மண முரசு ஒலித்தது; பெண்கள் மணமகளை நீராட்டினர்; மணமக்களைப் பந்தலில் வீற்றிருக்கச் செய்தனர்; மணமகளைக் கொடுத்தற்குரியவர் மணமகனிடம் வாழ்த்திக் கொடுத்தனர்.

தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் "வதுவைக்கு ஏற்ற கரணங்கள் நிகழ்ந்த பின்னர், சுற்றம் சூழ, தமர் அறிய மணமக்கள் மணவறை புக்கனர்" என்றும், "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்றும் கூறியுள்ளார். இதனால், பழங் காலத்தில் சடங்குகள் அதிகமில்லாமல் எளிய முறையில் மணம் நடந்ததென்றும், அதில் சில குறை பாடுகள் நேர்ந்தமையின் பெரியோர் சில சடங்குகளை வகுத்தனர் என்றும் தெரிகிறது. ஆனால் கடவுள் வழிபாடு திருமணம் நடைபெறுவதற்கு முன் நிகழ்ந்ததென்பது தெளிவு.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் கோவலன் கண்ணகி திருமணம் "மாமுது பார்ப்பான் மறை வழி காட்டிடத்தீவலம் செய்து" நடைபெற்றதாகத் தெரிகிறது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தர் திருமணத்தில் பெண்ணின் தந்தையார் பெண்ணைத் தாரைவார்த்துக் கொடுத்தார் என்றும், மணமக்கள் பொரியிட்டுத் தீவலம் வந்தனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது. கி. பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருமணம் திருக்கோயிலில் நடைபெற்றது. ஆண்டாள் அம்மையார் தம் கனவில் தான் கண்ணனை மணந்ததாகவும், அதில் அம்மி மிதித்தல், மஞ்சனநீர் ஆடல், காப்பு நாண் கட்டல் முதலியவை நடந்ததாகவும் பாடியுள்ளார். கம்பர் இராமாயணத்தில் அருந்ததிகாணல், மண மக்கள் பெரியோரைப் பணிதல் முதலியவற்றைக் கூறியிருக்கிறார்.

பண்டைக்காலத்தில் திருமணம் மிகவும் எளிய முறையில் நடந்ததென்றும், கடவுள் வழிபாட்டுடனும் பெரியோர் ஆசியுடனும் நடந்ததென்றும், சடங்குகள் அதிகம் இல்லை என்றும் தெரிகிறது.

பிற்காலத்தில் மக்கள் தங்கள் செல்வ நிலைமைக்குத் தக்கவாறு மூன்று நாட்கள், ஐந்து நாட்கள், ஏழு நாட்கள் என்று மணவிழாவை நடத்தத் தொடங்கினர். ஒவ்வொரு நாளும் பலவகைச் சடங்குகளும் நடைபெற்றன. இசையரங்குகள், நாட்டியங்கள், ஊர்வலங்கள், வாணவேடிக்கைகள், விருந்துகள் முதலிய நிகழ்ச்சிகளும் அதிகரித்து அவைகளுக்குச் செலவிடும் தொகையும் பெருகி வரலாயிற்று. கொஞ்சகாலமாக அதிக நாட்கள் மணம் நடத்துவதும், ஊர்வலம், வாணவேடிக்கைகள் முதலியனவும் குறைந்து வருகின்றன. என்றாலும் இன்னும் அவசியமில்லாத பல செலவினங்கள் இருந்துகொண்டே வருகின்றன. ஒருநாள் கல்யாணமானாலும் தரத்துக்கு மிஞ்சி பல குடும்பங்களில் செலவுகள் செய்யப் படுகின்றன.

நம்முடைய நாட்டு மக்களின் நிதி நிலைமையை எண்ணுங்கால் திருமணத்திற்காகத் தற்போது செலவு செய்யும் தொகை அதிகமென்றும், அப்படிச் செய்யவேண்டியதற்கு அவசியமில்லை யென்றும் யாவரும் ஒப்புக்கொள்வர் குடும்ப கௌரவத்திற்காகவும், முன்னே நடந்ததுபோல் ஆடம்பரமாகச் செலவு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தினாலும், நடுத்தர வகுப்பினர் பலர் தங்கள் சக்திக்குமேற்

பட்டும், கடன்வாங்கியும் திருமணங்களை நடத்துகின்றனர். பழங்காலத்தில் நடந்த திருமண முறைகளைக் காண, திருமணத்தில் அதிகமான சடங்குகள் முதலியவற்றிலும் ஆடம்பரங்களிலும் பொருளைச் செல விடுதல் பொருத்தமில்லை என்று விளங்கும். சில காலமாகவே இதையுணர்ந்த மக்கள் தங்கள் திரு மணங்களைக் கோயில்களில் நடத்திவரத் தொடங்கினர். மதுரை மீனுட்சியம்மன் கோயில், திருப்பரங் குன்றம், பழநி, கூடலழகர் கோயில், அழகர் கோயில், ஒப்பிலியப்பன் கோயில், சுவாமிமலை, சேலம் சுகவ னேசுவரர் கோயில், காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோயில், சென்னை வடபழநி முருகன் கோயில், திருத்தணி முருகன் கோயில், சோழிங்கர் வரதராஜசாமி கோயில், திருப்பதி வெங்கடேசப் பெருமாள் கோயில், திரு நீர்மலைக் கோயில், தென்காசி இலஞ்சிக்குமாரர் கோயில், குணசீலம், கீழ்ப்பழுவூர் ஆலந்துறை ஈசுவரர் கோயில், மணப்பாறை மாமுண்டி ஆண்டவர் கோயில், விராலிமலை முருகன் கோயில், சமயபுரம் மாரி யம்மன் கோயில், உதகை சுப்பிரமணிய சுவாமி கோயில், திருக்குற்றாலம், சங்கரன் கோயில் குறுக்குத் துறை, திருச்செந்தூர், பாபநாசம், இளையாத்தங்குடி, குன்றக்குடி, உத்தமர் கோயில், ஸ்ரீரங்கம், சிங்கப் பெருமாள் கோயில், திருமணஞ்சேரி, திருவேள்விக்குடி, வேதாரண்யம், திருக்கடையூர், பிச்சக்கட்டளை மண்டபம், புலிவலம், தஞ்சாவூர் மாரியம்மன் கோயில், வைத்தீசுரன் கோயில், திருநாகேசுரம் நாகநாத சுவாமி கோயில் இன்னும் பல கோயில்களில் இறைவன் சந்நிதியில் இப்போதும் விவாகங்கள் செய்து வருகின்றனர். வீட்டில் நடக்கும் கலியாணங்களில் இப்போது மணப்பந்தரில் மஞ்சளால் பிள்ளையார் பிடித்துவைத்து அவரை அதில் ஆவாகனம் செய்து, தீ வளர்த்துத் தாலி கட்டும் முறை நடைபெறு கின்றது. கடவுளை மந்திரங்களால் ஆவாகனம் செய்து கலியாணம் செய்வதைவிட ஏற்கெனவே பன் னெடுங்காலமாகப் பூஜையிலிருக்கும் சாந்நித்தியமுடைய, சக்திமிக்க இறைவன் திருமுன்னர் கலியா ணங்கள் நடைபெறுவது மிகவும் மேன்மையானதென்று யாவரும் ஒப்புக்கொள்வர். அப்படிக் கலியா ணங்கள் நடைபெறுவதால் மணமக்களுக்கு இறைவனுடைய திருவருள் பூரணமாகக் கிடைப்பதுடன். திருமணச் செலவும் குறையும். இசையரங்கு, பெருவிருந்து, ஊர்வலம், வாணவேடிக்கைகள், கேளிக் கைகள் முதலிய ஆடம்பரச் செலவுகளும் இல்லாமற்போகும். மிகவும் சிக்கனமான முறையில் விவாகங் களைக் கோயில்களில் நடத்தி விடலாம். கிறிஸ்தவ சமயத்தினர் தங்கள் கோயிலில் எளிய முறையில் திருமணம் செய்துகொள்வதைக் காண்கிறோம். இது நாம் பின்பற்றவேண்டிய ஒரு நற்பழக்கம்.

நம்முடைய நாட்டில் கோயில் இல்லாத ஊர் இல்லை. அந்தக் கோயில்களில் மக்கள் திரு மணங்களைச் செய்துகொள்ள முற்பட்டால் வீண் செலவுகள் இல்லாமல் போவதுடன் கடவுள் முன் னிலையில் நடந்ததால் இறைவன்றிருவருளையும் பூரணமாக அடையலாம். கோயில்களில் ஏராளமான திருமணங்கள் நடைபெறும் என்றால் அறங்காவலர்களும் அதற்குவேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பார்கள். கோயிலில் நடைபெறும் திருமணங்களைப் பதிவு செய்துகொள்ளவும் ஏற்பாடு செய்யலாம். கோயில்களுக்கு வருமானம் குறைந்துகொண்டுவரும் இந்தக் காலத்தில் கோயில்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் வருவாயும் அதிகரிக்கும்.

கோயிலில் நடக்கும் திருமணங்களுக்கு அதிகச் சடங்குகளும் தேவையில்லை. மணமகனும் மணமகளும் நீராடிப் புத்தாடை புனைந்து, தத்தம் உறவினருடன் கோயிலுக்குச் செல்லலாம். இருவரும் இறைவனை வழிபாடு செய்த பின்னர், இறைவன் திருவடிகளில் வைத்தெடுத்த தாலியை மணமகன் மண மகளுக்கு அணியலாம். கோயில் மேளமும் சொற்பச்செலவில் கிடைக்கும். கோயில் குருக்களும் ஏனைய பெரியோர்களும் அவர்களை வாழ்த்த, வெற்றிலைபாக்கு வழங்கி, விருந்தளிக்கலாம். இதுவே சிக்கனமான, தூய்மையான நல்லமுறை. இதைப் பொதுமக்கள் கையாளத் தொடங்கினால், கலியா ணத்தில் ஏற்படும் ஆடம்பர வீண் செலவுகளும் அதனால் கடன்கள் வாங்கித் துன்பப்படுவதும் இல்லா மற்போகும். இந்த முறை சமூக முன்னேற்றத்துக்கு வழி செய்வதுடன், நாட்டின் நலத்திற்கும், நடுத்தர வகுப்பினர் பொருளாதார நிலை சீர்படவும் உறுதுணை செய்யும். பண்டை எளிய மணமுறையை மீண்டும் நடைமுறையில் கொண்டுவந்து மக்கள் நல்வாழ்வு வாழக் கூடுமானவரை வசதியுள்ள எல்லாக் கோயில்களிலும் திருமணங்கள் செய்துகொள்ளத் தகுதியுள்ள கல்யாண மண்டபங்களும், சமையல் செய்துகொண்டு விருந்தளிக்க வசதிகளும் செய்து கொடுக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் விருப்ப மும், கொள்கையுமாகும். கூடுமானால் விருந்துக்கு வேண்டிய சித்திரான்னங்களும் கோயில் பிரசாத மாகவே செய்து கொடுத்தலும் நன்றே. பல மக்களுக்குப் பயன்படும் இந்நல்ல திட்டத்தை ஆலய தர்ம கர்த்தர்களும், நிர்வாக அதிகாரிகளும் அமுலுக்குக் கொண்டுவந்து மக்களுடைய போற்றுதலுக்கும் பாராட்டுக்கும் உரியவர்களாவதுடன் இறைவன் திருவருளையும் பெற்று உய்வார்களாக!

# விநாயகர் திருவிளையாடல்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**கணக்குப்பிள்ளையாகக் கடமை செய்தது:** முதலாம் இராஜேந்திரசோழன் கங்கை கொண்ட சோழபுரம் என்ற நகரையமைத்து அதில் ஒருசிவன் கோயிலையும் எடுப்பித்தான். தஞ்சை இராஜராஜேச்சுரம் போலப் பெரிய தாகக் கட்டினுன். கட்டி முடித்ததும் ஒரு நாள் தன் அமைச்சரையழைத்து, கோயில் கட்ட எவ்வளவு தொகை செலவாயிற்று என்று சோழ அரசன் கேட்டான். அர சாங்கக் கருவூலத்திலிருந்து ஏராளமான பணம் எடுத்துச் செலவு செய்யப்பட்டிருந்த மையின் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. மறுநாள் சொல்வதாக மன்னனிடம் கூறிச் சென்றார். விடிந்ததும் அரசனிடம் எப்படிக் கணக்குச் சொல்வது என்ற ஏக்கத்துடன் தன் வழிபடு கடவுளாகிய விநாயகரை நினைத் தார். பொழுது புலர்ந்தது. அமைச்சரிடம் வேலை பார்க்கும் கருவூலக் கணக்கப்பிள்ளை வந்தார். கோயில் கட்டிடச் செலவுக் கணக்கு களுடன் வந்திருப்பதாகச் சொல்ல இருவரும் அரசனிடம் சென்றனர். கோயில் கட்டிடச் செலவுக் கணக்கை எடுத்துக் கணக்கப்பிள் ளைப்படிக்கத் தொடங்கினர். "எத்து நூல் எண்ணுயிரம் பொன்" என்றார். "போதும்; நிறுத்தும்" என்றான் சோழப் பேரரசன். பெருங்கற்களை உடைப்பதற்கு முன் கல்தச் சர்கள் சாயம் நனைத்த கயிறுகளைக்கொண்டு கற்களின்மேல் அடையாளம் செய்து கொள் வார்கள். அந்தக் கயிற்றுக்கு எத்துநூல் என்று பெயர். எண்ணுயிரம் பொன்னுக்கு எத்து நூலே வாங்கப்பட்டது என்றால் கோயில் கட்டிமுடிக்க எவ்வளவோ பல இலட்சம் பொன்கள் ஆகியிருக்கவேண்டும் என்று ஊகித்த மன்னன் போதும் கணக்குப் படித்தது என்று நிறுத்தச் சொன்னுன். அமைச்சரின் மனக்கவலையும் தீர்ந்தது. அப் படிக் கணக்கராக வந்தவர் விநாயகப் பெரு மான்தான். இப்போது கங்கைகொண்ட சோழபுரத்தில் கணக்கு விநாயகர் என்ற பேருடன் விளங்குகிறார்.

**படைத்த உணவை உண்டது:** திருநாரை யூரில் பொல்லாப் பிள்ளையாரைப் பூசனைபுரி யும் அந்தணர் வேற்றூர் செல்ல நேர்ந்தது. தன் மகனை அழைத்து வழக்கப்படிப் பூசை யைச் செய்யச் சொல்லிச் சென்றார். மறைச் சிறுவனும் நைவேத்தியத்துடன் சென்று பிள் ளையார் முன் படைத்து ஆராதனை செய்து முடித்தான். விநாயகர் அமுதை அருந்துவார் என்று நினைத்துக் காத்திருந்தான் இளைஞன், ஒன்றும் நடைபெறவில்லை. உணவை உண்ணுவிட்டால் மண்டையை மோதிக் கொள்வதாகச் சொல்லி முறையிட்டான். அவ் வளவில் ஆனைமுகன் துதிக்கையால் அமுதை அருந்தி, சிறுவனின் விருப்பத்தை முடித்தார். அந்த பிராமணக் குழந்தையே நம்பியாண்டார் நம்பி என்ற திருமுறை ஆசிரியர்.

**கண் கொடுத்தது:** திருவாசகத்தை அரு ளிய மணிவாசகப் பெருமான் அவதரித்தது திருவாதவூர் என்ற தலம். மாணிக்கவாசகரின் தாய்தந்தையர்க்கு வயது முதிர்ச்சியால் கண் ணொளி மழுங்கிற்று. அவ்வூரிலுள்ள விநாய கரை நாள்தோறும் தவருமல் வழிபட்டனர். கணபதியருளால் மீண்டும் கண்பார்வை பெற்றனர். அவருக்கு முழிச்சிப் பிள்ளையார் என்று பெயர். திருவாதவூர் ஏரிக்கரையருகே அவருடைய கோயில் இருக்கிறது.

மாயூரம் என வழங்கும் திருமயிலாடு துறையில் கண் ஒளி இழந்த ஒருவர் ஐங் கரனை வழிபட்டுக் கண் பார்வையடைந்தார். ஆனைமுகனுக்கு ஒரு கோயிலும் கட்டப் பட்டது. அதற்கு, கண்கொடுத்த பிள்ளையார் கோயில் என்று இன்றும் பெயர் வழங்கி வரு கிறது.

விநாயகரின் திருவிளையாடல் களைப் பற்றி நாட்டில் இன்னும் பல கதைகள் வழங்குகின்றன. முக்கியமான சிலவற்றை மட்டும் மேலே கண்டோம்.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற் பிறந்த<br>
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல<br>
குணமதிகமாம் அருணைக் கோபுரத் துண்மேவும்<br>
கணபதியைக் கைதொழு தக்கால்.

# நாலாயிரப் பிரபந்தமும் : : : : : : கல்லெழுத்துக்களும்

[திரு. K. M. வெங்கடராமையா, M.A., B.O.L., திருப்பனந்தாள்

## முன்னுரை

ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிய பிரபந்தங்களை அறியாதார் இரார்; இவற்றை ஸ்ரீவைஷ்ணவர்கள் நாடோறும் விண்ணகரங்களிற் பத்திமையோடு ஓதுதல் இந்நாளில் எங்கும் கேட்கப்பெறுகின்றது. இந்நாள் போல் முன்னாளிலும் திருமால் கோயில்களில் பிரபந்தம் ஓதுவதற்கு அரசர்கள் நிபந்தம் அளித்திருந்தனர். மக்களும் அரசியல் அலுவலரும் வைணவத்தில் பற்றுடையராய் வாழ்ந்து வந்தமையும் கல்லெழுத்துக்கள் பகர்கின்றன. இவற்றுள் சில சிறந்த செய்திகளைக் குறிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திருநெடுந்தாண்டகம்

இது திருமங்கையாழ்வார் அருளியதாகும். திருமங்கையாழ்வார் திருவாலி நகரத்தில் தோன்றியவர்; திருநறையூர் நம்பியிடம் திருவிலச்சினை பெற்றுத் திருமாலடிமைத் திறம் பூண்டவர். இவர் நாலுகவிப் பெருமாள் எனப்பெற்றார். இவர் இயற்றியருளியவை: சிறியதிருமடல், பெரியதிருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, பெரியதிருமொழி என்பன. உபதேசரத்னமாலை என்ற நூலுள், "மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர் கோன் ஆறங்கம் கூற" என்று காணப்பெறுகிறது. இதனுல் நம்மாழ்வார் அருளியவற்றை மறையாகவும், திருமங்கை மன்னனருளியவற்றை ஆறங்கம் ஆகவும் முன்னையோர் கருதினர் என்றறியலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமங்கையாழ்வாரது திருப்பாடல்களுள் திருநெடுந்தாண்டகம் விண்ணப்பம் செய்வது குறித்துத் திருக்கோவலூர்க் கல்லெழுத்தொன்று (126 of 1900; S. I. I. VII 139) குறிப்பிடுகின்றது. திருக்கோவலூர்த் திருவிடைகழி ஆழ்வார்க்குத் திருவோணம் திருவேட்டை நாளில் நைவேத்தியத்திற்குத் திருக்கோவலூர்ச் சபையினர் நிலம் விற்றனர். இந்தத் திட்டத்தில் திருநெடுந்தாண்டகம் ஓதுவதற்கு இடம் கொடுக்கப்பெற்றது. "இத்திருவோலக்கத்திலே திருநெடுந்தாண்டகம் விண்ணப்பம் செய்வார்க்கு ஒருகாசு இடுவதாகவும்" என்பது கல்லெழுத்து வாசகம். இத் தருமத்தை வைகாஸநர்* நடத்த வேண்டும் என்றும் இக்கல்லெழுத்தில் உள்ளது.

## திருவாய்மொழி

இதனை அருளிச் செய்தவர் நம்மாழ்வார் ஆவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநகரி எனப்பெறும் திருக்குருகூரில் பிறந்தவர்; அவ்வூர்த் திருமால் கோயிலில் வடபுறத்துள்ள திருப்புளியின் கீழ் யோகிருந்து திருமால் திருவருளை நிரம்பப் பெற்றவர். இவருடைய பிரபந்தங்கள் திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்பன. இவை நான்கும், நான்கு வேதங்கள் என்று போற்றப்படும் பெருமையுடையனவாகும். இவற்றுள் திருவாய்மொழி விண்ணப்பம் செய்விப்பதற்குச் சோழமன்னர் காலத்து பல திருப்பதிகளில் நிவந்தங்கள் விடப்பட்டன என்று அறியப்படுகின்றது.

முதல் இராசேந்திர சோழனுடைய 19-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றுன்று உத்தரமேரூரில் உள்ளது. (176 of 1923). உத்திரமேரூரில் மஞ்சிக்கம்† ஆன பூமி, 2240 குழி, ஊர்ச் சபையினர் கோயிலுக்கு இறையிலியாக அளித்தனர். இந்நில வருமானத்தை நித்திய பூசைக்கும், பல சிறப்

---

* வைகாஸனர்—வைகானசர் — வைகானசம் என்னும் வைணவ ஆகமத்தின்படி ஒழுகுவர்.

† மஞ்சிக்கம்—தரிசுநிலம்.

புப் பூசைகளுக்கும் செலவு செய்யவேண்டும் என்றும், இன்னும் 1470 குழி நிலத்தினின்று வரும் வருவாயைக்கொண்டு நாடோறும் இரண்டு காலங்களிலும் மூவர் திருவாய் மொழி விண்ணம்செய்ய வேண்டும் என்றும் ஏற்பாடு செய்தார்கள்.

இனி இவ்விராசேந்திரனுடைய 26-ம் ஆட்சியாண்டில் உத்தரமேரூரிலேயே இராசேந்திர சோழ விண்ணகரத்து வெள்ளைமூர்த்தி ஆழ்வார்க்கு 1520 குழி நிலம்விற்று இறையிலி யாக்கப்பெற்றது; நாடோறும் 7 குறுணி நெல் மூவர் திருவாய்மொழி விண்ணப்பம் செய்யக் கொடுக்கப்பெற்றது. இங்ஙனம் ஒரு சாஸனம் (194 of 1923) குறிப்பிடுகிறது.

58343

இனி இவ் இராசேந்திர சோழனின் (ஆட்சியாண்டு குறிப்பிடப் பெருத) எண்ணுயிரம் என்னும் ஊர்க்கல்வெட்டொன்று (333 of 1917) திருவாய்மொழி விண்ணப்பித்தற்கும், வேதம் வியாகரணம் மீமாம்சை ஆகியவற்றைக் கற்பிக்கும் கல்வி நிலயத்தை நடத்துவதற்குமாக, 46 வேலி நிலம், இராஜராஜ விண்ணகர்க்கு அளித்த செய்தியைக் கூறுகின்றது.

மேலே கூறப்பெற்ற இராசேந்திரன் மகனுகிய முதல் இராசாதிராசனது 30-ம் ஆண்டுக் கல்லெழுத்து (176 of 1919) திருபுவனியில் உள்ளது. உம்பளநாட்டு மூவேந்த வேளான் என்பவர், இராசேந்திரன் திருநாமத்தால் எடுப்பித்த மண்டபத்தில் அவ்வூர்ச் சபையினர் கூடினர்; சேனுபதி இராசேந்திரசோழ மாவலி வாணராஜர் சில தருமங்களை நடத்துவதற்கு அளித்த 72 வேலி நிலத்தை ஏற்றுக்கொண்டனர். நிலவருவாய் 12,000 கலம்; இதில் திருவிழாக்கள் நடத்தவும், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உணவு அளிக்கவும், திருவாய்மொழி விண்ணப்பம் செய்யவும் 2475 கலம் நெல் பயன்படுத்தப் பெற்றது; எஞ்சிய நெல் ஒருபெரிய கல்லூரி நடத்தப் பயன்படுத்தினர்.

(தொடரும்.)

---

காஞ்சிபுரம் : கச்சிக்குமரக்கோட்டத்தில் 16-8-60ல் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.,எல்.டி, அவர்கள் தலைமையில் தேவஸ்தானத்தார் ஏற்பாட்டில் "கந்தபுராணத்தொடர் சொற்பொழிவு விழா" தொடங்கியது. 500-க்கு மேற்பட்ட பிரமுகர்கள் வந்திருந்தனர். தலைவர் சிறந்ததொரு தொடக்க விழாச் சொற்பொழிவு நிகழ்த்தியபின் சொற்பொழிவாளர் புலவர் மாமணி திரு. வீ. திருஞானசம்பந்த முதலியாரவர்களை விரிவுரை நிகழ்த்தும்படி கேட்டுக்கொண்டார். பின் அவர் கந்தபுராண விரிவுரையை ஆரம்பித்து முடித்தனர். செவ்வாய்க்கிழமைதோறும் நடத்த ஏற்பாடு செய்துள்ளனர். தர்மகர்த்தா திரு. எஸ். குப்புசாமி முதலியார் நன்றி கூறினுர்.

தூத்துக்குடி : மேலூர் ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயிலில் 9-8-60ல் முளைக்கொட்டுத் திருவிழா சிறந்த முறையில் அலங்கார ஆராதனையுடன் நடைபெற்றது அன்றிரவு அம்பாள் முளைப்பாரியோடு சப்பரத்தில் மங்கல வாத்தியத்துடன் இரத வீதியைச் சுற்றி கோயிலில் வந்திறங்கி விசேஷ வழிபாட்டுடன் வைபவம் முடிவுற்றது:

---

# இறைபணியாளர்கள் நியமனமும் மாற்றமும்

திரு. S. இராமசாமி, குமரகுருபரசுவாமி கோயில், அம்மாபேட்டை, சேலம், மாற்றப்பட்டு புத்துமாரியம்மன்கோயில் குறிஞ்சிபாடி, சுப்பிரமணிய சுவாமிகோயில் விழாபள்ளம், சத்தியஞான சபை, வடலூர் முதலிய குழுக் கோயில்களுக்கு இறைபணியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

Printed at Paari Achakam, 127, Broadway Madras-1
Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-6

உ

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த

## திருப்பள்ளியெழுச்சி

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே

[வீணையும் யாழும் வாசிப்போர் ஒருபுறம் நிற்கின்றனர்; மந்திரங்களோடு துதிப்பாடல்களை ஓதுவோர் மற்றொரு பக்கம் உள்ளனர்; மலர்மாலை ஏந்திய கையினர் ஒரு சார் இருக்கின்றனர்; தொழுபவர், அழுபவர், வாடி அசைபவர் வேறொரு பக்கம் இருக்கின்றனர்; சிரமேல்கரம் குவித்தோர் ஒருபால் நிற்கின்றனர். திருப்பெருந்துறை வீற்றிருக்கும் சிவபெருமானே! அடியேனையும் ஆட்கொண்டு பேரருள் புரியும் எம்பெருமானே! எழுந்தருள்புரிவாயாக.]

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

## திருப்பாவை

அன்றுஇவ் வுலகம் அளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா எடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்று உன்சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்.

[அக்காலத்து இந்த உலகத்தை அளந்த நினது திருவடிகள் போற்றி; தென்னிலங்கை அரக்கரை அழித்த வலிமை வாழ்க; சகடாசுரனைக் காலாலுதைத்த உனது புகழுக்கு மங்களம்; கன்றின் வடிவாய் வந்த வத்சாசுரனை எறிதடியாகக்கொண்டு விளங்கனி உருவாய் இருந்த கபித்தாசுரனைக் கொன்றவனே உன் திருவடிகள் போற்றி; கோவர்த்தனமலையைக் குடையாகத் தூக்கிய உன் தண்ணளிக்கு மங்களம்; பகைவரை யழிக்கின்ற உன் கையிலுள்ளவேல் வாழ்க; இவ்வாறாக உன் வீரச் செயல்களையே புகழ்ந்து இப்போது நாங்கள் வந்திருக்கிறோம்; இரங்கியருள்வாயாக.]

## அடியவர் திருநட்சத்திரங்கள்

சார்வரி—புரட்டாசி

14௳—ஏனாதிநாத நாயனார்
17௳—நரசிங்கமுனையரையர் நாயனார்
21௳—உருத்திரபசுபதி நாயனார்
24௳—திருநாளைப்போவார் நாயனார்




பழனிமலை




திருவாவினன்குடி கோயில்

PAARI ACHAKAM, MADRAS-1.